
அறிஞர் பி.எல்.சாமியின்

ஆய்வுக் கட்டுரைகள்



அறிஞர் பி.எல். சாமியின்

ஆய்வுக் கட்டுரைகள்

தொகுப்பு:
புலவர் ந. வேங்கடேசன்
வில்லியனூர்

சேகர் பதிப்பகம்
66/1, பெரியார் தெரு
எம்.ஜி.ஆர். நகர்
சென்னை – 600 078

முதற்பதிப்பு : டிசம்பர். 2002

விலை : ரூ. 45.

ஒளியச்சு : குரு கம்ப்யூட்டர்ஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 24.

உள்ளே...

பி.எல். சாமி அவர்களின் படைப்புகள்
(1967-2002)

1. மே, 1967 – சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்
2. ஆகஸ்ட், 1970 – சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
3. செப்டம்பர், 1975 – தாய்த் தெய்வ வழிபாடு
4. மே, 1978 – சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்
5. மே, 1976 – சங்க நூல்களில் மீன்கள்
6. டிசம்பர், 1980 – சங்க நூல்களில் மணிகள்
7. டிசம்பர், 1980 - Common Names and Myths of the Flora and Fauna in Dravidian and indo - Aryan :Languages.
8. மே, 1981 – இலக்கியத்தில் அறிவியல்
9. டிசம்பர், 1981 – சங்க இலக்கியத்தில் விந்தைப் பூச்சி
10. டிசம்பர்,1981 – சங்க இல்க்கியத்தில் அறிவியற் கலை
11. டிசம்பர், 1982 – இலக்கிய ஆய்வு
12. டிசம்பர், 1983 – தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு
13. டிசம்பர், 1984 – தமிழ் நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்
14. ஏப்ரல், 1991 – சங்க நூல்களில் முருகன்
15. டிசம்பர், 1991 – சங்க நூல்களில் செடி கொடிகள்
16. டிசம்பர், 1992 – சங்க நூல்களில் மரங்கள்
17. டிசம்பர், 1993 – சங்க நூல்களில் உயிரினங்கள்
18. டிசம்பர், 2002 – அறிஞர் பி.எல். சாமியின் ஆய்வுக் கட்டுரைகள்

எண் : 7, எண் : 15 – இரு நூல்களுக்கும் முகவுரை எழுதவில்லை

பதிப்புரை

வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பல. அவற்றில் சில வரலாறாகின்றன.

மதிப்பிற்குரிய புதுவை. பி.எல். சாமி அவர்கள் நல்ல சிந்தனையாளர். நிறைந்த கல்வியாளர். சிறந்த ஆய்வாளர்.

பழந்தமிழ் நூல்களின் பயன் அறிந்தவர்; பயின்று பயின்று நுகர்ந்தவர். ஆழ்ந்து ஆய்ந்தவர்; அறிந்தவர். நுட்பம் அளந்தவர்.

தமிழரின் தலையாய செல்வம் தமிழ்மொழி. தமிழ்மொழியின் சிறந்த நல்லணிகள் சங்கநூல்கள். தமிழ்ப் பெருமக்கள் பழங்காலத்தில் படைத்து வைத்துச் சென்ற பண்பாட்டுப் பெட்டகங்களே தமிழ்நூல்கள்!

ஆங்கில மொழியின் அளப்பரும் ஆய்வுப் படைப்புகளில் ஈடுபட்டவர் பி.எல். சாமி.

அறிவியல் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளைத் தேடித் தேடிப் படித்துப் பயன் கண்டவர்.

பழந்தமிழ் இலக்கியங்களின் நுணுக்கமான அறிவியலை, வாழ்வியலை, பண்பாட்டினை, தமிழ்க் கலைகளை ஆழ்ந்து அறிந்தவர் சாமி அவர்கள். ஆங்கிலத்தின் வழியில் வெளிப்பட்ட அரிய கண்டு பிடிப்புகளையும் ஆய்வுகளையும் ஆர்வத்தோடு, ஊக்கத்தோடு படித்தறிந்தார்.

சங்க நூல்களில் உள்ளவற்றுக்குச் சில அய்யங்களுக்கு ஆங்கிலப் புத்தாய்வுகளில் விடை தேடினார்.

ஒப்பாய்வு நோக்கில் ஓயாது உழைத்தார்.

திராவிட மொழிகளிலும் பிற இந்திய மொழி களிலும் காணப்படும் சான்றுகளைத் தேடிக் காண்பதில் இவர் பெரிதும் உழைத்தார்.

பழந்தமிழர் வாழ்வியலை, பண்பாட்டினை, அறிவியலை, மனிதநேய உயர்வை, இக்காலத் தமிழர்க்கு எடுத்து விளக்க அவர் முனைப்போடு பாடுபட்டார். அயராமல் சிந்தித்தார்.

நம்மில் சிலர் புத்தகங்களை வைத்தே ஆய்வு செய்வர். கண்கூடான சான்றுகளைத் தேடுவதில் அதிகம் முனைப்புக் கொள்வோர் ஒருசிலரேயாவர்.

உரிய இடங்களுக்கு - ஊர்கள், காடுகள், மலைகள், ஆறு, கடல் எனச் சான்றுகள் நிறைந்துள்ள இடங்களுக்குக் களஆய்வுக்குப் பயணம் செய்ய எல்லோர்க்கும் இயலாது. விருப்பம் மட்டும் போதாதே!

பல இன்னல்கள், தடைகள், துயரங்கள் ஏற்றுக் கள ஆய்வுகள் செய்து அரிய சான்றுகளைக் கண்டறிந்து, ஒப்பாய்வு நடத்தி உண்மைகளைச் சலித்தெடுத்து உறுதியுடன் வெளிப்படுத்தியவர் சாமி அவர்கள்.

உண்மை நோக்கு, ஊடுருவும் ஆய்வுப் பார்வை, உயர்ந்த எண்ணம், உழைப்பு, ஊக்கம் இவற்றின் மொத்த உருவம் பி.எல். சாமி அவர்கள்.

தாவரங்கள், உயிரினங்கள், பழங்காலத்துப் புதை பொருள்கள், பழமையான பலவகைப் பொருள்கள் பற்றி ஆய்ந்தறியும் ஈடுபாடும் ஊக்கமும் இயல்பாகவே அமையப் பெற்றவர் இவர்.

நிகழ்காலத்தாரும் வருங்காலத்தவரும் தமிழர்தம் சிறப்புகளை நன்கு அறிந்திடவேண்டும்; புதிய ஆர்வமும் எழுச்சியும் கொண்டு தமிழினம் முன்னேறிப் பயன் வளர்க்க வேண்டும் எனும் பேராவல் மிக்கவர் அறிஞர் சாமி.

இத்தகைய பேருள்ளமும் பேருழைப்பும் கொண்டதால் இவர் அறிஞர் எனத் தக்கவர். ஆய்வுலகில் அரியதோர் இடம் பெற்றவர். இதனை நம் தமிழ்மக்கள் உணர வேண்டும். அவர்போல் பலரும் ஆய்வுப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடவேண்டும். பல அரிய உண்மைகள், உணர்வுகள் நம் தமிழர்க்குக் கிடைத்தாக வேண்டும்.

சாமியவர்களின் சாதனைகளைத் தமிழ் ஆர்வலர் பலர் அறிந்துள்ளனர். அதுவரையில் மகிழத் தக்கதே.

கல்வி கற்றோர், இளைஞர்தம் பார்வையில் அரிய நூல்கள் பயன்பட வேண்டும்.

பள்ளி நூலகங்கள் உயிர் பெற்றால்... உணர்வு கொண்டால்... கண் திறந்தால்... அசைந்து செயல்பட்டால்...

மனிதவள மேம்பாட்டுக்கு அயராதுழைத்த அறிய செயல்வீரர் சி. சுப்பிரமணியம் அவர்கள், நம்மிடையே பெரும் பெரும் வேளாண் சாதனைகளை நிகழ்த்திப்

பாடுபட்டு வரும் அறிஞர் எம்.எஸ். சாமிநாதன் அவர்கள், கல்வியாளர் வா.செ. குழந்தைசாமி, வானியல் அறிவியல் சாதனையாளர் அப்துல் கலாம் அவர்கள். இத்தகையோர் மேலும் பலர் உள்ளனர். நடைமுறை வாழ்வியலுக்குரிய இத்தகு செயற்கரிய செய்து வரும் சிறந்தோர்களைப் பள்ளிப் பாடங்களில் இடம் பெறச் செய்தல் உடனடித் தேவை.

கல்வி பயிலும் மாணவர் மனம் மலர்ச்சியடையும் நிலை தோன்றும். தேர்வு, மதிப்பெண் எனும் மாயையில் கிடப்போர், மதி வளர்ச்சியும் மனநலமும் பெற்றுச் சிறந்த, முழுமை பெற்ற மனிதராக வளரலாம்.

இந்நிலை நம் தமிழகத்தில் தோன்றுமா? நூலக வகுப்புகள், நூலகர் பலர் பணிபுரியும் நிலை, மாணவர் மனம் விரும்பிப் புதுவெள்ளம் போல் நூலகங்களில் பாய்ந்து புகும் காலமும் நிலைமையும் உருவாகுமா?... உருவாக்குவார்களா? ஆசிரியப் பெற்றோர்கள் விழிப்படைய வேண்டும்; விரைந்து செயல்படுத்த முனைய வேண்டும். பள்ளியே நாற்றங்கால்.

சுறுசுறுப்பு பெறவேண்டிய காலம். சுடர் விழி திறக்க வேண்டிய நேரம். விழுமின்! எழுமின்!

இதுபற்றிய கனவுகளில் கருகுவோர் பலர். உருப்படியாய் நடைமுறைப்படுத்த முனைபவர் யாரோ?

நமது கடவுள்களைப் போலவே கற்றோரும் பதவியில் உள்ளோரும் இதுபற்றிக் கண்டு கொள்ளாமலேயே, கருதாமலேயே காலங் கழிக்கின்றனர்.

புதிய எண்ணங்களால் பொங்கும் செயல் வீரர்கள் புதுமை புரியும் நாள் வருமோ?

பிற நாடுகளில் உள்ளதுபோல் நம் நாட்டுப் பள்ளிகள் எப்பொழுது அறிவுப் பண்ணையாய் மாறும்? புதிய தோற்றத்தில் புதுமையுடன் எப்பொழுது பொலியும்?

ஏழைநாடு இந்தியா என்பதற்கு நடைபாதைகளும் குடிசைகள் மட்டுமா சான்றுகள்? நமது பள்ளிகளும் நல்ல சான்றுகளே!

பள்ளிகள் கோயில்களாகும் காலம் நம் நாட்டிற்கு வாய்க்குமா?

விழாக்கள் என்ன, வேண்டுதலும் குடமுழுக்குகளும் என்ன! விதவிதமான வைர நகைகள் என்ன, மற்றும் பலப்பல... என்ன...! என்ன...!

எண்ணிச் சொல்ல முடியாத செலவுகள்; மனித உழைப்பு வீணடிப்பு! காலத்தை வீணடிக்கும் வெட்கமற்ற வாழ்க்கை முறைகள்!

சுயநலப் பேராசை, பக்தி எனும் பெயரில் பாழ்படுத்தும் எண்ணற்ற இழப்புகள், இடிபாடுகள்! ஏளனத்துக்குரிய சடங்குகள்! சிறுமைச் செயல்கள்!

சிந்தித்தால் துன்பம்; வெட்கம்; வேதனை!

கடவுள் பெயரில் நடப்பவற்றை எண்ணும்போதே கல்விக் கூடங்களும் கல்விநிலையும் எதிர்ப்படுகின்றன. கடவுள் தனக்கும் உதவிக்கொள்ள மாட்டார்; பிறர்க்கும் உதவ முன்வந்ததில்லை! சான்று காட்டுவார் உண்டா?

நாம் பிடித்துவைத்தால்தான் சாமி! நம்மால்தான் சாமி! மக்கள் எல்லாரும் ஆமாஞ்சாமிகள் ஆகலாமா?

கடவுளுக்குக் கண் இல்லையா?

கடவுள் கண் திறந்து பார்க்கமாட்டாரா?

இத்தகைய குரல்களையே கேட்டு வருகிறோம்.

கல்விக் கண் திறக்க வேண்டாமா?

கல்விப் பார்வை, அறிவுப் பார்வை சிறக்க வேண்டாமா?

அறிஞர்களின் பெருமையை அறிதல்வேண்டும்.

ஆய்வின் சிறப்பை அனைவரும் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; அறிவை விரும்பி ஏற்க வேண்டும்.

சிந்திக்கப் பழகவேண்டும். மனிதன் சிந்திக்கத் தகுந்தவன். தெரிந்தவன். ஆனாலும் சிந்திக்க வில்லை. சிந்திக்க விரும்பவில்லை; தெரியவில்லை. தெரிந்து கொண்டு பழகவேண்டும். சிந்திக்கும் பழக்கமே சிறந்த மனிதனை உருவாக்கும்.

சிந்திக்கத் தூண்டும் சிறந்த கருத்துகளை ஆய்ந்தாய்ந்து அறிவித்தவர் அறிஞர் பி.எல். சாமி. அவரது அயரா உழைப்பில் விளைந்த, அவர் கண்டெடுத்த ஆறு ஒளிமணிகளை, உள்ளம் உவக்கும் ஆறு கருத்து ஓவியங்களைத் தொகுத்து ஒரு நூல் வடிவில் வழங்குகிறோம்.

எழுதியவர் மறைந்தாலும் அவரது எண்ணமும் எழுத்தும் உயிர்சக்தி யுடையவை; ஒளியைப் பாய்ச்சி வழி காட்டி வளப்படுத்தும் வற்றாத ஆற்றல் பெற்றவை.

இந்நூலில் உள்ள கட்டுரைகளைத் தருவதில் இன்பம் காண்கிறோம். மனநிறைவு கொள்கிறோம்.

ஆய்வு நுகர்ச்சி ஆரா இன்பம் தருவது.

தாம் மறையும் வரையும் அவர் மறவாதிருந்த ஒரு கடடுரை இதில் உள்ளது.

நினைவுகளின் நெகிழ்ச்சியில் உருக வைத்த கட்டுரை அது.

கட்டுரைக்குரிய களத்தைக் காண நான் விரும்பினேன். அவர் உடன்பட்டார். உடன் அழைத்துச் சென்றார். ஓ! அரிய காட்சி யின்பம்!

எழில்மலை! ஏழிலைப் பாலை மரங்கள் நிறைந்திருந்ததால் ஏழிலைப் பாலை மலை! எழில்மலையும் ஆனது! இன்றோ? அது எலிமலை!... என்னே அறியாமை!

வடமலையாளத்தில் வாழ்ந்த குறுநில மன்னன் நன்னன்; வசைமொழிக்குரிய நன்னன். அவனைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையே இந்நூலில் முதலில் இடம் பெற்றுள்ளது.

நோயில் தளர்ந்து வாடிய உடலும் மனமும் வாயும் குழறிய நிலையில் '**நன்னனை வெளியிடுங்கள்**' என்றார்.

யாவும் மறந்த நிலையிலும் ஏழில்மலை நன்னன் பற்றி மட்டும் அவர் நினைவுகொண்டார். அவரது இறுதி ஆசையே முதல் கட்டுரையாய் முத்திரையாய்ப் பதித்திருக்கிறது.

மேலும் ஒரு சான்றை அவர் 20 ஆண்டுகளாய்த் தேடிக் கொண்டிருந்தார். முடிவில் ஓரளவே கிடைத்தது.

ஒருவாறு முடிவு செய்தார். 'வெளியிடுங்கள்' என்று தந்தார். நீண்ட இடைவேளைக்குப் பின் நூலுருவில் நன்னன் காட்சி தருகின்றான்.

அறிஞரின் ஆர்வமும் அவாவும் நூலுருவில் வெளிப்படுகின்றன. எமது நெஞ்சம் நெகிழும் வரலாறு இது. வரலாறு ஆன வாழ்வியல் நிகழ்ச்சி! அன்னாரது நினைவைப் போற்றி அமைதியடைகிறோம்.

அவரது அன்பு நிறைந்த இனிய குடும்பத்தாரை நெஞ்சார வாழ்த்தி நன்றி கூறி வணங்குகிறோம்.

அரிதில் முயன்று கட்டுரைகளைத் தேடித் திரட்டி உதவிய வில்லியனூர் புலவர் ந.வேங்கடேசனுக்கு நன்றி!

அறிஞரின் நினைவைப் போற்றி அவர்தம் ஆய்வுக் கருத்துகளை வெளியிடுகிறோம். அறிவுலகம் பருகிப் பயன் வளர்க்க வேண்டுகிறோம்.

வாழ்க ஆய்வு நெஞ்சம்! வளர்க ஆய்வு நெறி!

அன்புடன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

ஒப்பியல் ஆய்வு

இக்கட்டுரை சில வரலாற்று நிகழ்ச்சிகளின் நினைவுகள். சங்க காலத்திலும் இன்றைய மக்கள் நினைவிலும் நிலைத்திருக்கும் நிலையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்கிறது.

சங்க காலச் செய்திகள் வட மலையாள நாட்டில் இன்றும் சில மாறுபாடுகளோடு கர்ண பரம்பரைச் செய்திகளாகவும், கதைகளாகவும் நிலவுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சில செய்திகள் இன்னும் நாட்டார் மரபில் நிலைத்து நிற்கின்றன. இவ்விரண்டையும் ஒப்பிட்டு, கால இடை வெளியில் கிடைத்த இடைக்கால வரலாற்றுச் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் பயன் படுத்தி ஆய்வாளர் P.L.சாமி அவர்கள் இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்கள்.

நாட்டார் நினைவுச் செய்திகளை அவரே மாஹியில் அட்மினிஸ்ட்ரேட்டராக இருந்தபோது கள ஆய்வுகள் மூலம் சேகரித்தார்கள். எனவே, தற்கால கள ஆய்வு முறையையும், முற்கால இலக்கியச் செய்திகளை வரலாற்றை உருவாக்கப் பயன்படுத்தும் நவீன முறைகளையும் இணைத்துச் செய்யப்பட்ட ஒப்பியல் ஆய்வின் விளைவே இக்கட்டுரை.

நா. வானமாமலை

('ஆராய்ச்சி' மலர் – 5, இதழ் 1. மார்ச், 1975)

1

வடமலையாள நாட்டில் நன்னன் நினைவுகள்

ஆண்டநாடு

சங்க நூல்களில் நன்னன் என்றொரு வேளிர் குல அரசனைப் பற்றிப் பல பாடல்கள் கூறியுள்ளன.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய தொகை நூல்களில் வரும் செய்திகள் கொண்கான நாட்டில் ஏழில் மலையையும் பாரம் என்ற நகரையும் ஆண்ட நன்னனைப் பற்றியவை.

பூழி நாட்டையும் நன்னன் ஆண்டதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால், மலைபடு கடாம் என்னும் பாட்டில் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் என்று சொல்லப்படுவதால் நன்னனுடைய மகன் நன்னன் என்பது தெளிவாகின்றது.

நன்னன் ஆண்ட கொண்கானம், ஏழில் மலை, பூழிநாடு ஆகியவை இன்று தென்கன்னடத்தில் துளு பேசும் பகுதியாகவும், வடமலையாள நாட்டில் மலையாளம் பேசும் பகுதியாகவும் உள்ளன.

பூழிநாட்டின் தலைமையிடம் தற்போது மாஹி என்கிற பழைய பிரெஞ்சுத் திட்டில் பூழித்தலை எனும் பெயருடன் இன்றும் உள்ளது.

நன்னனுடைய ஏழில் குன்று, பாரம் ஆகியவை கண்ணனூரிலிருந்து 15 மைல்களில் காணப் படுகின்றன.

மற்றொரு நாடு

நன்னன் சேய் நன்னனின் பல்குன்ற நாடும் தலைநகரமான செங்கண்மாவும் திருவண்ணா மலைக்கு அருகில் உள்ளன.

நன்னன் ஆண்ட வடமலையாள நாட்டிற்கும் நன்னன் சேய் ஆண்ட பல்குன்ற நாட்டிற்கும் 500 மைல்களுக்கு மேல் இடைவெளி இருக்கின்றது.

நன்னன் சிற்றரசன் ஆதலால், நன்னன் வேறு, நன்னன் சேய் நன்னன் வேறு என்பது தெளி வாகின்றது.

பல்குன்றநாட்டு நன்னன்

நன்னனுக்குப் பிறகு அவனுடைய மகன் ஏழில் மலையைக் கைவிட்டுப் பல்குன்ற நாட்டில் அரசு செய்தான்.

பூழி நாட்டு நன்னனைக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் தோற்கடித்துக் கொன்றுவிட்டதைக் கல்லாடனார் அகநானூற்றின் 199ஆம் பாட்டில் கூறியுள்ளார்.

நன்னனைத் தோற்கடித்து அவனது காவல் மரமான வாகையை நார்முடிச் சேரல் வெட்டியதாகப்

பதிற்றுப் பத்திலும் கூறியிருப்பதைக் காணலாம். ஆதலின் கொண்கானத்து நன்னன் இறந்த பின் அவன் மகன் செங்கண்மா என்ற இடத்தில் புதியதாக ஒரு நாட்டில் அரசு கோலினான் என்று கொள்ள வேண்டும்.

கொண்கானத்து நன்னன், **உதியன் நன்னன்** என்று அழைக்கப்பட்டான். இவன் வேளிர் குலத்தில் பிறந்தவன். நன்னன் வேண்மான் என்று இவனை அகநானூறு 97ஆம் பாட்டு கூறுகின்றது. வேளிர் குலத்தில் ஆய்க்குடியில் பிறந்ததால் 'நன்னன் ஆய்' என்றழைக்கப்பட்டான்.

சங்க நூல்களில் நன்னன் ஆண்டதாகக் கூறப்பட்டுள்ள ஏழில் மலையை ஆராய்ந்தபோது சில செய்திகள் தெரிந்தன.

ஏழில் மலையை ஏழுமலையென்று மலையாளத்தில் பாமரமக்கள் அழைத்தாலும் அங்கு ஏழுமலைகள் இல்லை. ஏழில் மலையை ஏழிமலா என்றும் சிலர் அழைக்கின்றனர். சங்க காலப் பெயரோடு இந்தப் பெயர் ஓரளவு ஒத்துள்ளது.

ஏழில் என்று பெயர் பெற்றதன் காரணத்தை ஆராயலாம்.

குறுந்தொகையில் 138-ஆம் பாட்டில் வரும் 'ஏழில்' என்ற சொல் ஏழிலைப்பாலை மரத்தையும் குறிக்கலாம் என்று உ.வே. சாமிநாதய்யர் கூறியுள்ளார்.

'ஏழில் ஒரு மலை, இது நன்னன் என்பவனுக்கு உரியது; ஏழிலைப் பாலையென்னும் மரமும் ஆகும்;

இப்பெயர் கொள்ளுங்கால் உம்பரென்பதற்கு அப்பா லென்று கொள்க' என்று விளக்கவுரை கூறியுள்ளார்.

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே"

- குறுந்தொகை 138

வீட்டின் அயலதாகிய ஏழிற்குன்றத்தின் மேலுள்ள நொச்சியின் பூக்கள் விழும் ஓசையைத் தலைவியும் தோழியும் இரவில் கேட்டதாக இப்பாட்டில் சொல்லப் பட்டுள்ளது.

நொச்சி மரம் வீட்டுக்கருகில் வளர்ந்ததாகவே பல சங்கப் பாடல்கள் கூறுகின்றன. ஏழில்மலையின் மேல் வளர்ந்த நொச்சியின் பூ வீழ்தல் ஓசையைக் கேட்ட தாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆதலின் ஏழிலைப்பாலை மரத்தின் அப்பால் வளர்ந்த நொச்சி என்றே பொருள் கொள்ள வேண்டும்.

ஏழிலைப் பாலை மரம்

ஏழிலைப்பாலை மரம் இன்றும் ஏழில் மலையில் இயற்கையாக வளர்வதைக் காணலாம்.

ஏழில் மலைக்குச் சென்று நேரில் நான் ஆராய்ந்த போது ஏழில் மலையே ஏழிலைப்பாலை மரங்கள் மிகுதியாக வளர்ந்ததால் பெயர் பெற்றதென்று தெரிந்து கொண்டேன்.

காஞ்சி, வஞ்சி, கொற்கை முதலிய பழைய நகரங்கள் மரத்தினால் பெயர் பெற்றன- கொற்கு என்ற பெயர் கொன்றை மரத்தின் பெயராக சங்க நூலில் (நற்றிணை -302) வருகின்றது. ஆதலின் கொற்கை என்ற ஊர் கொன்றை மரத்தின் பெயராலே தோன்றியதாகலாம்.

கால்டுவெல் கருதுவது போல் கடல் கரையைக் கொல்லும் இடம் என்று வலிந்து கூற வேண்டிய தில்லை.

அதே போல ஏழில் மலையும் 'ஏழில்' என்ற ஏழிலைப் பாலை மரத்தால் பெயர் பெற்றதென்பதே பொருத்தமாகும்.

யாழ் வடிவம் இல்லை

ஏழில் என்பதற்கு யாழ் என்று பொருள் கொண்டு யாழ் வடிவாக மலையிருந்ததால் ஏழில் என்று பெயர் பெற்றதாக ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் கூறுவார்.

ஏழில்மலையை நேரில் சென்று பார்த்தபோது அது யாழ் வடிவமுடையதாகத் தெரியவில்லை. மற்றும் ஏழில் என்ற சொல் யாழைக் குறிக்கவுமில்லை.

ஏழிலை என்பதே 'ஏழில்' என்று குறுகி ஏழிலைப்பாலை மரத்தைக் குறித்து வழங்கிப் பின்னர் அம்மரம் நிறைய வளரும் மலையைக் குறித்தது.

ஏழிலை மரத்தை வடமொழியில் 'சப்தபர்ணீ' என்று மொழிபெயர்த்து வழங்கினார்கள்.

ஏழிலைப் பாலை மரம் இன்றும் மலையாள மக்களின் வாழ்க்கையில் முக்கியமானதாகும்.

பகவதி முதலிய பழந்தெய்வ வழிபாடுகளில் இந்த மரம் மிக முக்கியமானதாகும். ஏழிலைப்பாலை மரத்தை ஏலிலம்பாலா என்றும் அழைக்கின்றனர்.

பெயர் மாற்றங்கள்

ஏழில்மலை என்ற சங்க காலப் பெயரே ஏழுமலை, எலிமலை என்று பாமர மக்கள் வாயில் மாறிற்று. ஏழுமலை என்று பிற்காலத்தில் கொண்டதால் 'சப்தசைலம்' என்றும் மொழிபெயர்த்தனர். இடைக் காலத்தில் எலிமலை யென்றும் வழங்கியதாகத் தெரிகின்றது.

13ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ 'எலி' என்ற நாட்டைப் பற்றி எழுதியுள்ளார். இது ஏழில் மலையைக் குறிப்பதாகும்.

[2]இபின் பத்தூத்தாவும் (IbinBatuta) 'இலி' என்று இதைக் குறிப்பிட்டுள்ளார் பிற்காலத்தில் Mount Deli என்று ஐரோப்பியர் இதை அழைத்தனர்.

எலிமலையென்று பாமரமக்கள் வாயில் வழங்கி அதையே வடமொழியார் மொழிபெயர்த்து 'மூஷிகப் பர்வதம்' என்றழைத்தனர்.

சந்திரோற்சவம் என்ற 13ஆம் நூற்றாண்டு வடமொழி நூலில் மூஷிக வம்சத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

'பழமலையைக் கிழமலையென் றறைவ தென்னோ'

என்று இராமலிங்கர் பாடியது போல ஏழில்மலையை எலிமலையென்றது நகைப்புக்கிடனா யிருக்கிறது.

ஆய்வாளர் கருத்து

இந்த அரசர்கள் ஆண்ட இடத்தை **எலிகோயிலகம்** என்று கூறுவர்.

ஸ்ராபோ (Strabo) என்ற கிரேக்க ஆசிரியர் "முசிகானோஸ்" (Mousikanos) என்ற நாடு இந்தியாவில் தூரத் தெற்கில் இருந்ததாகக் குறிப்பிட்டார். இதைச் சில அறிஞர்கள் கேரளத்து மூஷிகநாடு என்றும், வேறு சிலர் சிந்துநதிப் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதி யென்றும் கொண்டனர்.

[3]பேராசிரியர் ராய் சௌத்ரி கேரளத்து மூஷிக நாடாக இருக்கலாம் என்று கருதுகிறார்.

நந்தர்கள் ஆண்ட காலத்திலேயே வெளி நாட்டாருக்குப் பாண்டிய, சோழ நாடுகள் போல ஏழில்மலையும் தெரிந்த இடமாக இருந்திருக்கலாம். மூஷிக கானம் என்ற பெயரையே கிரேக்க நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளதாகக் கருதலாம்.

மூவன் யார்?

மூஷிக வம்சம் என்ற வடமொழி நூலில் பிற் காலத்தில் ஆண்ட அரசர் பெயர் வரிசையில் நன்னன் பெயரும் மூவன் பெயரும் காணப்படுகின்றன.

மூவன் என்ற தலைவன் பெயர் புறநானூற்றில் (209) வருகின்றது. இவன் 'சேய்' என்றழைக்கப் படுகின்றான்.

மூவன், மூவன் சேய் என்ற இரு தலைவர்கள் குறிக்கப்படுகின்றார்கள். நன்னன், நன்னன்சேய் என்ற உறவுப் பெயர்களைப் போல மூவன், மூவன் சேய் என்ற பெயர்கள் வழங்குவது கவனிக்கத்தக்கது. இவ்வழக்கு சேரநாட்டு வழக்குபோலத் தோன்று கின்றது.

நற்றிணையில் சேரமான் கணைக்காலிரும் பொறை மூவனைக்கொன்று அவனுடைய பல்லைப் பிடுங்கி தொண்டிநகர் வாயிற்கதவில் அழுத்தி வைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அம்மூவன் என்ற புலவர் தொண்டி, மாந்தை முதலிய சேர நாட்டூர்களைப் பாடியதால் சேர நாட்டினராகக் கருதப்படுவார்.

மூஷிகவம்சத்தில் வரும் நன்னன், மூவன் என்ற பெயர்கள் பிற்காலத்திலும் இங்கு ஆண்ட மன்னர்கள் இங்கு வாழ்ந்த சங்ககால மன்னர் பெயர்களைச் சூட்டி வந்ததைக் குறிப்பிடும்.

நன்னன் பெயர் வழக்கு

நன்னன் என்ற பெயரைத் தமிழ் நாட்டில் மக்களுக்குப் பெயராக இன்று வழக்கில் காண முடியாது.

ஆனால் ஏழில் மலைக்கருகில் உள்ள நீலேஸ்வரம் ஊரில் மீனவர்களிடையே 'நந்நன்' என்ற பெயர் மக்களின் பெயராக வழங்கினதைக் கண்டேன். பெயரொலிப்பில் தந்நகரம் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பிற்காலத்துத் தமிழ்க் கல்வெட்டுகளில் நன்னன் என்ற பெயர் குறுநிலமன்னர்களின் பெயராகவும், தஞ்சாவூர் பெருவுடையார் கல்வெட்டில் இடையர் களின் பெயராகவும் காணப்படுவது கருதத்தக்கது.

> *"சாத்தமங்கலத்து இருக்கும் இடையன் கண்டன்*
> *கருவேலனும்... நந்தன் நீலனும்"*

என்று வரும் கல்வெட்டு வரியில் தந்நகரமே பயில்வதைக் காணும் போது மலையாள மொழியில் வழங்கும் தந்நகரமே சங்ககாலத்திலும் நன்னன் (நந்நன்) பெயரில் வழங்கியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

சுற்றுச்சூழல்

ஏழில் மலையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் நீர்ப்பரப்பு உள்ளது. ஒரு பக்கத்தில் கடலும் இரு

பக்கங்களிலும் ஆறும் உள்ளன. ஆதலின் ஏழில் மலையை அணுகுவது எளிதன்று.

ஏழில் மலையை அடைய **புன்னைக் கடவு** என்ற இடத்தில் படகில் ஆற்றைக் கடக்கவேண்டும். ஆனால் சென்ற ஆண்டு பாலங்கள் கட்டினதால் ஏழில் மலையை அடைய எளிதாகியுள்ளது.

கொற்றிப்புழை

ஏழில் மலைக்கருகில் கொற்றியூர் உள்ளது. கொற்றிக்கடவு, கொற்றிப்புழை என்ற துறையும் ஆறும் இருக்கின்றன.

கொற்றியூர் காடு அடர்ந்த இடத்தில் **அம்மாறக்கல்** என்ற பெயருள்ள பாறை உள்ளது. இந்தப் பாறையைச் சக்தி வாய்ந்த அம்மனாகக் கருதி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலையாளத்தில் பல இடங்களிலிருந்து மக்கள் வந்து குழுமிப் பலிபூசை நடத்துகிறார்கள்.

இந்த அம்மாறக்கல் அம்மன் இருக்கும் இடமே நன்னனது பாழியிருந்த இடம் என்று கருதலாம்.

கொற்றி என்பது கொற்றவை என்பதன் மாற்றமாகும்.

பாழி – எது?

பாழியில் இருந்த ஒரு கடும் பேய்க்கு ஆட்பலி கொடுக்கும் வழக்கம் இருந்ததைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

அகநானூற்றில் 142ஆம் பாடலில் "ஊட்டுஅரு மரபின் அஞ்சு வரு பேஎய்க்கூட்டு எதிர்கொண்ட" என வருகின்றது. அதிகனைக் கொன்று ஆட்பலி ஊட்டுவதாக மிஞிலி வஞ்சினம் கூறினான் என்று குறித்துள்ளது. இந்தப் பேயே பிற்காலத்தில் கொற்றியாகவும் அம்மனாகவும் விளக்கப் பட்டிருக்கலாம்.

கொத்தி என்ற சொல்லுக்கு ஒரு பேய் என்று பொருளகராதி பொருள் கூறியுள்ளது.

ஆதலின் இன்று ஏழில் மலையிருக்கும் கொற்றிப் புழைக்கருகில் **பாழிச் சிலம்பு** இருந்திருக்கலாம்.

ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் வட கன்னடத்தில் உள்ள பாட்கல் என்ற ஊரின் பெயரே பாழிக்கல் என்று மாறிற்று என்று கொண்டார். **பாட்கல்** என்ற ஊர் ஏழில் மலைக்கு வெகு தொலைவில் உள்ளதாகும்.

> *"பாரத்துத் தலைவன், ஆர நன்னன்;*
> *ஏழில் நெடுவரைப் பாழிச்சிலம்பில்*
> *களிமயில் கலாவத்தன்ன."*

நன்னனைப் பற்றிய மேற்கண்ட சங்கப் பாடல்களிலிருந்து (அகம். 152:12-14) ஏழில் மலையிலேயே பாழி இருந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது. பாழிச் சிலம்பை ஏழில்மலைத் தொடரிலேயே அல்லது அதன் அருகிலேயே காணவேண்டியதாகும்.

'பூழி நாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்று அழைப்பர்' என்று மயிலைநாதர் கூறியுள்ளார். இதை **நன்னன் பாழி** என்றும் அழைத்தனர்.

அகநானூற்று 375ஆம் பாடலில் சோழன் இளம் பெருஞ்சென்னி 'செம்புரிசைப் பாழியை' அழித்ததாகக் கூறியதைக் காணலாம். அதனால், இந்தச் சோழ அரசனுக்குச் 'செருப்பாழி எறிந்த' என்ற அடைமொழி வந்தது.

நன்னன் பாழியில் ஒரு நிலைச்செருவை (Standing Army) வைத்திருந்தான் என்று கருதலாம்.

பாழியை நன்னன் நன்கு பாதுகாத்தான் என்பதை 'அருங் கடி பாழி' என்று கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பதிற்றுப்பத்தின் நான்காம் பதிகமும் ''உருள் பூங்கடம்பின் பெருவாயில் நன்னனை நிலைச் செருவினாற்றலை அறுத்தவன்'' என்று நார்முடிச் சேரலைப் புகழ்ந்துள்ளதைக் கவனிக்க வேண்டும்.

செருவத்தூர்

ஏழில் மலைக்கருகில் இன்றும் கடற்கரையாராக **செருவத்தூர்** என்ற ஊர் உள்ளது இவ்வூரின் இரு பகுதிகள் **காரி** என்றும் **ஓரி** என்றும் இன்றும் அழைக்கப்படுகின்றன. இப்பெயர்கள் சங்ககால குறுநில மன்னர்களான காரி, ஓரியின் நினைவாக காணப்படுகின்றது.

பாரம்நாடு

'பாரத்துத் தலைவன் ஆர நன்னன்' (அகம். 152) என்று சங்கப் பாடல்களில் அழைக்கப்படுகின்றான்.

பாரம் என்ற ஊர் ஏழில் மலை அருகிலே பத்து மைல் தொலைவில் உள்ளது. பாரம் இப்போது சிற்றூராக உள்ளது. இங்குப் பழைய கோயில் ஒன்றும் உள்ளது. கல்வெட்டுகள் இல்லை. 'ஜீப்' வண்டியில் தான் செல்ல முடியும்.

பாரத்தைச் சுற்றிப் பெரிய பறம்புகள் உள்ளன. முரம்பு நிலமான மேட்டிடம் எங்கும் காணப் படுகின்றது. பனையால் என்ற ஊருக்கு அருகில் பாரம் உள்ளது. இங்குக் 'கோட்டப்பாறா' என்ற சிறு மேட்டிடம் உள்ளது.

இந்த ஊரில் செவிவழிச் செய்திகள் சில கூறுகின்றனர்.

இங்குக் கோட்டையைக் கட்டி **மடிகர்** என்ற சாதியினர் ஆண்டு வந்தனர் என்றும் அவர்களில் ஓர் அரசன் நன்னன் என்றும் அவன் தோலில் நாணயங்கள் செய்து வெளியிட்டான் என்றும் கூறுகின்றனர். மடிகர்கள் இன்று தோலில் தொழில் செய்யும் கீழ்ச்சாதியாகக் கருதப்படுகின்றனர்.

இங்குள்ள பறம்பின் மேல் ஏறிக் கீழிறங்கினால் கானாற்றங்கரையில் பாரம் என்ற ஊர் உள்ளது. நன்னன் பறம்பு என்பதை இங்கு வந்து நேரில் பார்த்தால்தான் நன்கு புரிந்துகொள்ள முடிகின்றது.

சாணைக்கல்

இத்தகைய பறம்பில் உள்ள முரம்பு நிலத்தில் குருந்தக்கல் கிடைப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர். இந்தக் கல் சாணை பிடிக்கும் கல் செய்யப் பயன் படுகின்றது. [4]இதையொட்டித் தென் கன்னடத்திலும் குருந்தக்கல் நிறைய கிடைக்கின்றது.

சங்க நூல்களில் இந்தக் குருந்தக்கல்லைச் சாணைக் கல்லாக்கின தொழில் பற்றிச் செய்தி வருகின்றது.

காரோடன்

நன்னன் பறம்பில் சாணைக்கல் செய்யும் காரோடன் எனப்படும் தொழிலாளர் வாழ்ந்தனர் என்று அகநானூறு கூறுகின்றது.

> *"தொன்னிசை சாவாமை நன்னன் பறம்பிற்*
> *சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய*
> *கற்போல் நாவினேன் ஆசி மற்றது"*
>
> -அகம். 356

சிறுகாரோடன் என்ற சாணைக்கல் செய்யும் தொழிலாளன் பிசினோடு சேர்த்த கல் போல உறுதியானது என்று அகநானூறு கூறியுள்ளது.

சாணைக்கல் செய்வோரின் சங்க காலப் பெயரான 'காரோடன்' பல்லவர்கள் காலத்தில் சாணைக்கல்லுக்கே வணிகப் பெயராக மாறியது.

கோபால தேவனின் ஹாஸ்தியூர் கன்னடச் செப்பேட்டில் கொளகுப்பை, ஜெவாஸி, லாரல், கர்ஸபிண்டம், கெம்பைக் காரோடம் என்ற வணிக உரிமைப் பெயர்கள் காணப்படுகின்றன.

இப்பெயர்கள் வேறு எந்தத் திராவிட மொழிக் கல்வெட்டுகளிலும் காணப்படவில்லை.

இந்தப் பெயர்களில் 'கெம்பைக்காரோடம்' என்பது சங்ககாலப் பெயரைக் கொண்டுள்ளது.

கெம்பை என்ற சொல் **செம்பு** என்று தமிழில் வழங்கும். செம்மை என்ற பொருள் தரும்.

சங்க காலத்திலிருந்தே சாணைக்கல் செய்யும் தொழில் இங்கும் தென்கன்னடத்திலும் முக்கிய மானதாக இருந்து அதை ஒரு வணிக உரிமையாகப் பல்லவர்கள் வழங்கியிருக்கலாம்.

நன்னன் பறம்பில் சாணைக்கல் செய்த காரோடர்களைப் பிற்காலத்தில் பறம்பர் என்று அழைத்தனர்.

திவாகர நிகண்டு, காரோடன் என்ற பெயரை உறைகாரருக்கு உரிய பெயராகக் கூறியுள்ளது.

தோல்உறை தைப்போர்

அடியார்க்கு நல்லார் உரையில் தோல் தைப்பவர்க்கு 'உறைகாரர், பறம்பர்' என்ற பெயர்கள் இருந்ததாகக் கூறியுள்ளார்.

காரோடன்மார் பிற்காலத்தில் சாணைக்கல் தொழிலை விட்டுத் தோல் உறை தைக்கும் தொழிலைச் செய்ததனால் பறம்பர், உறைகாரர் என்றழைக்கப்பட்டனர். இந்த உறைகாரர் பிற் காலத்துக் கல்வெட்டுகளில் கூறப்படுகின்றார்கள்.

சச்சவிட வணிகர், சேனையங்காடிகள், கோயிலங் காடிகள், செக்கு வணிகர், உறைகாரர் ஒன்றுகூடி, தனிநின்று வென்றான் நல்லூர், மாதேவிமங்கலம் ஆகிய ஊர்களையும் அஞ்சினான் புகலிடமாக நிறுவினார்கள் - என்று ஒரு கல்வெட்டு (Epi. Rept 62/32-34) சொல்லுகின்றது.

நன்னன் பறம்பில் இருந்த காரோடன்மார்கள் பிற்காலத்தில் உறைகாரர்கள் ஆனதால் அங்கு வாழ்ந்தவர்களைச் சக்கிலியர்களான **மடியர்கள்** என்றும், நன்னனும் அந்தக் குலத்தைச் சேர்ந்தவன் என்றும் கதை கட்டினார்கள்.

பாரம் எனும் இடத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் **உதுமா** என்னும் ஊர் உள்ளது. இவ் விடத்தில் மலையாளமும் கன்னடமும் பேசப்படுகின்றது.

பாரம், உதுமா என்று ஊர்களில் இன்றும் நன்னனைப் பற்றிச் செவிவழிச் செய்திகள் வழங்குகின்றன.

நாடுவாழி

நன்னன் ஒரு **நாடு வாழி** என்றும் அவன் கொடுமை மிக்கவன் என்றும் பாரத்தில் கூறினர். நாடு

வாழி என்ற பெயர் மலையாளத்தில் குறுநில மன்னர்க்கு இன்றும் பேச்சுவழக்கில் வழங்குகின்றது.

பதிற்றுப்பத்தில் செல்வக்கடுங்கோ வாழி யாதனைப் பற்றிக் க்பிலர் பாடியுள்ளார். செல்வக்கோ என்பது அவன் இயற்பெயராகச் சொல்லப்படுகின்றது.

வாழி என்பது குறுநில மன்னனைக் குறித்ததாகலாம். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலும் **குறையலூர் வாழி** என்று திருமங்கை மன்னனை அழைத்திருப்பதைக் காணலாம்.

வாழ்ச்சா – வாழ்ச்சி

பிற்காலத்தில் வடமலையாளத்தில் தோன்றிய சிறக்கல் கோவிலகத்துச் சிற்றரசர்களைக் **'குறுவாழ்ச்சா'** என்றழைப்பதைக் காணலாம்.

குறுவாழ்ச்சி என்ற பெயர் சிறிய நாடுவாழி அல்லது அரசன் என்று பொருள்படும்.

பதிற்றுப்பத்தில் (56)வரும் வாழ்ச்சி என்ற பெயரும், மன்னனைக் குறித்து வழங்கியதாகத் தெரிகின்றது.

பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தானு ரவி என்ற சேர அரசனின் கல்வெட்டில் 'நாடுவாழ்தல்' என்ற பெயர் அரசன் அல்லது குறுநிலத்தலைவன் என்ற பொருளில் வழங்கியிருப்பதைக் காணலாம்.

சில சொல்வழக்குகள்

கோவாழி, கோச்செய்தல் என்ற வழக்குகள் அப்பர் தேவாரத்தில் **அதிகாரம் செய்தல்** என்ற பொருளில் வந்திருக்கின்றன.

கோத்தொட்டு, கோக்கொள்ள என்ற வழக்குகள் பல்லவர் செப்பேடுகளில் காணப் படுகின்றன. பல்லவர்கள் தங்களைத் தமிழ்நாட்டு அரசர்கள் என்று வற்புறுத்துவதற்காகவே **'கோ விசைய'** என்ற கல்வெட்டுகளில் துவக்கும் வழக்கைக் கையாண்டனர்.

கோ விசைய என்ற வழக்கு கோவாழி என்ற சங்கநூல் வழக்கு போன்றதேயாகும். நன்னன் முதலில் சேர அரசர்களுக்குக்கீழ் ஏழில் நாட்டிற்கு அதிகாரம் செய்து வாழ்ந்து, பின்னர் அரசனானான் என்று கருதலாம்.

ஆதலால் நன்னனை இன்றும் நாடுவாழி என்ற வடகேரளத்தில் கூறுகின்றனர்.

நன்னனைக் கொடுமை மிக்கவன் என்று கூறுவதைத் தென்கன்னடத்திலும் செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்டேன்.

நாடகம்

காசர்கோட்டில் துளு மொழியிலும் கன்னட மொழியிலும் புலமை பெற்ற ராமன் நாயக் என்ற

பண்டிதரைக் கண்டு மன்னனைப் பற்றிச் சில செவிவழிச் செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

ராமன் நாயக் என்ற பண்டிதர் நன்னனைப்பற்றி ஒரு நாடகம் எழுதி அதை உயர்நிலைப்பள்ளியில் நடத்தினாராம். நன்னன் என்ற அரசன் விழுந்துகிடந்த மாங்காய்களைப் பொறுக்கிய குழந்தைகளின் கைகளைக் கத்தியால் வெட்டவைத்தானாம். அவ்வளவு கொடுமையுடையவனாம்.

சங்க நூல்களில் நன்னனைப் பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது நன்னனுடைய தோட்டத்தில் இருந்து நறிய மாவின் காய் ஆற்றில் விழுந்து அடித்துச் செல்லப்பெற்றது. குளிக்கச் சென்ற ஒரு சிறுமி அந்த மாங்காயை எடுத்துத் தின்றதற்காக நன்னன் கொலைத் தண்டனை விதித்தான்.

அவள் புரிந்த பிழைக்கு எண்பத்தொரு யானை களையும் அவள் நிறையளவு பொன்பாவையும் கொடுப்பதாகச் சொல்லியும் நன்னன் கொலைத் தண்டனையை நிறைவேற்றினான். அதனால் **பெண் கொலை புரிந்த நன்னன்** என்று பரணரால் இகழப்பட்டான்.

சங்க காலத்துச் செய்தி இன்றும் செவிவழிச் செய்தியாகச் சிறிது மாறித் தென் கன்னடத்திலும் பண்டிதர் நாயக் கூறிய செய்தியாக வழங்கி வருகின்றது.

சிறுமி மாங்காயை எடுத்துத் தின்றதற்காகக் கொலை செய்த நன்னன் செய்தி, வேறுவகைக் கதையாக மாறி, மலபாரில் மட்டும் நடத்தப்படும் தெய்வ ஆட்டங்கள், பேயாட்டங்களிலும் வருகின்றது.

கோலத்து நாடு

நன்னன் ஆண்ட நாட்டைப் பிற்காலத்தில் கோலத்து நாடு என்று வழங்கினர். **கோலஸ்திரி, கோலத்திரி** என்ற பெயர்கள் மூஷிகவம்சம் என்ற நூலில் காணப்படுகின்றன.

கோலம் – பெயர் விளக்கம்

இங்குக் கோலம் பூண்டு ஆடும் வழக்கம் உள்ளதால் கோலத்துநாடு, கோலஸ்திரி நாடு என்ற பெயர்கள் தோன்றின.

இந்தக் கோலங்கள், திராவிட மரபில் ஆடும் தெய்வ ஆட்டங்களாகும். இந்த ஆட்டங்களை வேலன், பாணன், மலையன் முதலிய திராவிடக் குடிகளே பெரும்பாலும் ஆடுகின்றனர்.

நாயர்களோ, நம்பூதிரிகளோ ஆடுவதில்லை.

ஆட்டங்கள் பலவகை

இந்த ஆட்டங்கள் வீரர்களையும், வீராங்கனை களையும், குட்டிச்சாத்தான், சாமுண்டி முதலிய பழந் தெய்வங்களையும், இந்து மத தெய்வங்களையும் பாவித்து ஆடுவனவாகும்.

கண்ணகி பகவதியானபோது பகவதியாட்டம் பரவியது.

உடன் கட்டையேறிய பெண்ணைத் தெய்வமாக்கி செம்மறத்தி என்ற ஆட்டம் ஆடுவர். வைரிஜாதன் முதலிய வீரர்களையும் பாவித்து ஆடுவர்.

இந்த ஆட்டங்கள் ஆடுவோர் முகத்திலும் உடம்பிலும் அழுத்தமான சாயவரிகள் பூசித் தென்னை ஒலையாலும், மூங்கில் பிளாச்சுகளாலும் (பத்தை), அட்டைகளாலும் செய்த உடைகள், காதுகள், மகுடங்கள் அணிந்து, பயங்கரத் தோற்றமுடை யவர்களாகக் காணப்படுவார்கள்.

இந்த ஆட்டங்கள் ஆடும் பூசாரிகள் களம் இழைத்துக் களத்தில் ஆடுவர். இந்த களங்கள் சங்க நூல்களில் கூறிய வண்ணம் கட்டங்களை உடையன.

களங்களில் ஆடு, கோழி குருதிப்பலி நடக்கும். இந்தச் சடங்குகளை மலையாளத்து வேலன்மார் நடத்துங்கால் நான் பார்த்தபோது சங்கப் பாடல் களிலும் திருமுருகாற்றுப்படையிலும் வேலன் செய்யும் வெறியாட்டுச் சடங்குகளுடன் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் கண்டேன்.

கோலம் என்ற சொல் இன்று என்ன பொருளில் வடமலையாளத்தில் வழங்குகின்றதோ அதே பொருளில் சிலப்பதிகாரத்தில் வழங்குவதைக் காணலாம்.

குறள், மறம், சிந்து, சோனகன், பார்ப்பான், சடாதாரி என்ற வடிவம் கொண்டு ஆடும் கூத்து வகைகளைக் கோலம் என்ற பெயரால் பரதசங்கிரக நூலாசிரியர் கூறியுள்ளார்.

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், சிந்து, பறை, சோனகல், சடாதாரி ஆகிய கோலங்களைப் பல்வரிக் கூத்தாகக் கூறியுள்ளார்.

செங்குட்டுவன் கண்ட ஆட்டம்

சிலப்பதிகாரத்தில் கால்கோட்காதையில், கொங்கணக்கூத்தர் தங்குலக் கோதிய

தகை சாலனி யினராய் தம் கோலத்தால் செங்குட்டுவனை மகிழ்வித்ததாகக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

கொங்கண நாடான நன்னன் ஆண்ட கொண்கான நாட்டினரே ஆடிய கோலத்தைச் செங்குட்டுவன் கண்டு மகிழ்ந்தான்.

கதகளி – வளர்ச்சி

இந்த ஆட்டங்கள் ஆடப்படும் நாடு இன்றும் கோலத்து நாடு என்றழைக்கப்படுவது வியப்பே. முகத்திலும் உடம்பிலும் எழுதும் இந்த எழுத்து வரிக்கோலமே பிற்காலத்தில் கதகளி ஆட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தரையில் எழுதும் வரிவடிவமும் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் கோலம் என்று அழைக்கப்பட்டது.

நன்னன் நாட்டில் ஆட்டம்!

தற்போது நன்னன் ஆண்ட நீலேஸ்வரத்தில் ஒரு தெய்வ ஆட்டம் ஆடப்படுகின்றது. இந்த ஆட்டம் கொலை செய்யப்பட்ட ஒரு சிறுவனைத் தெய்வமாகக் கற்பனை செய்து ஆடுவதாகும். இந்த ஆட்டக் கதையில் நன்னன் செய்த கொலையைப் பற்றிய கதை மாறி வழங்குவதைக் காணலாம்.

நீலேஸ்வரத்தில் குருப்பு என்பவனின் அடியாளான மாடுமேய்க்கும் சிறுவனான கண்ணன் என்பவன் மாமரத்தின் மேலிருந்து மாங்காய் தின்று கொண்டிருந்தான்.

அப்போது குருப்பின் மருமகன் தன்னுடைய மாமரத் தோட்டத்தின் வழியாகச் சென்றபோது கண்ணன் தின்ற மாங்காய் தவறி மருமகன் மேல் விழுந்தது. இதற்காகக் குருப்பு சினங்கொண்டு கண்ணனை நாடு கடத்தினான்.

கண்ணன் மங்களூரிலே ஒரு துளுப் பெண்ணிடம் அடைந்து கடவுள் பக்தனாக வாழ்ந்தான்.

ஒருநாள் தன்னுடைய நாட்டைக் காணவந்தான். கண்ணன் நீலேஸ்வரத்தில் தாமரைக் குளத்தில் குளிக்கும்போது குருப்பு கண்ணனைக் கண்டு சினந்து வெட்டித் தள்ளினான்.

கண்ணனைக் கொன்றதும் மாடுகள் செத்தன. பல துன்நிமித்தங்கள் தோன்றின. அதற்காகப் பரிசாந்தி செய்வதற்கு வெட்டுண்ட கண்ணனுக்குக் கோலங் கற்பித்து ஆடினர்.

இந்தக் கதையில் மாங்காயை எடுத்தது, அதற்காகக் கொன்று போட்டது ஆகிய இரண்டு செய்திகளும் நன்னன் வரலாற்றிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுக் கண்ணன் என்பவன் மேல் ஏற்றப்பட்டதைக் காணலாம்.

குளிக்கச் சென்ற சிறுமி கொல்லப்பட்டது போலக் குளிக்கச் சென்ற சிறுவன் இந்தக் கதையில் கொல்லப்பட்டான்.

வேறொரு கதை

இதுபோன்ற வேறொரு கதையை இபின் பத்தூத்தா கொல்லத்து அரசனுக்கு நிகழ்ந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

கொல்லத்து அரசன் கொடுமை வாய்ந்தவன் என்றும் அதற்கு ஒரு கதையும் கூறப்படுவதாகச் சொல்லியுள்ளான்.

ஒருநாள் கொல்லத்து அரசன் குதிரையில் செல்லும்போது, உடன் சென்ற அவருடைய மருமகன் கிணற்றில் விழுந்த மாங்கனியை எடுத்தான். அரசனுக்கு மிகுந்த சினம் வந்தது, மருமகனின் வயிற்றைக் கீறிப் பிளந்து போடச் சொன்னான்.

இந்தக் கதை குருப்பும் அவனுடைய மருமகனும் போன்ற ஒரு கதையாகத் தெரிகின்றது. இக்கதையில் மருமகனே மாங்கனியை எடுத்ததாகச் சொல்லப் படுகிறான். ஆதலின் நன்னன் கதை பிற அரசர்கள் மேலும் ஏற்றப்பட்டு வெளிநாட்டுப் பயணிகளுக்கும் தெரிந்திருந்தது.

மற்றொரு கதை

இதுபோன்று மற்றொரு கதையும் வட மலையாளத்தில் தெய்வ ஆட்டமொன்றில் வழங்குகின்றது.

தாழக்காட்டு மனை என்ற பிராமணருடைய வீட்டிலே ஒரு சிறுமி பலாமரத்தில் ஏறிப் பலாக்காயைப் பறித்தாள் என்று குற்றம் சாட்டப்பட்டு மாமனால் கொல்லப்பட்டாள்.

பின்னர், அந்தச் சிறுமியைக் கொன்ற காரணத்தால் பல கேடுகள் இயற்கையாக நிகழ்ந்ததால் தெய்வமான அச்சிறுமிக்குச் சாந்தி செய்து அவளை **மனையில் போதி, மனையில் பகவதி** *என்று அழைத்துக் கன்னிக் கோலம் கட்டி ஆடலாயினர்.*

இந்தக் கதையும் நன்னன் சிறுமியைக் கொன்ற வரலாறு போல உள்ளது.

மாங்காயைப் பறித்துக் கொல்லப்பட்டாள் என்று சங்க நூல்கள் கூறும். ஆனால் இக்கதையில்

பலாககாயைப் பறித்துக் கொல்லப்பட்டாள் என்று கூறப்பட்டுள்ளது.

மாவும் ஊரும்

பாரத்திற்கு அருகில் உதுமா என்ற ஊர் உள்ளது. நன்னனுடைய **நறுமா** இருந்த இடம் இந்த உதுமா என்ற ஊராகலாம். உதிர்மா என்பதே உதுமா என்றாயிருக்கலாம்.

நன்னனுடைய மகன் செங்கண்மாவில் ஆட்சியை நிறுவியதும் நன்னனைப் பற்றிய இக் கொடிய செய்தி அங்கும் வழங்கிற்று.

'அறுந்த மாங்கனி பொருந்திய செங்கம்'

என்ற இவ்வூரைக் குறிப்பிடுவர் என்று வடார்க்காடு மாவட்டத்தைப் பற்றி எழுதிய நூலில் எழுத்தாளர் 'சோமலெ' குறிப்பிட்டுள்ளார்.

வடமலையாளத்திலும் தென் கன்னடத்திலும் நன்னனைப் பற்றிக் கூறப்படும் மற்றொரு செய்தி, நன்னன் பதுக்கி வைத்திருந்த செல்வத்தைப் பற்றியதாகும்.

தோல் நாணயங்கள்

நன்னன் நிறைய தோல் நாணயங்களைச் சேர்த்து மறைத்து வைத்திருந்தானாம். அந்தத் தோல் நாணயங்களை நரியும் நாயும் தின்று போட்டனவாம்.

"நந்தா பதுக்கு நரிநாயி தின்னு ஹோயித்து" என்று பழமொழி போல ஒரு மொழி பாரத்திலும் உதுமாவிலும் வழங்குகின்றது.

காசர்கோடு பண்டிதர் நாயக் என்பாரும் இந்தக் கதையைக் கூறினார்.

பொன் குவிப்பு

நன்னன் பாழியில் தொன்முதிர் வேளிர் பொன்னைச் சேர்த்து வைத்து இருந்தனர் என்று அகநானூற்றுப் பாடல் 258 கூறுகின்றது.

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமைநன் கறிந்தும் அன்னோன்"

- அகம். 258

'பொன்படு கொண்கானம்' (நற்றிணை), பொன்படு கவான் (அகம். 173) என்று கூறப் பட்டுள்ளது. அகநானூறு 15ஆம் பாட்டு நன்னனுடைய பாழி 'கடியுடை வியன்நகராகச் செறிந்த காப்புடன்' இருந்ததைக் கூறியுள்ளது.

தனது முன்னோர் சேர்த்து மறைத்த பொன்னைக் காக்க நிலைச்செரு ஒன்றை நன்னன் வைத்திருந்தான். அதனால் 'செருப்பாழி' என்ற பெயர் பெற்றதாகவும் தெரிகின்றது.

ரோமரது நாணயங்கள்

நன்னன் பதுக்கிவைத்த பொன், ரோம நாணயங்களாக இருக்கலாம்.

ஏழில் மலைக்கருகிலும் பக்கத்து ஊர்களிலும் நிறைய கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை வழங்கிய ரோம நாணயங்கள் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன.

ஏழில் மலை நாட்டிலிருந்து மிளகை ஏற்றுமதி செய்து பெற்ற பெரும் பொன்னை நன்னனும் அவன் மூதாதையரும் பதுக்கி வைத்திருக்கக்கூடும்.

நன்னனுக்குக் காற்றின் வழியாக ஓங்குபுகழ் கானமர் செல்வியின் அருளால் பல்படை வெள்ளைப் புரவிகள் வந்தன என்று அகநானூறு 345ஆம் பாட்டு கூறுகின்றது.

“ ....வெண்கால்
பல்புடைப் புரவி எய்திய தொல்இசை
நுணங்கு நுண் பனுவற் பாடிய
இனமழை தவழும் ஏழிற்'குன்றத்துக்”

இந்தக் குதிரைகள் கப்பலில் நன்னனுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி ஆனவை என்று கருதலாம்.

‘காலின் வந்த நிமிர்பரிப் புரவியும்’ என்று பட்டினப்பாலை கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

கடல்வணிகத் தொடர்பு

வெண்காற் குதிரைகள் (White Stockinged horses) இன்றும் மேல் நாட்டில் சிறந்த இனமாகக் கருதப் படுகின்றன. கி.பி. முதல் சில நூற்றாண்டுகளிலே ஏழில் நாட்டிற்கும் மேல் நாட்டிற்கும் வணிகம் நடந்திருக்கலாம்.

நன்னன் நாட்டிலிருந்து சாணைக்கல்லும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாயிருக்கலாம். மேற்கு கடற்கரையிலிருந்து கி.பி. முதல் மற்றும் இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்றுமதியானவைகளில் **வைரம், குருந்தம்** போன்ற கற்களையும் கிரேக்க ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். குருந்தக் கல்லினும் மதிப்பு தாழ்ந்த ஒருவகைக் கல்லே காரோடமாகும்.

நன்னன் நாட்டிலிருந்து மிளகும் பிற பொருள்களும் ஏற்றுமதியாகிப் பெற்ற மிகுதியான பொன்னையே நன்னன் பதுக்கி வைத்திருந்தான்.

உண்மையும் கதையும்

நன்னன் பொன்னைக் காத்த சங்க நூற் செய்தியையே மிகப் பிற்காலத்தில் தோல் நாணயங்களைப் பாதுகாத்ததாகவும் அவைகளை நாயும் நரியும் தின்று போட்டதாகவும் மாற்றிக் கூறினர். நன்னன் பதுக்கிய பொன்நாணயங்கள் தோல் நாணயங்களாக மாறி அவைகளை நாயும் நரியும் தின்று போட்டன என்று கதை கட்டியிருக்கின்றனர்.

நன்னன் பொன்னைப் பாதுகாத்த செய்தியையும் வடநாட்டில் நந்தர்கள் பொன்னை நீரில் மறைத்து பாதுகாத்த செய்தியையும் தொடர்புபடுத்திக் கூறும் போக்கையும் வடகன்னடத்தில் கேள்விப்பட்டேன்.

நந்தவர் – நந்தர்

பண்டிதர் நாயக், நன்னன் நந்தவாரில் இருந்து வந்ததாகவும் நந்தர்களைப்போல இழிகுலத்தவ னென்றும் கூறினர்.

நந்தவார் என்ற ஊர் மங்களூருக்கு அருகில் உள்ளது. இந்தச் செவிவழிச் செய்தியும் ஆராயத்தக்கது.

நந்தர்கள் **மகாபதுமம்** என்ற ஒரு பேரளவு சொத்தைப் பதுக்கி வைத்திருந்தனர் என்று நந்தர் வரலாறு கூறும் இச்செய்தியை அகநானூறும் கூறியுள்ளது.

''நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி வெல்கொடி''

- *அகம்.* 251

''பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ''

- *அகம்.* 265.

தொடர்புபடுத்துவன

நந்தர் பாடலியில் கங்கை நீரில் சேர்த்து மறைத்த நிதியம் போல நன்னனும் அவனுடைய முன்னோர்

களான தொன்முதிர்வேளிரும் பொன்னைப் பாழி நீரில் சேர்த்துப் பாதுகாத்தனர்.

பிற்காலத்தில் இந்த இரு செய்திகளையும் தொடர்புபடுத்தி நந்தனுடன் நன்னனைத் தொடர்பு படுத்தினர் போல் தெரிகின்றது.

நந்தர்களில் நவநந்தர்கள் இருந்தனர். அவர்களே நிதியம் சேர்த்தனர் என்பர். நன்னனும், அவன் மூதாதையரும் பெருநிதி சேர்த்தனர் என்று அகநானூறு கூறியுள்ளது.

நந்தர் என்ற பெயரைப் போலவே நன்னன் என்ற பெயர் நன்னன் பரம்பரைக்கே வழங்கி வருவதாகத் தெரிகின்றது.

நந்தர்களை நாவிதக் குலம் என்று செவிவழிச் செய்தி கூறும். அது போலவே நன்னனைத் தோலில் தொழில் செய்யும் மடிகர் குலமென்று வட மலையாளத்தில் கூறுகின்றனர்.

ஆனால், நன்னன் முடிமன்னர்க்கு மகட்கொடை கொடுக்கும் உரிமை பெற்ற வேளிர் குலத்தினன், அதுவும் தொன்முதிர் வேளிர் குலத்தினன் என்பதைப் பிற்கால மக்கள் மறந்தனர். ஆனால் அவ்வாறு கருதினதிற்குக் காரணம் ஒன்று தெரிகின்றது.

கட்டுக்கதைகள்

நன்னன் பறம்பில் வாழ்ந்த காரோடன் மாராகிய பறம்பரைத் (பறம்பு நகரில் வாழ்ந்தோர்) தோலில்

தொழில் செய்ததால் இழி குலத்தினராக ஆக்கினர். அதோடு நில்லாமல் அந்தப் பறம்புக்கு முற்காலத்தில் உரியவனாக இருந்த நன்னனையும் இழி குலத்தவனாக்கி அதற்கேற்ப நன்னன் பாதுகாத்த பொன்னைத் தோல் நாணயங்கள் என்று கதை கட்டினர்.

நன்னன் பறம்பில் வாழ்ந்த பறம்பரைக் கொண்டு தோல்நாணயங்களைச் செய்து கொண்டதாகக் கதை படைத்துக் கொண்டனர் போலும்.

இந்திய வரலாற்றில் **துக்ளக்** என்பவன்தான் தோல் நாணயங்களை அடித்ததாகக் கூறுவர். அவனுக்கு வெகுகாலத்துக்கு முன்னரே நன்னன் தோல் நாணயம் அடித்ததாகக் கூறியது அருமையான கதையாகும்.

நாயக் கூறிய வேறு சில செய்திகளும் உண்டு.

நன்னனுடைய மனைவி நாட்டியக்காரியாம், அவனுடைய மகன் சந்திர சயனா என்பவன் நல்லகுணமுடையவனாம். தந்தையான நன்னனுக்கு நல்லுரை கூறிக் கொடுமையை விடச் சொன்னானாம். ஆனால் நன்னன் இந்த நல்லுரைக்குச் செவிசாய்க்க வில்லையாம்.

மன்னர் மரபினர்

கேரளத்தில் நன்னனைப் பெரிய மன்னனாகக் கருதினதற்கு வேறொரு சான்றும் உள்ளது.

முதுமக்கள் தாழிகளைப் புதைக்கும் இடுகாடுகளை இன்றும் **நன்னங்காடி** என்று அழைக்கின்றனர். முதுமக்கள் தாழியை நன்னங்காடிக் குடங்கள் என்றழைக் கின்றனர்.

இவ்வாறு சிறந்த அரசபரம்பரையின் பெயரால் முதுமக்கள் தாழியைப் பெயரிட்டழைப்பது கன்னட நாட்டிலும் பழக்கமென்று தெரிகின்றது. கன்னட நாட்டில் இதையே **'மோரியர் மனை', 'மோரியரங்காடி'** என்று அழைக்கின்றனர். மோரிய அரசர்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவதைக் கவனிக்கலாம்.

சங்க நூல்களில் மோரியர் படையெடுப்பு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

சந்திரகுப்த மௌரியன் தன் இறுதிக் காலத்தில் கன்னட நாட்டில் தவம் புரிந்து **சல்லேகனம்** செய்ததாக சைன நூல்கள் கூறுகின்றன.

புதைக்கப்பட்ட இடம்

சேரமானங்காடி என்ற ஊரில் குடக்கல் பறம்பு உள்ளது இங்கு குடைபோன்ற கல்லுக்கடியில் இறந்தவர்கள் புதைக்கப்பட்டனர்.

பதிற்றுப்பத்தில் 'மன்னர் மறைத்த தாழி வன்னி மன்றத்து விளங்கிய காடே'' (44. 22-23) என்று வரும் வரியில், சேரமன்னர்கள் தாழியில் புதைக்கப் பட்டனர் என்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது இச்

செய்தி சேரமானங்காடி என்ற பெயர் தோன்றிய தொடர்பைக் காட்டுகின்றது.

பெயர் பெற்ற அரச பரம்பரையோடு முதுமக்கள் தாழிகள் இருக்கும் இடுகாட்டைப் பெயரிட்டு அழைப்பது வழக்கமென்று தெரிகின்றது.

நன்னன் பெரிய அரசனாயிருந்ததால் 'நன்னங் காடி' என்று அழைக்கின்றனர் என்று தெரிகின்றது.

பேரிசை மன்னன்

மதுரைக் காஞ்சியில் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டிய மாங்குடி மருதனார், சேர மன்னனின் பிறந்தநாள் விழாவின் மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கூறி, அதே பாட்டில், நன்னன் பிறந்தநாளும் கொண்டாடப் பட்டதாகக் கூறியுள்ளார். நன்னனைப் பேரிசை மன்னன் (615-619) என்று புகழ்ந்து கூறியுள்ளார்.

ஆதலின் நன்னன் புகழ்பெற்ற மன்னனாக சங்ககாலத்திலேயே மதிக்கப்பட்டான் என்பது தெளிவாகின்றது.

வடமலையாளத்தில் நன்னனைத் தவிர, சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள **நள்ளன்** முதலிய குறுநிலத் தலைவர்களைப் பற்றியும் செவிவழிச் செய்திகள் உள்ளன.

அள்ளன் – அள்ளோன்

அகநானூறு 325ஆம் பாடலில் **அள்ளன்** என்பானை நாட்டைக் கொள்ளுமாறு பணித்த **அதியன்** என்பவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

வடமலையாளத்துத் தெய்வ ஆட்டக் கதைகளில் அள்ளோன் என்ற நாடுவாழியைப் பற்றிக் காஞ்சரங் காட்டில் சொல்லப்படுகின்றது.

அள்ளோன் என்பவன் சங்கப் பாடலில் வரும் அள்ளனாக இருக்கலாம். அந்த அள்ளோன் வழி வந்தவர்களே கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால் இங்கு ஆண்ட ஆளுவ அரசர்கள் என்று கருதலாம்.

ஆளுவர் என்ற பெயரை ஆள்பவர்கள் என்ற பொருளில் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் 'மாளுவர்' என்று வரும் பெயருக்கு 'பாட மாற்றமாக 'ஆளுவர்' என்ற சொல் இருக்கலாம் என்றும், அது ஆளுவ அரசரைக் குறிப்பதாகச் சில அறிஞர்கள் கொள்வர்-

அறிஞர் ரா. இராகவையங்கார் 'திதியன் என்ற குறுநிலத் தலைவன் வாழ்ந்த **அழுந்தூர்** குடமலை நாட்டிலுள்ளது' என்று கூறினார்.

வெளியன் வேண்மான் ஆய் எயினன், மிஞிலி யொடு செய்த போரில் புண்ணுற்றபோது அவனது மகளிர் அடைந்த துன்பத்தை **அகுதை** என்ற தலைவன் களைந்தான் என்று அகப்பாடல் (208) நன்கு கூறுகின்றது.

கூடல் எனும் ஊர்கள்

இவன் வாழ்ந்த 'அகுதை கூடல்' வட மலையாளத்தில் உள்ள கடற்கரை யூராகும். இது இன்று 'கூடலு' என்று அழைக்கப்படுகின்றது.

"மணநாறு மார்பின்மறப் போர் அகுதை
குண்டுநீர் வரைப்பின் கூடல்"

(புறம். 347)

என்று கூறியிருப்பதால், அகுதையின் கூடல் கடற் கரையூராகும்.

இது தமிழகத்து மதுரையாக இருக்க முடியாது.

சங்க காலத்திலேயே கூடல் என்ற ஊர்கள் சில இருந்திருக்க வேண்டும். அவற்றில் **தமிழ்கெழு கூடலே** மதுரை யெனப்பட்டது.

வெளியன் வேண்மான் ஆய் எயினன், பாழிப் பறந்தலையில் மிஞிலியுடன் பகலில் போரிட்டுப் புண்ணுற்றபோது புள்ளொருங்கு சூழ்ந்து சிறகுகளால் நிழல் செய்தன என்று அகநானூறு (208) கூறியுள்ளது.

மற்றும் இன்னொரு அகப்பாட்டில், புள்ளிற்கு 'ஏமம்' ஆனவன் இவன் என்றும் கூறப்பட்டுள்ளது.

புள்ளூர்

ஏழில் மலைக்குச் சிறிது தொலைவில் 'புள்ளூர்' என்ற ஊர் உள்ளது. இப்பெயர் எயினனை வெயிலி

னின்று காத்த புள்ளின் நினைவாக வந்ததாக இருக்கலாம்.

கண்ணனூருக்கு அருகில் உள்ள **வெளியனூர்** வெளியன் வேண்மான் எயினன் இருந்த ஊராகலாம்.

பரசுராமர் ஏற்படுத்திய 64 பழைய ஊர்களில் 'வெளியன்னூரு' என்ற ஊரைக் கேரளோற்பத்தி நூல் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

நற்றிணை (180) அன்னியும் பெரியனும் பொருது அழிந்தனர் என்று கூறுகின்றது.

அன்னிமிஞிலி எயினனைத் தோற்கடித்தவன். நன்னனது பாரத்தைக் கைப்பற்றினவன்.

பெரியன் என்பவனின் பெயரின் நினைவாக 'பெரியெ', 'பெரியன்' என்ற ஊர் தோன்றியிருக்கலாம். இந்த ஊர் புள்ளூருக்கு அருகில் உள்ளது.

கொண்கானம்

கொண்கானங்கிழான் என்ற வேளாளர் தலைவனைப் பற்றிப் புறநானூற்றுப் பாடல்கள் (151, 154, 155) கூறுகின்றன. இந்தக் கொண்கானங்கிழான் தென்கன்னடத்தில் வாழ்ந்த வேளாளர் தலைவனாகத் தெரிகின்றது.

பெல்லாள ராஜாக்கள் என்றவர் தென் கன்னடத்தில் சில பகுதிகளை ஆண்டனர் என்று வரலாறு கூறும். துளுவ வேளாளர் வகுப்பைச்

சேர்ந்தவராக இவர் கருதப்படுவர். கொண்கானங் கிழானும் இந்த வகுப்பைச் சேர்ந்தவனாகக் கருதலாம்.

கானங்காடு

வடமலையாளத்தில் **கன்னங்காடு** என்று இப்போது அழைக்கப்படும் பகுதியே நன்னன் நாடான கானங்காடு ஆகும். இங்குக் கன்னங்காட்டு பகவதி மிகவும் முக்கியமான தெய்வமாகும்.

பகவதி வழிபாடு

கொற்றிக்கன்னங்காடு என்ற இடத்தில் இன்றும் இந்த பகவதி தொழப்படுகிறாள்.

ஓங்கு புகழ் கானமர் செல்வி ஏழிற்குன்றத்தில் இருந்ததாகக் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

'கானமர் நன்னன் (அகம் 392) என்று கூறப் படுவதை நோக்கலாம்.

இன்றும் இந்தக் கானங் காட்டுப் பகுதியிலும் ஏழில்மலையருகிலும் பல கோயில்களில் வன துர்க்கை வழிபாடும் தேவி வணக்கமும் மிகவும் சிறப்புடன் நடைபெறுவதைக் காணலாம்.

கொற்றிக் கன்னங்காடு என்பதைக் கன்னங் காட்டுக்கொற்றி என்று கொள்ளவேண்டும். கானமர் செல்வியே கானங்காட்டு கொற்றி என்றழைக்கப் பட்டாள்.

இங்குள்ள பல தேவி கோயில்களிலும் பூசை செய்பவர்கள் **மணியாணி** என்ற மணமாகாத பூசாரிகளாவர்.

கானமர் செல்வி

நன்னன் காலத்துக் கானமர் செல்வியே வன துர்க்கையாகவும் தேவியாகவும் மாறியதாகத் தெரிகின்றது. துளுவக் கானத்து பகவதியும் துளு நாட்டில் தொழப்படுகின்றாள். இங்குக் **கானத்தூர்** என்ற ஊரும் உள்ளது.

நன்னன் நினைவுகள் இன்றும் வட மலையாளத்தில் காண்பது வியப்புக்குரியது.

நேரில் சென்று சங்க நூல்களில் கூறப்பட்ட ஊர்களையும் இடங்களையும் ஆராய்ந்தால் வடமலையாளத்தில் இன்னும் பல அரிய நினைவுச் செய்திகள் கிடைக்கலாம்.

1 & 2 Foreign notices of South India Collected and edited by K.A. Nilakanta Sastri.

3. Age of Nandas and Mouryas - Edited by K.A. Nilakanta Sastri. On a passage on Strabo, Onascritus is said to have represented the country of "Mousikanos' in the most southernly part of India.

4. South Kanara Gazeteer.

5. பல்லவர் செப்பேடுகள் முப்பது - தமிழ் வரலாற்றுக் கழகம்.

6. பண்டைய கேரளம் - குஞ்சன் பிள்ளை.

7. கோசர்-ரா. இராகவையங்கார்.

2

தமிழில் விலக்கப்பட்ட சொல் வழக்குகள்

பழங்குடி மக்கள் சமுதாயத்தில், ஒரு பெண் மாத விலக்காகி இருக்கும்போது தொடக் கூடாது என்ற கட்டுப்பாடு இருப்பதை, மானிடவியல் ஆராய்ச்சி யாளர்கள் விரிவாக ஆராய்ந்து கூறியுள்ளனர்.

வீட்டு விலக்கு

சில சாதி மக்களிடம் வீட்டுக்கு விலக்கான பெண்ணைத் தொடக்கூடாது என்னும் தடை நடை முறையில் இருக்கின்றது. இந்த வழக்கு கேரளத்திலும் தமிழ்நாட்டில் வாழும் பல பழங்குடி மக்களிடம் இன்றும் காணப்படுகிறது. ஆனால், இந்த வழக்கம் தமிழ்நாட்டில் பிராமணர்களிடையே ஓரளவு இன்றும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வீட்டுக்குத் தூரமானபோது சமையலறைக்குள் செல்லாதிருப்பது, சமையல் பாத்திரங்களைத் தொடாமலிருப்பது ஆகிய ஆசாரங்களைச் சில வைதீக பிராமணர் குடும்பங்களில் இன்றும் காணலாம்.

பிராமணரல்லாத சாதிகளில் இந்தப் பழக்கங்கள் இன்று மறைந்து கொண்டிருக்கவும், பழங்குடி மக்களின் இந்தப் பழக்கத்தை பிராமண சமுதாயம் கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆரியர்களிடையே இந்த விலக்கு இருந்ததாகத் தெரியவில்லை. வீட்டுக்குத் தூரம் என்ற விலக்குப் பெண்ணின் உடலில் இருந்து இயற்கையாக வெளிவந்த இரத்தத்தைக் கண்டு பழங்கால மனிதன் அடைந்த அச்சத்தினால் முதலில் தோன்றியதாகும். பின்னர் அது சடங்கு, மதம் முதலியவற்றுடன் கலந்து உருமாறிற்று.

நம்பிக்கைகள்

வீட்டுக்குத் தூரமான பெண்ணின் கை பட்டால் தேனீக்கள் சாகும்; இரும்பு துரு பிடிக்கும்; கரடி நாய்களுக்கு வெறிபிடிக்கும்; மனிதன் குடிக்கிற கள் காடியாகும்; பயிர் பதராகும் என்று மலையாளப் புலையர்கள் கருதுவதைக் கவனிக்க வேண்டும்.

உணவைச் சேகரித்துண்ணும் நாகரிகத்தில் வாழ்ந்த (Foodgathering civilisation) புலையர்களிடையே இந்த வகையான நம்பிக்கை இருந்ததில் வியப்பு இல்லை.

முளைத்த பயிர் சாவியாகும் என்ற நம்பிக்கை உணவைச் சேகரித்து வாழும் நாகரிகத்திலிருந்து

முன்னேறி உழவுத் தொழில் நாகரிகம் தோன்றிய பிறகு இரும்பு துருப் பிடிக்கும் என்று கருதியிருப்பர்.

அமாவாசை தினத்தன்று, சந்திரன் வீட்டுக்கு விலக்காக இருப்பதாகவும் முதுவர்கள் நம்புகின்றனர்.

மத்தியப் பிரதேசத்தில்

மத்தியப் பிரதேசத்தில் மாதவிலக்கான பெண் தானியக் களஞ்சியத்தையோ அம்மிக்கல்லையோ தொடக்கூடாது என்ற தடை உள்ளது. மாதவிலக்குப் போலவே பெண் பெரியவளானபோதும், ருதுவான போதும் சில நாட்கள் விலக்கு இருப்பது உண்டு. அது போலப் பேறு காலத்திலும், பிரசவ காலத்திலும் தாய்க்கு விலக்கு உண்டு.

மலபண்டார இனக் குடியினரும் **மலையரைய** இனக் குடியினரும் பெண்ணின் மாதவிலக்குத் தடையை விட, பெண்ணின் பேறுகால விலக்கையே பெரிதாகக் கருதுகின்றனர்.

மலையரையர்களின் மனைவியின் பேறுகாலத்தில் கணவன் வேலை செய்யக்கூடாது. முக்கியமாக பதினான்கு நாட்களுக்கு பயிர் அறுவடை செய்யக் கூடாது என்ற தடை இருக்கிறது. இந்த விலக்கு எல்லாம் பெண்ணின் உடலிலிருந்து வெளியேறும் ரத்தத்தைக் கண்டு பழங்குடி மக்கள் அச்சப்பட்டதன் காரணமாகத் தோன்றியதே.

மனித சமுதாயத்தில் ஒவ்வொரு குழுவிலும் தொடத் தகாதவை, தின்னத் தகாதவை, பேசத் தகாதவை என்று விலக்கப்பட்டவை உள்ளன.

தமிழ் இலக்கண உரையாசிரியர்கள் **பொறையுயிர்த்தல்** என்ற வழக்கை இடக்கர் அடக்குதலாகக் கூறுவர். அதாவது சொல்லத்தகாத ஒரு வழக்கை வேறு மரபினால் கூறுதல்.

தடைகள் பல

பேறு காலத்தில் இரத்தம் வெளிப்படும் காரணத்தாலே இந்தத் தடை வழக்குத் தோன்றியது.

யூதர்களிடையே குளம்புடையவற்றைத் தின்னக் கூடாது என்ற தடை உண்டு. அதுபோல இஸ்லாமியர் இடையே பன்றியைத் தின்னக்கூடாது என்ற தடை உண்டு.

போற்றி வளர்க்கும் விலங்குகளையும் பறவை களையும் தின்னக்கூடாது என்ற தடையை எல்லாச் சமுதாயங்களிலும் காணலாம். கிளி, மைனா, நாய், பூனை ஆகியவற்றைக் கொன்று தின்னக்கூடாது என்ற விலக்கு உள்ளது.

இந்தத் தடைகள் பெரும்பாலும் மதச்சார்புள்ளவை யாகவே இருக்கின்றன. பழக்க வழக்கங்கள் காரணமாகவும் இத்தகைய விலங்குகள் தோன்றுவது உண்டு.

பழங்குடி மக்களிடையே உள்ள குழுக்களுக்கு அடையாளமாக விலங்குகள், பறவைகள், செடிகள், மரங்கள் இருப்பதுண்டு. அந்த அடையாள உயிர் களையோ செடியையோ உண்பது தடை செய்யப் பட்டுள்ளது.

பழைய நூல்கள்

மாட்டைத் தின்னக்கூடாது என்ற தடை சங்ககாலத்திலேயே இருந்தது. 'ஆன்முலை யறுத்த அறனிலோர்' என்று புறநானூறு புகல்கிறது.

ஆயினும், சங்ககாலத்தில் மழவர் போன்ற பழங்குடியினர் மாட்டைத் தின்றனர். கொழுப்பான ஆவைத் தின்றதாக அகநானூறு (309) கூறியுள்ளது.

சைவ நாயன்மார் காலத்தில் "ஆவுரித்து தின்றுழலும் புலையர்" பெரிய பாவிகளாகக் கருதப்பட்டனர்.

மாடு தின்ற ஆரியர்

வேத காலத்தில் ஆரியர்கள் மாட்டைத் தின்று வந்தனர். ஆனால் பிற்காலத்தில் சமணர், பௌத்தர்களின் கொல்லா நோன்புக் கொள்கைப் போராட்டத்தின் விளைவாக **ஆரியர்களில் பிராமணர்கள்** கொல்லா நோன்பைக் கடைப் பிடித்தனர். நான்கு வருணத்தினரும் மாட்டைத் தின்பது தடை செய்யப்பட்டது.

நான்கு வருணத்தினருக்கு அப்பாற்பட்டவராகக் கருதப்பட்ட புலையர் போன்ற பழங்குடி மக்களுக்கு மாட்டைத் தின்பது தடையாக்கப்படவில்லை. மாட்டைத் தின்பது தடையானதினால் இக்காலத்திலும் மாட்டுக் கறியை, 'பெரிய ஆட்டுக்கறி' என்று மறைத்துக் கூறும் வழக்கைக் காணலாம்.

தவளை உண்ணும் பழக்கம்

பிரெஞ்சுக்காரர் தொடர்பால் புதுச்சேரிப் பகுதியில் பச்சைத் தவளையைத் தின்னும் வழக்கம் தமிழர் சிலரிடையே பரவியுள்ளது. இருப்பினும், தவளையைத் தின்னுவதற்குத் தமிழரிடையே தடை உள்ளதால், தவளையை விற்போர் தமிழில் தவளை என்று கூவாமல் ''மண்டுக் மண்டுக்'' என்ற வடசொற் பெயரால், புதுவைத் தெருக்களில் கூவி விற்கின்றனர். இன்னும் தவளை தின்பவர்களிடையே தவளையை 'மணல் காடை' என்று கூறும் வழக்கமுண்டு.

விதிவிலக்கு

'மண்டூக்' என்பது ஒரு (Taboo usage) தடை வழக்காகும். இந்துமத நூற்களில் எச்சிலான உணவு (Saliva Taboo) ஒரு தடையாகும். இதை 'உச்சிஷ்டம்' என்று சொல்வர். ஆனால் இதற்கும் இரண்டு விலக்குவிதி கூறியுள்ளனர்.

காதலர்களின் முத்தத்தில் எச்சில் படுவது தடையில்லை. இரண்டாவதாக, வேட்டைநாய் வாயால்

கௌவிக் கொண்டுவந்த உணவைத் தின்பதில் தடையில்லை. ஆனால் வீட்டு நாய் எச்சில் பட்டால் தடையாகும்.

பார்ப்பார் தின்பர்

இதைப் **பழமொழி நானூறு** என்ற தமிழ்நூலும் குறிப்பிட்டுள்ளது. ''நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு'' (பழமொழி. 6) என்ற பழமொழியாகக் கூறியுள்ளது.

சங்கநூல்களில் வீட்டு நாய்கள் பார்ப்பார் வீட்டில் புகுவதில்லை என்று கூறியுள்ளது. எச்சில் தடைக்குப் பயந்து வீட்டு நாயை வளர்க்காத பார்ப்பனரும், வேட்டை நாய் கொண்டுவந்த உடும்பைத் தின்பர் என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

வேட்டைநாய் கொண்டுவந்த பொருள் உணவாக இருக்கத் தடையில்லை (Game retrived by a hunting dog is acceptable as food) என்ற வடமொழி வழக்கு வைதீக வழக்கினரிடையேயும் இருந்தது என்பதைப் பழமொழி நானூறு இங்குச் சுட்டிக் காட்டுகின்றது.

மாடுகளைத் தின்னத் தடை

மாட்டைத் தின்னக்கூடாது என்ற தடை தோன்றிப் பழங்குடி மக்களிடமும் பரவியதும், மாடு போன்ற நான்கு காலுடைய உயிரற்ற செயற்கைப் பொருள் களைக்கூடத் தூக்கக்கூடாது என்ற தடைவழக்கும் (Taboo) ஏற்பட்டது.

நான்கு கால்களுக்கும் தடை

குடகு மக்களிடையே நான்கு காலுடைய விலங்குகளையோ, நான்கு காலுடைய நாற்காலி, கட்டில்களையோ, இரு நூறாண்டுகளுக்கு முன் தூக்குவதற்குத் தடை இருந்தது.

நடு இந்தியாவில் வாழும் திராவிடப் பழங்குடி மக்களாகிய **பைகர்**களிடையேயும் இந்தத் தடை வழக்கு உள்ளது.

பைகர்களின் பெண்கள் நான்கு கால்களுடைய கட்டிலிலோ நாற்காலியிலோ படுக்கவும் உட்காரவும் மாட்டார்கள்.

இதுபோன்றே **பாகுடர்** என்ற தெற்குக் கன்னடப் பகுதியில் வாழும் குடிகள், ஆங்கிலேயர் காலத்தில் நான்கு கால்களை உடைய கட்டிலைத் தூக்கிச் செல்ல மறுத்தார்கள்.

நான்கு கால்களில் ஒரு காலை முறித்தால் ஒழிய நான்கு காலுடைய கட்டிலைத் தூக்க மறுத்தனர்.

இதற்குக் காரணம், நான்கு காலையுடைய மாட்டோடு நான்கு காலையுடைய கட்டிலை ஒப்பிட்டுப் பார்ப்பதாகும் – என்று தர்ஸ்டன் என்ற பேரறிஞர் கூறியுள்ளார். அது மிகவும் உண்மையே. அதற்கு அடிப்படைக் காரணத்தைத் தமிழில் காணலாம்.

நாற்காலி என்ற சொல் தமிழில் நான்கு காலை யுடைய மாட்டைக் குறித்தே பெரும்பாலும்

வழங்கியது. ஆதலின் மாட்டைக் கொல்லக்கூடாது என்ற தடை ஏற்பட்ட பிறகு நான்கு காலுடைய நாற்காலியையும் தூக்க மறுத்தனர்.

கன்றுகாலி என்ற வழக்கு மாட்டையும் கன்றையும் குறித்து வழங்கியது. இந்த மரபு எந்த அளவு தடை வழக்குகள் (Taboos), பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்டு நாட்டு மக்களிடையே வழங்கும் என்பதைக் காட்டுகின்றது.

நகங்களை வைத்துத் தடை

யூதர்களிடையே கிறிஸ்து பிறந்த காலத்திற்கு முற்பட்டே சில விலங்குகளை உண்பதில் தடை இருந்தது. இந்தத் தடை – விலங்குகளின் நகத்தின் எண்ணிக்கையைப் பொறுத்து இருந்தது.

ஆனால் இந்தியாவில் இந்தத் தடை விலங்கின் பயனைப் பொறுத்து வழங்கியது. பசு, பால் தருவதால் பசு மாட்டைக் கொல்லக்கூடாது என்ற தடை வழக்கு வந்தது. ஆனால் இன்று இந்தத் தடை வழக்குகளில் அறிவியல் காரணம் ஒன்றுமேயில்லை.

பொருந்துமா?

சங்கராச்சாரியர்கள் பலவகைக் காரணங்கள் கூறினாலும், வேத சம்பந்தமாக விளக்கங்கள் கூறினாலும், பகுத்தறிவு அடிப்படையான காரணங்கள் கூறவில்லை. ஆனால் இவையெல்லாம் பிற்காலத்தில் வந்த தடை வழக்குகளேயன்றி வேறில்லை.

பார்ப்பார் உடும்பைத் தின்னலாம்; ஆனால் மாட்டைத் தின்னக்கூடாது, ஆட்டைத் தின்னக் கூடாது என்பதில், பகுத்தறிவுக்கொத்த காரணம் யாரும் சொல்லமுடியாது. இத்தகைய தடை வழக்குகள் மரபின் வழியாக, பரம்பரையின் வழியாக வந்தவை.

ஆட்டைத் தின்பவர் மாட்டைத் தின்னக்கூடாது என்பதில் பகுத்தறிவுக்கொத்த எந்தக் காரணமும் இல்லை.

ஆயினும் மத, சமூக, பொருளாதார நிலையில் தடைகள் பின்பற்றப்படுகின்றன; மீறவும் படுகின்றன. பிராமணர்களிலும் சிலர் தூய ஆசாரத்தைக் கடைப்பிடிப்பதற்காக வெளிநாட்டில் இருந்து வந்த பதார்த்தங்கள் என்று வெங்காயம், உருளைக்கிழங்கு முதலிய பொருட்களை ஒதுக்கி வருவது கவனிக்கத் தக்கது.

சாதி உயர்வுக்கு

சாதியில் உயர்ந்தவர்களாக வேண்டும் என்று கருதும் குடிகள் மாட்டைத் தின்பதை விட்டு விட்டனர்.

இன்று சில அசைவச் சாதியினர் இறைச்சியைச் சாப்பிடுவதை விலக்குகின்றனர். இந்தச் சாதியினரில் ஒரு முக்கிய பிரிவினரே சைவ வேளாளர்.

இந்த வேளாளருடைய வரலாற்றை ஆராய்ந்தால் அவர்கள் ஆதியில் சைவ உணவை உட்கொள்பவர் அல்லர். ஆயினும், தங்களுடைய சாதியை உயர்த்து

வத்றகாகவும் பிராமணர்களோடு சாதியில் சம உயர்வு பெறுவதற்காகவும் புலால் உணவு உண்பதை நீக்கினர்.

அவர்கள் பிராமணர்களை அரசியல், சமூக நிலையில் எதிர்த்தாலும், பிராமண சமூகத்தைப் போன்று முன்னேறுவதற்கும், உயர்ந்த சாதியாகப் பிற சாதியினர் மதிக்க வேண்டுமென்பதற்காகவும், பிராமணரைப் பின்பற்றிப் புலால் உண்ணாமையைக் கைக்கொண்டனர். இதை Sanskritisation என்று என்.எம். சீனுவாசன் என்ற அறிஞர் கூறுவர்.

சமஸ்கிருதப் பண்பாட்டை வெறுத்தவர்களே சமஸ்கிருதப் பண்பாடு என்று கருதப்பட்ட வழக்கைப் பின்பற்றித் தம்மை உயர்ந்த சாதியாக்கிக் கொண்டது கவனிக்கத்தக்கதாகும்.

அடையாளம், குலக்குறி

ஒரு குழுவிற்கு மயில் அடையாளப் பறவையாக, குலக்குறியாக இருந்தால் அக்குழுவினர் மயிலை உண்பது தடை செய்யப்படும்.

ஒருவர் பெயரை மற்றொருவர் உச்சரிக்கக்கூடாது என்ற தடையும் சில பழங்குடி மக்களிடையே உள்ளது. பேரறிஞர் பிரேசர் அதற்குக் காரணம் கூறியுள்ளார்.

பழங்குடி மக்கள் இயற்கை உருவங்களைத் தெய்வமாக வணங்கினர் அவற்றின் பெயர்களை மனிதர்களுக்கு இட்டு வழங்கினர்; ஆதலின் அப்

பெயர்களை உச்சரிக்கும்போது தெய்வம் கெடுதல் செய்யும் என்று அஞ்சினர் என்று பிரேசர் கூறியுள்ளார்.

பெயர்கள் சொல்லவும் தடை

ஆனால் தமிழ்நாட்டில் கணவன் பெயரை உச்சரிக்கக்கூடாது என்ற மரபு இன்றும் உள்ளது. இது இந்துக்களிடையே மட்டுமன்றி, தமிழகக் கிருத்துவர் களிடையேயும் உள்ளது. இந்தியாவில் பல மாநிலங்களிலும் இந்தப் பழக்கம் உள்ளது.

அதுபோல மாமியார், மாமனார் பெயரைச் சொல்லக்கூடாது. பெயரைச் சொல்லவேண்டு மானால் மறைமுகமாக வேறு பொருள்களின் பெயரைச் சொல்லிக் குறிப்பாக உணர்த்தும் போக்கையும் காணலாம். சில பழங்குடி மக்களிடம் தானே தன் பெயரைச் சொல்லக்கூடாது என்ற தடையும் உண்டு.

ஊமன் – பெயர்

ஆந்தைதன் பெயரைத் தானே திருப்பித் திருப்பிச் சொல்வதாக நாகர்கள் கூறுவர். சிவப்பு இந்தியர்களும் இவ்வாறே கூறுவர்.

'ஊம், ஊம்' என்று திருப்பித் திருப்பிச் சொல் வதால் ஆந்தைக்கு 'ஊமன்' என்ற பெயர் தமிழில் வழங்குவதைக் காணலாம். இப்பெயர் சங்க காலத்தி லேயே வழங்கியிருக்கு மென்பதற்குச் சான்று

உள்ளது. இந்த நம்பிக்கையும் பழந்தமிழரிடையே இருந்து இருக்கலாம்.

இவ்வாறு உண்பதில் தடை இருப்பது போல, மனிதர் பெயரைச் சொல்லக்கூடாது என்ற தடை இருப்பது போல, பேசுவதிலும் சொல்லத் தகாதவை என்று சில வழக்குகள் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வழக்குகள் பழங்குடி மக்களிடையே மிகுதியாகக் காணப்படுகின்றன.

இனக்குழு மக்களிடையே பெரும்பாலும் காணப் படும் வழக்குகள் அம்மக்கள் நாகரிகம் அடையும் போது சிறுகச்சிறுக மறைந்துவிடுகின்றன.

திராவிடப் பழங்குடிகளிடையே இத்தகைய வழக்குகள் வழங்கினும் தமிழைப் போன்ற பண்பட்ட மொழி பேசுவோரிடையே, தமிழ்ழைப்போன்ற நாகரிகம் அடைந்தவ்ரிடையே சொல்லுவதற்கு விலக்கப்பட்ட இத்தகைய வழக்குகளைக் காண்பது அரிதாக உள்ளது. இருப்பினும் தமிழ் இலக்கணம் இந்த வழக்கினை ஓரளவு இனங்கண்டு கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மாற்றிச் சொல்லும் முறை

ஆதலின் பழந்தமிழரிடையேயும் சொல்வதற்கு விலக்கப்பட்ட வழக்குகள் பண்டைக்காலத்தில் வழங்கியிருக்க வேண்டுமென்று தெரிகின்றது.

தொல்காப்பியத்திலேயே அத்தகைய வழக்குகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே

- *தொல்.சொல். சூத்திரம். 17.*

சொல்லத்தகாத வழக்கைச் சொல்வதற்குத் தக்கதாக மாற்றிச் சொல்லவேண்டும் என்பதே மேலே காட்டிய சூத்திரத்தில் தொல்காப்பியர் கூறியதாகும். அம்முறையாக மாற்றிச் சொல்லும் வழக்குகளைத் தகுதி வழக்குகள் என்று கூறினர்.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய மிகப் பிற்கால உரையாசிரியர்கள் காட்டின வழக்குகளை ஆராய்ந்தால், அவை மனித சமுதாயத்தில் மதச் சார்பாலும் பழக்க வழக்கங்களாலும் தோன்றி வழங்கின என்பது தெளிவாகின்றது.

மங்கலச் சொல்

சுடுகாட்டை **நன்காடு** என்று கூறும் வழக்கையும், உரையாசிரியர்கள் கூறும் **'தாலி பெருகிற்று'** என்ற வழக்கையும் கவனிக்க வேண்டும். தாலி அறுந்தது என்று சொல்வது, வாயால் சொல்லத் தகாதது என்று கருதினதால் தாலிபெருகிற்று என்று கூறினர்.

இதேபோல் திருமணம் செய்யத் 'தாலி வாங்கப் போகிறோம்' 'தாலி எடுக்கப்போகிறோம்' என்ற

வார்த்தைகளைக் கூறுவதில்லை. ஏனெனில் இவ் வார்த்தைகள் தாலி இழப்புக்கு உபயோகப்படுத்துவதைக் குறிப்பவை என்பதால், இவ் வார்த்தைக்குப் பதிலாகத் 'தாலி செய்யப்போகிறோம்' என்றே கூறுவார்கள்.

இந்த வழக்கு 13ஆம் நூற்றாண்டில் வழங்கியதாகத் தெரிகின்றது. சங்க காலத்தில் தாலி கட்டும் வழக்கமில்லை. ஆதலின் தொல்காப்பியர் இந்த வழக்கைக் குறித்துக் கூறியிருக்கமாட்டார்.

ஆனால், இக்காலத்தில் 'தாலி அறுந்தது' என்று சொல்லும் வழக்கு, சொல்லத்தகாத வழக்காகக் கருதப்படவில்லை. அந்த வழக்கு கைம்பெண்கள் மறுமணம் எளிதாகச் செய்ய இடந்தரும் இனக்குழு மக்களிடம் (Tribals) சாதியினரிடமும் இருந்திருக்க முடியாது.

தாலி அறுந்தால் மறுவாழ்வு இல்லை என்ற வழக்கம் இருந்த சமுதாயத்திலேயே தாலி அறுந்தது என்று வாயால் சொல்வதே தவறு என்று கருதப்பட்டு, அவ்வாறு சொல்வதற்குத் தடை வந்திருக்கும்.

உயர்வுக்கு உரியது

இந்த வழக்கு இனக்குழு மக்களிடமும் தாழ்ந்த சாதியினராகக் கருதப்படும் மக்களிடமும் இருந்திருக்க முடியாது. பிராமணர், வேளாளர் முதலிய உயர்ந்த சாதியினரிடமே இவ்வழக்கு இருந்திருக்க முடியும். அவர்களில் விதவைகள் மறுமணம் செய்வது

தடைசெய்யப்பட்டு, அதுவே உயர்ந்த சாதிக்குரிய ஒழுக்கமாகக் கருதப்பட்டது.

பத்து எனப் பயம்

பத்து என்ற சொல்லைச் சில தமிழர் அக்காலத்தில் கூறப் பயந்தனர் என்று எட்கார் தர்ஸ்டன் கூறியிருக்கின்றார். கணவன் செத்த பத்தாம் நாள் விதவை தாலியை அறுப்பதால் பத்து என்ற சொல்லைக் கூற அஞ்சினர்.

பல கணவர் முறை

கள்ளர்களிடையே அக்காலத்தில் ஒரு பெண் பல கணவர்களை மணந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. ஆதலின் கள்ளர்களின் குழந்தைகளைப் பத்து தகப்பனார்களின் குழந்தை என்று சொல்ல அஞ்சி, **எட்டும் இரண்டும் தகப்பனார்** என்று கூறினர் என்ற தர்ஸ்டன் எழுதியுள்ளார்.

அக்காலச் சமூக நிலைமையை அப்படியே படம் பிடித்தாற் போன்று எழுதிய இந்த உண்மையை மறுக்க முடியாது. சாவைக் கண்டு அஞ்சினர் என்றால், ‘சாவு’ என்ற ஒலியில் வரும் சொற்களைப் பயன்படுத்தவும் அஞ்சினர்.

சா – சாவு

தெலுங்கில் சில ஜாதியினர் கிரந்த எழுத்துக்களைக் குழந்தைக்குக் கற்றுத் தரும்போது ‘சா’ என்ற

எழுத்தை வேகமாக உச்சரிக்க வைத்து, அடுத்த எழுத்துக்குப் போவார்களாம். இதற்குக் காரணம் திராவிட மொழிகளில் 'சா' என்பது இறத்தலைக் குறிக்கும் ஆதலின், அந்த உச்சரிப்புடைய வேறு பொருளைக் குறிக்கும் சொற்களையும் கூற அஞ்சினர்.

அதுபோன்றே தெலுங்கு மொழியில் 'ஏழு' என்ற எண்ணைக் குறிக்கும் 'ஏடு' என்ற சொல்லை உச்சரிக்க அஞ்சுவார்கள். கருவூலத்தைக் காக்கும் அதிகாரிகள் (Treasury officer)கூட இந்தப் பெயரை உச்சரிக்கப் பயந்தனர்.

ஏடு என்ற சொல் செத்தபோது அழுவதைக் குறித்ததால் அதே சொல்லை உச்சரிக்க பயந்து ஏழு என்பதற்குப் பதிலாக ஆறும் ஒன்றும் என்று கூறினாராம்.

கொரியர்கள் (Koreans) நான்கு என்ற எண்ணைக் குறிக்கும் 'சா' என்ற சொல் கொரிய மொழியில் சாவைக் குறிக்கும். இந்த வழக்குத் தமிழ்மொழி வழக்குடன் ஒத்துள்ளது.

பதின்மூன்று

அதுபோன்றே 13 என்ற எண்ணை மேலை நாட்டினர் உச்சரிக்கப் பயந்தனர். இது கிறிஸ்துவ மதத் தொடர்பாக வந்த தடையாகும். கிருஸ்துவைக் கொல்லக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத் 13ஆவது சிஷ்யன் ஆவான்; ஆதலின் 13ஆவது எண்

கிருஸ்துவ உலகத்தில் தடை வழக்காகும். அதற்காக அந்த எண்ணை வேறு வகையாக இரண்டு எண்களைக் கூட்டிச் சொல்லும் வழக்கு முற்காலத்தில் மேலை நாடுகளில் இருந்தது.

இத்தகைய தடைகளுக்கும் விலக்குகளுக்கும் **அச்சம் ஓர் அடிப்படைக் காரணமாகும்.**

தாலி அறுந்தது என்று சொன்னால், சொல் பவருக்கும் அவருடன் சேர்ந்தவருக்கும் அதே கதி, அதே நிலைமை ஏற்படுமோ என்ற அச்சத்தால் அவ்வாறு சொல்லக் கூடாது என்ற தடை எழுந்திருக்கலாம்.

இதையே அமங்கலத்தை மங்கலமாகக் கூற வேண்டும் என்று கொண்டு மங்கல வழக்கு என்று தனியாக வேறுபடுத்திப் பிற்காலத் தமிழ் இலக்கணத்தில் கூறினர்.

ஆனால் தொல்காப்பியர் மங்கல வழக்கையும் **தகுதி வழக்கு** என்றே சொல்லியிருக்கின்றார்.

துஞ்சினான்

அதுபோன்றே செத்தான் என்று சொல்வதற்குத் துஞ்சினான் அதாவது தூங்கினான் என்று அக் காலத்தில் கூறினர்.

சாவு என்பது மனித சமுதாயத்தில் மிகவும் பயப்படுவதற்குரிய நிகழ்ச்சி என்பதால், அதைப்பற்றி நேரிடையாகக் குறிப்பிட்டுச் சொல்ல அஞ்சினர்.

மங்கல வழக்கு

விளக்கு அணைந்தது என்பது அமங்கலமாகும். அதனால் விளக்கை அணைத்து விடு என்பதற்குப் பதிலாக 'விளக்கைப் பெரிதாக்கி விடு' என்று சொல்வர்.

இன்றும் இறந்த உடலை வீட்டில் பிறர் பார்க்க வைக்கும்போது, சவத்தினை 'வளர்த்தி வைத் திருக்கிறது' என்று சில இடங்களில் கூறுகின்றனர். இறந்துபோன சவத்திற்கு உண்மையில் வளர்ச்சி கிடையாது. இருப்பினும் வேறு விதமாக அமங்கலமாகச் சொல்ல அஞ்சியே இவ்வாறு மங்கலமாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு அச்சத்தால் சாவு போன்ற நிகழ்ச்சியை நேராகக் குறிப்பிட்டுக் கூறக்கூடாது என்ற வழக்கத்தாலேயே மதச் சார்பான பல பேச்சு வழக்குகள் தோன்றின.

ஒருவர் இறந்தால் வைகுண்டபதவி அடைந்தார் என்று வைணவர்கள் கூறினர். அதிலும் ஆழ்வார் போன்ற உயர்ந்தோரைத் திருநாடு எழுந்தருளினார் என்றும், திருநாடலங்கரித்தார் என்றும் கூறினர். சாதாரண வைணவர்களின் சாவை, ஆசாரியன் திருவடிகளிலே சேர்ந்தார் என்று கூறுவர்.

சிவகதி அடைந்தார் என்று சைவர்கள் கூறினர்.

கிருஸ்துவர்கள் இறந்தவரை இளைப்பாற்றி அடைந்தார் என்று கூறுவர்.

நாத்திகர்கள் இயற்கை எய்தினார் என்று கூறுவர்.

கல்வெட்டுகளில் பள்ளிப்படை எய்தினார் என்று காணப்படுகின்றது.

சோழர் காலத்திய கல்வெட்டுக்களில் அரசன் போரில் இறந்ததைத் 'துஞ்சினார்' என்று கூறுவதைக் காணலாம். சங்க நூல்களிலும் அரசன் இறந்ததைத் 'துஞ்சினான்' (புறம். 55) என்று கூறியுள்ளதைக் காணலாம்.

பொதுவாகக் கூறவேண்டும் என்ற எண்ணம் கொண்டோர் இறைவனடி சேர்ந்தார் என்று எழுதுவார்கள். இதையே தமிழில் சொல்ல விரும்பாது மரணம் அடைந்தார் என்று சிலர் வடமொழியில் கூறுவர். தவறி விட்டார், காலமாகிவிட்டார் என்று நாகரிகமாகக் கூறுவதும் உண்டு. இந்த வழக்கிற்கும் ஒரு சங்கமரபு உள்ளது.

'பெரும் பிறிது உற்று' என்றால், இறந்து என்று சங்கநூல்களில் வழங்குகின்றது. 'பெரும்பிறிது உற்ற' என்ற வழக்கின் பொருள் பெரிய மாற்றத்தைக் குறித்ததாகும்.

அச்சமே அடிப்படை

இந்த வழக்குகள் எல்லாம் இக்காலத்தில் அமைத்துக் கொண்ட தகுதி வழக்குகளாகும். செத்தான் என்று வாயால் சொல்வதற்குக்கூட ஏற்பட்ட **அச்சமே இந்த வழக்குகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமாகும்.**

குழந்தை தூங்குதலைக் 'கண்வளர்தல்' என்று இலக்கியத்தில் கூறுவர். கண்மூடுதல் இறத்தலைக் குறிப்பதால் அதைத் தவிர்த்து, கண்வளர்தல் என்று கூறுவர்.

'கண்ணை மூடி உறங்குவதனால் ஒளி வளரும்' என்று கி.வா. ஜகந்நாதன் கூறும் தத்வார்த்தம் பொருத்தமற்றது.

இதுபோன்ற தகுதி வழக்கே 'விளக்கு பெருகிற்று' என்ற வழக்கில் காணப்படுகிறது.

அம்மை நோய்

இதுபோன்றே அச்சத்தைத் தரும் நோயைக் குறிப்பிட்டுப் பேசவும் அஞ்சினர். அம்மை நோயைக் கேட்டே மிகவும் அஞ்சினர். ஆதலின் நோயின் பெயரையே 'அம்மை' என்று மறைமுகமாக அழைத்தனர். வைசூரி அம்மனால் வந்த நோய் என்று கருதினதால், அம்மை என்று அழைத்தனர்.

அம்மையால் இறந்ததை 'அம்மை பார்த்துக் குளிர்ந்துவிட்டது' என்பர். அம்மை வந்து இறந்து விட்டார் என்று சொல்லவும் அஞ்சினர்.

அம்மைக் கொப்புளத்தை முத்து என்றும் கூறினர். அம்மை ஒரு வெம்மை நோயாகும். இருப்பினும் அதைக் கண்டு பயந்த காரணத்தால் குளிர்ந்துவிட்டது என்று கூறினர்.

இந்த முறையான மரபு அசாம் மொழியிலும் வழங்குகின்றது. அம்மையைப் 'பூ' என்று அழைக்கின்றனர். தமிழிலும் அம்மை நோயால் கண் குருடாவதைப் 'பூ விழுந்து விட்டது' என்று கூறுவதைக் காணலாம்.

மாரியம்மனைச் 'சீதாள' (குளிர்ந்தவள்), 'தருமி' (தர்மத்தாய்), 'மரபி' (அன்புடையவள்) என்று அழைப்பதையும் கவனிக்கவேண்டும்.

அச்சத்தைத் தரும், சாவைத் தரும் விலங்குகளைக் கண்டால் பெயர்சொல்லிக் கூப்பிடக்கூடாது என்று பல பழங்குடி மக்கள் கருதுகின்றனர்.

டாக்டர் எமனோ அவர்கள் விலங்குகளின் பெயர்த்தடை வழக்குகள் (Taboos on Animal names) என்ற தலைப்பில், புலியைப் பற்றிப் பழங்குடி மக்களிடையே இருக்கும் வழக்குகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். பழங்குடிமக்கள் பெரும்பாலும் காட்டில் வாழ்வதால் புலியினாலும் யானையினாலும் பாம்பினாலும் சாவது இயற்கை நிகழ்ச்சியாகும்.

கேரளப் பழங்குடி மக்களாகிய **காணிக்காரர்கள்** இடையே புலிச்சாவு, ஆனைச்சாவு, பாம்புச்சாவு என்ற ஆவித் தெய்வங்களுக்குப் படைக்கும் வழக்கு உள்ளது. பாம்பிற்கு எவ்வளவு பயந்தார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது.

தமிழிலும் விலங்குத் தடைப் பெயர் வழக்குகள் மக்களிடையே உள்ளன. பாம்பு போகிறது என்று

சொல்லமாட்டார்கள். கயிறு போகின்றது என்று சொல்வார்கள். பாம்பு என்று சொல்லவே அஞ்சும் மக்கள் அதைக் கயிறு என்று சொன்னால் கடிக்காது, கொல்லாது என்று கருதுவர்.

தமிழர் கூறும் விடுகதைகள் பாம்பைக் கயிறு என்று அழைப்பதைக் காணலாம்.

சன்னல் பின்னல் கயறு
சாதியில்லாக் கயறு
எண்ணெய் படாத கயறு
என்ன கயறு?

என்று வரும் விடுகதைக்கு விடையாக, பாம்பு என்பதைக் கூறுவர். அதுபோலப் பாம்பு கடித்தது என்று சொல்ல அஞ்சிப் 'பாம்பு தீண்டிற்று' என்று சொல்வர். உண்மையாகவே பாம்பு வெறுமனே தீண்டினால் யாரும் இறக்க மாட்டார்கள்.

கொடவர்கள் நல்ல பாம்பு கடித்தால் 'ஒரு கொடி என்னைக் கடித்துவிட்டது' என்பர்.

வங்காளத்தில் இரவில் பாம்பின் பெயரை உச்சரிக்கக்கூடாது என்பதற்காக அதைத் 'தடி' என்ற பொருளில் கூறுவர்.

பண்டைய பாலி மொழியில் பாம்பை 'நீண்டது' 'நீண்ட மாதிரி' (Long and long sort) என்று சொல்லியிருப்பதைக் காணலாம்.

இந்த வழக்கு இலக்கிய வழக்காயினும், மக்கள் இடையே வழங்கின வழக்காயிருந்து இலக்கியத்தில் புகுந்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இலக்கிய வழக்கு

இதுபோன்றதே 'பெரியதன் ஆவி பெரிது' என்ற இலக்கிய வழக்காகும். இந்த வழக்கு இன்றும் மக்கள் வாயில் தவழும் பேச்சு வழக்காகும்.

அதுபோலப் பெரும் பாம்பு என்ற மலைப் பாம்பைக் பற்றிப் பேசும்போது 'பெரிசு போகின்றது' என்று கிராம மக்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக் கின்றேன். பெரிய பாம்பு என்று சொல்வதற்கு அஞ்சிப் பெரிசு என்று அழைக்கின்றனர்.

இந்த வழக்கு, பழமொழி நானூறு பாடல்கள் பாடப்பட்ட எட்டாம் நூற்றாண்டிலேயே தமிழில் வழங்கியிருக்கலாம். பழமொழி நானூறு பாடல்கள் பாடப்பட்ட எட்டாம் நூற்றாண்டிலேயே தமிழில் வழங்கியிருக்கலாம். பழமொழி நானூறு என்ற நூலில் 'பெரியதன் ஆவி பெரியது' என்ற பழமொழி (1) வழங்குகின்றது. இதில் பெரியது என்று அழைக்கப் பட்டது மறைமுகமாகப் பார்த்தால் அது பெரும் பாம்பே ஆகும்.

பெரியதான பிராணிக்குப் பெரிய ஆவி இருக்கும் என்ற சைனர் கொள்கையைப் பழமொழியாகக் குறிப்பிடுமிடத்தில் இந்தத் தகுதி வழக்கு வருவதைக் காண்கிறோம்.

மலையாள நாட்டில் 'பெரிஞ்சில்லோம் என்ற பெயரில் ஒரு பண்டைக் குடும்பம் இன்றும் உள்ளது. பெரிசு இல்லம் என்பது 'பெரிஞ்சில்லோம்' என்று வழங்குகின்றது.

பெரும்பாம்பைத் தண்ணீரில் விட்ட ஒரு மூதாதையர் பெயரால் இக்குடும்பம் அழைக்கப் படுகின்றது. பெரிசை அதாவது பெரும் பாம்பைத் தண்ணீரில் விட்டவர் இல்லம் என்பதால் பெரியது என்ற பாம்பின் பெயர் மலையாளத்திலும் அக் காலத்தில் வழங்கியது விளங்குகின்றது.

மேல் நாட்டிலும் உண்டு

பாம்பிற்கு அஞ்சி வேறு பெயரால் அதை அழைப்பது தமிழ் நாட்டில் மட்டுமன்றி மேல் நாடுகளிலும் உண்டு என்று அறிஞர் எமேனோ குறிப்பிட்டுள்ளார். பண்டைப் பாலி மொழியில் 'தீகா' என்றும், 'தீக ஜாதிகா' என்றும் பெரும் பாம்பு அழைக்கப்பட்டுள்ளது.

'பழமொழி நானூறு'

நீண்டது, நீண்ட ஜாதி என்று பாலிமொழியில் கூறியதைப் போலவே தமிழில் பழமொழி நானூறு பெரும்பாம்பு என்று அழைத்துள்ளது.

அதர்வண வேதம்

பாலி மொழி, நாட்டு மக்களிடையே வழங்கிய மரபுகளையும் வழக்குகளையும் சேர்த்துக் கொண்டது

என்ற அறிஞர் கூறுவர். அதர்வண வேதத்தில், 'பல்லுடைய கயிறு' (toothed rope), 'அழுகிய கயிறு' (putrid rope)என்று பாம்பு அழைக்கப்படுவதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

வடநாட்டில் வழங்குவது

வடநாட்டில் சில இடங்களில் பாம்பைத் 'தாய் மாமன்' என்று அழைப்பதையும் 'கயிறு' என்று அழைப்பதையும் குருக் (Crooke) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

பாம்பு கடித்தால், கடித்தது என்று சொல்லாமல் கயிறு தீண்டிற்று என்று சொல்வர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நல்ல பாம்பு கடித்துவிட்டால் 'ஒரு கொடி என்னைக் கடித்துவிட்டது' என்று கூறுவர். இந்த வழக்கு பாம்பு தீண்டிற்று என்ற தமிழ் இலக்கிய வழக்கு போன்றது.

அதர்வண வேதத்தில் வந்த இவ்வழக்குகள் பழங்குடி மக்களிடமும் திராவிடர்களிடமும் வழங்கினதாகும். அதர்வணவேதம் இத்தகைய பல பழ மரபுகளையும் சடங்குகளையும் கொண்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

சங்ககாலப பழக்கம்

பாம்பிற்குப் பயந்து வேறு வகையாக அழைக்கும் வழக்கு சங்க காலத்திலேயே இருந்திருக்கின்றது.

பாம்புகளில் கொடிய நஞ்சுடைய பாம்பை **நல்ல பாம்பு** என்று அழைக்கின்றோம். கெடுதல் தரும் பாம்பைக் கெட்ட பாம்பு என்று அழைத்தால் அது கடித்துவிடும் என்ற அச்சத்தால், நல்ல பாம்பு என்று அழைத்து, அதன் மனத்தை குளிர்விக்கிறார்கள். சங்க நூல்களில் இந்த நல்லபாம்பை 'நல்ல அரா' (அகநானூறு 72) என்று அழைத்திருப்பதைக் காணலாம்.

இந்த வழக்கு பண்டைக் கிரேக்கர்கள் பயங்கர மான புயற்காற்றை (Eumenides) அன்புடைய காற்று என்று அழைத்ததை ஒத்தது.

ஸ்பானியர்களும், இத்தாலியர்களும் பாம்பின் பெய்ரை (Culubra, Colubara) உச்சரிப்பதில்லை. பாம்பின் பெயரைச் சொன்னால் பாம்பு வந்துவிடும் என்ற பயம் உண்டு. அதனால் வேறு பெயர்களால் பாம்பை அழைக்கின்றனர்.

ஆதலின், சங்ககாலத்திலேயே பாம்பிற்கு நாட்டு மக்களிடையே வழங்கிய பெயர் வழக்கு இலக்கியத்துள்ளே சென்றுள்ளது தெளிவாகின்றது.

அசாமில் வாழும் நாட்டு மக்கள் இரவில் பாம்பின் பெயரை உச்சரிக்க மாட்டார்கள். பாம்பை நீண்ட காலுடையவன் (long legged one) என்றழைப்பர். தப்பித் தவறி உச்சரித்தால் 'அஸ்திகா, கதுரா' என்ற பெயர்களைப் பிராயச்சித்தமாக மூன்று முறை உச்சரிக்க வேண்டும்.

இப்பெயர்களில் **கதுரை** என்பது பாம்பினத்தின் தாயாக வேதத்தில் கருதப்படும்.

நாகராசன், நாகரத்தினம் போன்ற பெயர்கள் உடையோரை அவர்கள் பெயர்களால் இரவில் கூப்பிட அஞ்சுவர். அப்படிக் கூப்பிட்டால் நாகத்தின் காதில் விழுந்து அது வந்து கடித்துவிடுமோ என்று பயப்படுவர். இந்தப் பழக்கம் இந்தியா முழுவதிலும் உள்ளது.

நாகரிகத்தில் பெயர் கொண்டவர்களுக்கு வேறொரு பெயரும் கொடுத்து அப்பெயர்களால் அழைப்பதும் வழக்கமாகும். நாகராஜன் இளவரசியைக் கல்யாணம் செய்து கொண்ட கதைகள் பல இடங்களிலும் வழங்குகின்றன. இக்கதைகளில் இளவரசி நாகராஜனின் பெயரைக் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் நாகராஜன் சுயஉருவமான பாம்பு உருவத்தை எடுப்பான் என்று நாட்டுக் கதைமரபு உள்ளது.

இவை எல்லாம் இன்றும் மக்களிடையே வழங்கும் தடை வழக்குகள் ஆகும்.

புலி எனல் கூடாது

இந்தியாவில் உள்ள பல இனக்குழு மக்களும் புலியைப் பெயரிட்டு அழைக்க அஞ்சுவர். அவ்வாறு பெயரிட்டு அழைத்தால் புலியின் காதில் விழும். புலி வந்து தங்களைக் கொன்றுவிடும் என்று அஞ்சினர். ஆதலின் வேறு பெயரால் புலியை மறைமுகமாக அழைப்பர்.

பழங்குடி மக்களிடையே புலியைப் புலியென்று அழைக்காது 'நரி' என்று அழைக்கும் பழக்கம் பரவலாக உள்ளது.

பைகர்கள் போன்ற பழங்குடி மக்கள் புலியைப் 'பெரியது' (The great one) என்று சுட்டிக் கூறுவது வழக்கம் என்று பெரியர் எல்வின் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

இந்த வழக்கு தமிழ்நாட்டில் 'பெரிசு' என்று மலைப்பாம்பை அழைக்கும் வழக்குடனும், 'பெரியது' என்ற இலக்கிய வழக்குடனும் ஒத்துக் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த வகையான வழக்கை வேட்டையாளரின் குழுஉக்குறி வழக்கு என்று சில ஆராய்ச்சியாளர் கூறுவர் – என்று எமனோ கூறியுள்ளார்.

ஆங்கில மொழியில் கரடியின் லத்தீன் பெயரை Ursus என்ற சொல், காயப்படுத்துபவன் என்ற கொடுமைப் பொருளைக் குறித்ததால் அப்பெயரால் கரடியை அழைக்கப் பயந்து, பழுப்புநிறமானவன் (Bear-Bornw one) என்று கொடுமைப் பொருளை நீக்கிய பெயரால் அழைத்தனர்.

பிரேசர் என்ற மக்கள் பண்பாட்டு ஆராய்ச்சியாளர் புலியின் பெயரை இந்தியாவில் நேராக உச்சரிக்காமல் மறைவாக வேறு பெயரால் குறிப்பிடுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுப் பெயர்கள்

சேர்வராயன் குன்றில் வாழும் மலையாளிகள் புலியை வேட்டையாடும்போது, புலியை நாய் என்றும் நரியென்றும் அழைப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மலை அரையர் என்ற பழங்குடியினர் 'ஐயப்பனுடைய நாய்' என்று மலையாளத்தில் புலியை அழைப்பது வழக்கமாகும்.

வடநாட்டிலும் புலியை நரி என்றும், வெறுமனே 'அந்த விலங்கு' (That animal) என்றும் அழைப்பதைக் காணலாம்.

கொல்லர் என்ற திராவிடப் பழங்குடி மக்கள், புலியின் பெயரை உச்சரிக்கப் பயந்து "நகங்களை உடையவன்" (He with the claws) என்று புலியையும், "பல்லையுடையவன்" (He with the teeth) என்று யானையையும் குறிப்பிடுவதைப் பிரேசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வங்காளத்தில் சுந்தரவனக் காடுகளில் நரி என்றே புலியைக் குறிப்பிடுவதுண்டு. ஆனால் இவ்வழக்குகள் எல்லாம் வேட்டையாடும்போது சில சமயங்களில் பயன்படுத்தப்பட்டன. மற்ற நேரங்களில் புலியின் பெயரை வெளிப்படையாக உச்சரித்து வந்தனர்.

ஆனால் வேட்டையாடும் தொழிலைப் பெரிதும் போற்றும் குடகு மக்களின் மொழியில் புலி என்ற பெயரே முற்றும் மறக்கப்பட்டு, நரி என்ற பெயரே

புலியின் பெயராக வழங்குவதை அறிஞர் எமனோ குறிப்பிட்டுள்ளார்.

வடமலையாளத்தில் நரி என்று வழங்குவதை நான் கவனித்திருக்கின்றேன்.

மலையாளத்தில் வழங்கும் ஓர் அரிய வழக்கை டாக்டர் குண்டர்ட் அவர்கள் தாம் எழுதிய அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

மலையாளத்தில் வாழும் சில பழங்குடியினர் 'அம்மோச்சன்' என்ற பெயரால் தாய் மாமனை அழைப்பதைக் குறிப்பிட்டுள்ளார். 'அம் மோச்சன்' என்ற பெயர் தாய் மாமனைக் குறிப்பிடுவதாகும். அம்மையின் அச்சனாகும் 'அம்மையின் தந்தை' என்ற பொருளில் வரும் இத்தொடர் அம்மையின் அண்ணனைக் குறிப்பிடும்.

தாய்வழிச் சமுதாயத்தினராகிய மலையாளி களுக்குத் தாய் மாமன்தான் குடும்பத்திற்குத் தலைவனாவான். ஆதலின் மிகவும் மரியாதைக் குரியவன் தாய்மாமனாவான். ஆதலின் புலியை 'மரியாதைக்குரிய தாய்மாமன்' என்று அழைப்பதைக் காணும்போது, புலிக்கு எவ்வளவு பயந்தார்கள் என்பது தெரிகின்றது.

புலியை மாமன் என்று அழைக்கும் வழக்கு வடநாட்டுத் திராவிடப் பழங்குடி மக்களிடம் உள்ளது என்ற வெரியர் எல்வின் (Verrier Elwin) கூறியுள்ளார். ஆதலின் இந்த மலையாள வழக்கு தாய்வழிச்

சமுதாயத்தில் வாழ்ந்த பழந்திராவிடக் குடிகளின் தகுதி வழக்காகத் தெரிகின்றது. தாய்மாமன் பெயரைச் சொல்லக்கூடாது என்ற தடையிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

முதுவர்களிடையே தாய்மாமனுடன் நேரிலே பேசுவதும் கூடாது என்ற தடை உள்ளது.

அதர்வண வேதத்தில் பாம்பைத் தாய்மாமன் என்று அழைத்ததைக் கவனிக்க வேண்டும்.

தாய்வழிச் சமுதாயம் ஆரியர்களிடையே இருந்த தில்லை. ஆதலின் பாம்பைத் தாய் மாமன் என்று அதர்வண வேதம் அழைத்த வழக்கு (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) திராவிடக் குடிகளிடமும், பழங் குடிகளிடமும் பெற்றதாகும் என்பதில் ஐயமில்லை.

முதுர்வகளிடையே இன்றும் தாய்மாமனிடம் மிகவும் மரியாதையாகப் பழகவேண்டும் என்ற வழக்கு உண்டு. மாமனாரிடமும் மாமியாரிடமும் நேராகப் பேசக்கூடாது என்ற வழக்கம், முதுவர்களிடையேயும் பணியர்களிடையேயும் உள்ளது.

மறைவுச் சொல்

தமிழ்நாட்டு மீனவர்களிடையேயும் மீன் வேட்டையாடும்போது இவ்வாறு மறைமுகமாகப் பயன்படுத்தும் வழக்குகள் இருப்பதைக் காணலாம்.

'கோலா' என்ற பறக்கும் மீனைக் கூட்டமாகப் பிடிக்க வேட்டைக்குக் கடலில் போகும்போது, அந்த

கோலா என்று குறிப்பிடமாட்டார்கள்.. கோலாஎன்று சொன்னால் அகப்படாது என்று கருதி, அதைக் **கவலை** என்று அழைப்பர்.

கோலாவை விடக் கவலை தாழ்ந்த இன மீன். ஆதலின் அப்பெயரால் அழைத்தனர். புலியை நரியென்று அழைப்பதுபோலவே கோலாவைக் கவலை என்று அழைப்பதும் ஒரு தடை வழக்காகும்.

தமிழ் இலக்கியத்தில் புலியைக் குறிக்க இத்தகைய மறைமுகமான வழக்குகள் உண்டா என்று ஆராய வேண்டும். இன்றைய தமிழ் வழக்கில் இந்தத் தகுதி வழக்குகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் முற்காலத்தில் வழங்கியிருக்கும் என்பதற்குச் சான்று உள்ளது.

சங்ககால வழக்கு

சங்ககாலத்திலேயே தமிழர் மிகவும் நாகரிகம் அடைந்துவிட்டதால், தமிழில் இந்த வழக்குகள் வீழ்ந்துவிட்டிருக்கலாம் என்று கருதவேண்டும். ஆயினும் சங்ககாலத்திலேயே இந்த வகையான வழக்குகள் இருந்தன என்பதற்குச் சான்று இல்லாமலில்லை.

சங்கநூல்களில் நரியைக் 'குறுநரி' என்று சில பாடல்களிலும் *(அகநானூறு 359; புறநானூறு 94)* கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். குண்டர்ட் என்பவர் எழுதிய மலையாள அகராதியில் குறுநரி என்ற பெயர் காணப்படுகின்றது. மலையாளத்தில்

குறுக்கன் என்ற பெயர்தான் நரிக்குப் பெயராக இன்று பரவலாக மக்களிடையே வழங்குகின்றது.

குறுக்கன் என்ற பெயர், குறுமையானது என்ற பொருள் தருவதை எமேனோவும் காட்டியுள்ளார்.

குறுநரி – பெருநரி

குறுநரி என்ற பெயரின் நேரான பொருள் சிறிய நரி என்பதாகும். சிறிய நரி என்ற சங்கநூல் வழக்கு பெரிய நரி என்பதையும் காட்டுகின்றது. பெரிய நரியிலிருந்து பிரித்துக்காட்டவே சிறிய நரி என்று கூறினர்.

சங்ககால நூல்களில் குறுநரி என்ற வழக்குக் காணப்படுவதால், சங்க காலத்தில் பெருநரி என்ற பெயர் புலியைக் குறித்துத் தமிழ்மக்களிடையே பேச்சு வழக்கில் வழங்கியிருக்கலாம். ஆனால் அது அக்காலத்தில் ஓர் இலக்கிய வழக்காக மாறவில்லை என்று தெரிகின்றது.

இன்று புலியைக் குறித்த 'அம்மோச்சன்' முதலிய பேச்சு வழக்குப் பெயர்கள் மலையாள இலக்கியத்தில் காணப்படவில்லை. அது போன்றே புலியைக் குறித்த பெருநரி என்ற பேச்சு வழக்கு சங்கநூல்களில் காணப்படவில்லை என்று கருதலாம். ஆனால் குறுநரி என்ற சொல்வழக்கு சங்கநூல்களில் இருப்பதால், பெருநரி என்ற வழக்கு சங்ககால மக்களிடையே பேச்சுவழக்காக இருந்திருக்கலாம்.

புலியைக் குறித்து வழங்கும் சில சங்ககாலப் பெயர்கள் புலியை மறைமுகமாகப் பெயரிட்டு அழைத்ததைக் காட்டுகின்றன. கொடுவரி *(புறம், 135)* குயவரி *(அகம். 398)*, வாள்வரி *(அகம், 145)* என்று சங்கநூல்களில் புலியைப் பெயரிட்டுக் கூறியிருப்பதைக் காணலாம். இப்பெயர்களில் புலி என்ற சொல், பெயரில் சேர்ந்து வரவில்லை. ஆனால் சில சங்கப்பாடல்களில் கூடவே புலியின் பெயரையும் சேர்த்துக் கூறுவதையும் சில இடங்களில் காணலாம்.

பழங்குடி மக்கள் பல்லையுடையவன் என்று குறிப்பிடுவது போலச் சங்ககாலத்தில் தமிழ்மக்களும் 'வளைந்த வரியை உடையவன்' (He with curved lines) என்ற பொருளில் கொடுவரி, குயவரி, வாள்வரி என்று புலியை அழைத்தனர் எனத் தெரிகின்றது. இத்தகைய சங்ககாலப் பேச்சுவழக்குகள் சங்க நூல்களிலும் ஏறியிருத்தல் வேண்டும்.

பண்பட்ட இலக்கியத்தில் மறைத்துக் கூறும் தகுதிவழக்கு வேண்டியதில்லை யாதலால் கொடுவரி, இரும்புலி, வாள் வரிப் புலி என்று வெளிப்படையாகவும் சங்கநூல்களில் அழைத்துள்ளனர் என்று கருதலாம்.

ஆனால் கொடுவரி போன்ற சங்ககாலப் பெயர் வழக்குகள் பழங்குடி மக்களின் பேச்சுமொழியின் மரபில் இருப்பதைக் கவனிக்க வேண்டும். புலியை 'வரிவயம்' *(புறம் 106)*, 'வயமான்' *(புறம் 52)* என்று சங்கநூற்கள் குறிப்பிட்டுள்ளன.

வரியையுடைய பலவான், பலத்தையுடைய விலங்கு என்ற பொருள்படும் சங்ককாலப் பெயர்களும், பெரியது என்று மரியாதையாகப் புலியைக் கூறும் இன்றைய பழங்குடி மக்களின் பேச்சு வழக்கோடு ஒத்துள்ளதைக் காணலாம்.

யானையைப் பழங்குடி மக்கள் 'பல்லை உடையவன்' என்று கூறுவது போலவே, சங்க நூல்களில் 'கோட்டுமா' என்று கூறியுள்ளதைக் காணலாம். கோட்டையுடைய விலங்கு என்ற பெயர் யானையை நேராகப் பெயரிட்டு அழைக்காமல் மறைமுகமாகக் குறிப்பிட்டதையே காட்டுகின்றது.

இன்றும் காடர் முதலிய காட்டில் வாழும் பழங்குடி மக்களிடம் புலிச்சாவு, ஆனைச்சாவு, பாம்புச் சாவு என்ற இறந்தோர் சடங்குகள் இருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். புலி, யானை, பாம்பு ஆகியவற்றுக்கே அவர்கள் மிகவும் அஞ்சினர் என்பது தெரிகின்றது.

மக்கள் பண்பாடு

சங்க இலக்கியத்திலும் தமிழிலக்கியத்திலும் வழங்கும் புலி, யானை, பாம்பு ஆகியவற்றிற்கான தடை வழக்குகள் அதர்வண வேதத்திலும் பாம்பிற்கான, பழங்குடி மக்களின் பேச்சு வழக்கு மரபுகளைப் பின்பற்றியதாகலாம்.

தமிழிலக்கியத்திலும் வடமொழி இலக்கியத் திலும் பழங்குடி மக்களின் பண்பாடுகளும் மரபுகளும்

பெரும் அளவு புகுந்துள்ளன என்பதைப் பலரும் உணரவில்லை. பிற்காலத்து நாகரிகம் அவைகளை மறைத்துவிட்டது.

சங்ககாலத்திலேயே நல்லபாம்பு போன்ற வழக்கும், மலைப்பாம்பிற்கு இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் பெரியது என்ற வழங்கிய வழக்கும் இலக்கியத்திலும் பேச்சுவழக்கிலும் இருக்கும்போது, பிற்காலத்தில் வந்த உரையாசிரியர்கள் இந்த வழக்குகளைத் தகுதி வழக்காக ஆராயாததைக் காண்கிறோம்.

'தகுதி வழக்கு என்பது அப்பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மை அன்று என்று, அது களைந்து தக்கதோர் வாய்பாட்டால் கூறுதல்' என்று தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் கூறினார்.

அதற்கு எடுத்துக்காட்டாகச் செத்தாரைத் **துஞ்சினார்** என்றும், சுடுகாட்டை **நன்காடு** என்றும், ஓலையைத் **திருமுகம்** என்றும், கெட்டதனைப் **பெருகிற்று** என்றும் காட்டியுள்ளனர்.

ஆனால் இந்த வழக்குகள் பெரும்பாலும் இலக்கிய வழக்குகளாகவே தெரிகின்றன. நாட்டு மக்கள் வாயில் வழங்கிய பேச்சுகளை அவர் காட்டவில்லை. பேச்சு வழக்குகளை ஆராய்ந்து கூறுவது வேண்டுவதில்லை என்று அவர் கருதி யிருக்கலாம். இலக்கிய வழக்கே இலக்கணத்துக்குரியது என்று கருதியிருக்கலாம்.

சங்கநூல் வழக்கான நல்ல பாம்பையும் அவர் எடுத்துக்காட்டாகக் காட்டவில்லை.

இடக்கர் அடக்கல்

இளம்பூரணர் என்ற உரையாசிரியர் தகுதி வழக்கு என்பதில் மங்கல வழக்கையும், இடக்கர் அடக்கிக் கூறுதலையும், குழூஉக்குறியையும் சேர்த்துக் கூறினார்.

இதில் இடக்கர் அடக்குதல் என்பது நீரால் கழுவினான் என்று மறைத்துச் சொல்லுதல் போன்றதாகும். இதையே இன்று காலைக் கழுவினான் என்று சொல்லுகிறோம்.

பெருங்கதை என்ற நூலில் 'அடிதுகள் அகற்றி' என்ற வழக்கு, 'கால் கழுவி' என்ற பொருளில் வருகின்றது.

'வாய்பூசி' என்ற வழக்கு 'ஆசமனம் செய்து' என்ற பொருளில் வழங்கியுள்ளது.

இன்றும் 'இடக்கர் அடக்குதல்' என்ற வழக்கு தமிழரிடையே உள்ளது. மூத்திரம் பெய்தான் என்று சொல்வது நாகரிகமற்றது என்று, ஒன்றுக்கு இருந்தான் என்று சொல்கிறதைக் காணலாம். அதுபோன்று மூத்திரமும் மலமும் கழித்தான் என்பதற்கு, இரண்டுக்குப் போனான் என்று கூறுகிறோம். அது ஆங்கிலேயர் உறவால் வந்த தகுதி வழக்காகும்.

இன்று கிராமமக்களிடையே தகுதிவழக்குகளாக 'வெளிக்குப் போனான்', 'குளத்துக்குப் போனான்',

'கொல்லைக்குப் போனான்' என்று வழங்குவதைத் தமிழ்நாட்டின் பல பகுதியில் காணலாம்.

ஆங்கிலத்திலும் இத்தகைய சொல்லத்தகாத வழக்குகளைப் பிரஞ்சு மொழியிலும் பிற மேல்நாட்டு மொழியிலும் வெளிப்படையாகக் கூறாது மறைத்துக் கூறும் வழக்குகள் உள்ளன.

இது இடக்கர் அடக்கல் என்று தமிழில் கூறினும், இந்த வழக்கும் தகுதி வழக்கேயாகும். இவையும் Taboo என்ற பொது வழக்கில் சேர்ந்தவையே.

மேலும் பல சொற்கள்

அக்காலத்திலேயே நாகரிகமடைந்த தமிழர் முகங்கழுவுதலை ''கண்கழீஇ வந்தார்'' என்று கூறினர். அது போன்றே மலமிருந்து வந்தோனை 'கான்மேனீர்ப் பெய்து வந்தான்' என்று கூறினர். இந்த வழக்கு இன்றும் 'கால் கழுவி வந்தான்' என்று வழங்குகின்றது.

ஒன்றுக்கு இருத்தல் என்ற இக்காலத்திய வழக்கு இடைக்காலத்தில் 'கைக்குறியராயிருந்தார்' என்று வழங்கினதைக் காணுங்கால் வியப்படைவோம்.

கல்லாடர் என்ற இலக்கண உரையாசிரியர் இந்த வழக்கைக் கூறியுள்ளார். கைக்குறியராயிருந்தார் என்பது மூத்திரம் இருத்தலைக் குறித்ததாகும். அவ்வாறு சொல்லக்கூடாது என்பதற்காக கைக் குறியராயிருந்தார் என்று இடைக்காலத்திலும் சொல்லப்பட்டது. இக்காலத்திலும் ஆங்கில மரபைப் பின்பற்றி ஒன்றுக்குப் போனார் என்பர்.

பசுமாட்டு மூத்திரம் சடங்குகளில் பயன்படுத்தப் படுவதால் அதை மூத்திரம் என்று சொல்லாமல் 'கோமையம்' என்று இடக்கரடக்கிக் கூறுவர்.

பொறை உயிர்த்தாள்

கல்லாடர் கூறிய இலக்கிய உரையில், ஒரு பெண் பிரசவித்தாள் என்று கூறக்கூடாது என்பதால், அதற்குப் பதிலாக **பொறையுயிர்த்தாள்** என்று மங்கல வழக்காகக் கூறப்பட்டுள்ளது.

மூத்திரம் என்ற பொருள் தரும் சொல்லைக் கூறக்கூடாது என்ற தடை இருந்ததால், 'நீரல் ஈரம்' *(நற்றிணை 103)* என்று சங்க நூற்களில் வழங்கினர். நீர் அல்லாது ஈரம் என்று நாகரிகமாக வழங்கினர்.

அதுபோன்றே உடம்பின் உறுப்பான புட்டத்தைப் பெயரிட்டுக் கூறக்கூடாது என்பதற்காக 'பின்' என்று கூறினர். ஆங்கிலத்திலும் பாட்டம் (Bottom) என்று இக்காலத்தில் கூறுவதை ஒப்பிட்டுக் காணலாம்.

இலக்கண உரையாசிரியர்கள் 'கருமுகமந்தி, செம்பினேற்றை' என்ற வரியை எடுத்துக் காட்டுவர்.

கோதாவரிக்கு அப்பாற் காணப்படும் ஒருவகை கருமுகக் குரங்கினத்தில் இணைகூடும் காலத்தில் பெண்குரங்கிற்குப் புட்டபாகம் சிவப்பாக மாறும். இது ஆண்குரங்கைக் கவர்ச்சிப்படுத்தவேயாகும். இதைக் குறிக்கவேண்டிய ஒரு கவிஞர் நாகரிகமாகக் ''கருமுக மந்தி செம்பினேற்றை'' என்று வருணித்தார்.

கருமுக மந்தியின் சிவப்பான பின்பாகத்தைக் கண்டு கவர்ச்சியடைந்த ஆண்குரங்கு என்பது அதன் விளக்கமாகும். ஏற்றை என்பது ஆண்குரங்கு என்று குறிக்கும்.

இராமானுஜர் தந்த சொல்

இந்த நாகரிக வழக்கு வடமொழியிலும் புகுந்துள்ளது. இராமானுஜர் வரலாற்றில் இந்த வழக்கு கூறப்பட்டுள்ளது. இராமானுஜர் அவருடைய குருவான யாதவருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கும் போது உபநிடத் வாக்கியத்திற்குப் பொருள் கூறினார். அதைக் கேட்ட இராமானுஜர், உசிதமில்லாத ஒரு பொருளைச் சொன்னார் என்று கண்ணீர் விட்டார்.

''தஸ்யதா கப்யாஸம் புண்டரீக மேவமஷிணி'' என்ற உபநிடத வாக்கியத்திற்கு யாதவப் பிரகாசர் தவறாகப் பொருள் கூறினார் என்று இராமானுஜர் கருதினார்.

இந்த வாக்கியத்திற்குப் பொருள் ''பிரமனுடைய கண்கள் குரங்கினுடைய ஆசனம்போல் சிவந்திருந்தன'' என்பதாகும்.

யாதவப்பிரகாசர் கூறிய இவ்வுரை இராமானுஜர் மனத்துக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால், குரங்கினுடைய அடிப்பாகம் சிவந்திருத்தலைக் குறித்தது இடக்கரடக்கல் என்ற தடை வழக்காகும்.

ஆதலின் இராமானுஜர் இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாது. 'தாமரைப்பூ திறந்தால் போன்ற கண்கள்' என்று விளக்கம் கூறினார்.

வடமொழி மரபு

இராமானுஜர் விளக்கத்தை ஒட்டியே ஆறாயிரப் படி குருபரம்பரையில் யாதவப் பிரகாசர் கூறிய விளக்கம் கூறப்படவில்லை. ஆனால் இந்த செய்தியை ஆராய்ந்து பார்த்தால், யாதவப் பிரகாசர் கூறிய விளக்கம் சரியென்றே தோன்றுகின்றது.

அவர் வடமொழி மரபு பற்றியும் அறிவியல் உண்மையைப் பின்பற்றியும் சரியான விளக்கத்தைக் கூறினார். அவ்வாறு யாதவப் பிரகாசர் கூறிய விளக்கம் வடநூலைப் பின்பற்றிய உண்மையான விளக்கம் என்பதில் ஐயமில்லை.

தமிழ் இலக்கண உரையாசிரியர்களும் கருங்குரங்கினுடைய அடிப்பாகத்தை ''செம்பின்'' என்று இடக்கர் நீக்கி நாகரிகமாகக் குறிப்பிட்டனர்.

அமெரிக்கன் சொல்லாட்சி

ஆனால் இன்று அமெரிக்காவில், நாகரிகம் மிகவும் முற்றிய காரணத்தால், இதே குரங்கின் சிவந்த பின் பாகத்தை "Monkeys Pink butt" என்று ஒரு சிறந்த நாவலில் (The Oscar Richard sale) வெளிப்படையாகக் குறிப்பிட்டிருப்பதை நான் படித்தேன். அதுவும் லிப்ஸ்டிக் பூசிய ஒரு நடிகையின் உதடுகளை

வர்ணிக்க குரங்கின் சிவந்த பின்பாகத்திற்கு ஒப்பிட்டுக் கூறியதைக் கண்டேன்.

பிறசமயத்தார் வழக்கு

வீரமாமுனிவர் தாம் எழுதிய பேச்சுத்தமிழ் இலத்தீன் அகராதியில் ''கயிறு கடக்கிறது'' என்ற பேச்சு வழக்கைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமியரிடையே வழக்கத்திலிருந்து வரும் 'சுன்னத்' கல்யாணத்தைக் குறித்து வெளிப்படையாக சொல்லாமல் 'கயிறு' கடக்கிறது என்பர். இதைக் கிறித்தவர் வழக்கில் 'விருத்த சேதனம்' என்று கூறுவர்.

தமிழ்ச் சமுதாயத்திலும் பண்பாட்டிலும் இத்தகைய வழக்குகள் வெளிப்படையாக வழங்கு வதற்குச் சில நூற்றாண்டுகள் ஆகவேண்டும்.

இராமன் உண்ட இறைச்சி

வால்மீகி இராமாயணத்தில் கிருஷ்ண மிருகத்தின் மாமிசத்தை இராமன் தின்றதாகக் கூறப் பட்டுள்ளது. கிருஷ்ண மிருகம் என்பதைக் **கருமான்** என்றும், சங்க இலக்கியத்தில் **இரலை** என்றும் அழைத்தனர்.

இக்கால வடமொழிப் பண்டிதர்கள் இராமன் மாமிசம் தின்றதாகக் கூறுவது தவறு எனக் கொண்டு கிருஷ்ண மிருகம் என்ற சொல்வழக்கு ஒரு வகைக்

காட்டுப் பழத்தைக் குறித்தது என்று புதுவிளக்கம் கூறுவர்.

ஆனால் இந்த விளக்கம் பகுத்தறிவுக்கு முற்றிலும் ஒத்தது அன்று என்று அறிஞர்கள் ஒப்புவதில்லை. இதுபோன்றதே இராமானுஜர் கூறிய விளக்கமும் என்று கருதலாம்.

ஆங்கிலத்தில் Belly என்று வயிற்றைக் குறிக்கும் சொல்லைக் கூறக்கூடாத தடை வழக்காகக் கருதினபோது, Stomach என்ற பெயரால் அழைப்பது வழக்கமாயிற்று.

நலம், அணிநலம்

இது சார்பாகச் சங்ககாலத்திலே வழங்கிய ஒரு வழக்கு கவனிக்கத்தக்கது. Sex என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நேராக 'நலம்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் வழங்கியுள்ளது. "அணிநலம் வவ்விய அறனிலாளன்" என்று அகநானூறு (266) குறிப்பிட்டுள்ளது.

ஒரு பெண்ணை வற்புறுத்திப் பலாத்காரம் செய்ததைக் குறிப்பிடும்போது 'நலத்தை வவ்வினான்' என்று அகநானூறு குறிப்பிட்டுள்ளது.

பெடை பறவையின் நலத்தை ஆண் பறவை உண்டதாக நற்றிணைப் (178) பாடல் குறிப்பிடு வதைக் காணலாம்.

அதுபோன்றே வேசிகள் நலத்தை விற்பவர்கள், விலைநலப் பெண்டிர், என்று புறநானூறு (365) கூறியுள்ளது நலம் என்பது Sex என்ற பொருளிலும், பெண்ணிடம் பெறும் கலவியின்பம் என்ற பொருளிலும் வழங்கிவந்த தகுதி வழக்காகும்.

தடையான வழக்கை நீக்கி, தகுதி வழக்காக 'நலம்' என்ற சொல் வழங்கியுள்ளது. நலம் என்ற சொல், பிற்காலத்திலும் இந்தப் பொருளில் வழங்கியதைக் கல்வெட்டுகளில் வரும் 'நல்லெருது' என்ற வழக்கில் காணலாம்.

நல்லெருது என்ற சொல் நலமுடைய எருது என்று பொருள்படும். பொலி காளையை நல்லெருது என்ற வழக்கு, சங்ககாலத்தில் வழங்கிய நலம் என்ற சொல்லோடு தொடர்புடையது.

'நல்லம்மான்' என்று தாய்மாமனை அழைக்கும் வழக்கில், தாய்மாமனுக்குச் சகோதரியின் மகளை மணக்கும் உரிமை இருந்த மரபு குறிப்பிடப் பட்டிருப்பதை உணரலாம்.

சங்ககால மரபில் கூறவேண்டுமானால், தாய் மாமனுக்குச் சகோதரியின் மகளின் நலத்தை உண்ண உரிமை இருந்தது. ஆதலின் நல்லம்மான் என்று அழைக்கப்பட்டான். 'நலம்' என்ற சங்ககாலத் தகுதி வழக்கு, நாகரிகமாக பண்பாடு நிறைந்த வழக்காகும்.

'ஸ்வஸ்திகம்' – செழிப்புச் சின்னம்

நாகப் பாம்பின் தலையில் **சுவத்திகம்** என்ற குறி இருப்பதாக **ஹரிவம்சம்** என்ற கி.பி. ஆறாம் நூற்றாண்டு வடமொழி நூல் கூறியுள்ளது. இந்த சுவஸ்திகம் என்ற அடையாளத்தை ஹிட்லர் (Hitler) போன்ற நாசிகள் கொடுமைச் செயல் புரியப் பயன்படுத்தினர்.

ஆனால் வரலாற்று அறிஞர் ஈராஸ் அடிகள் (Rev. Fr. S.J. Heras), இந்தச் சுவத்திகக் குறி ஆரியருடைய சின்னமல்ல, பழங்குடி மக்களுடையது என்று வற்புறுத்தியுள்ளார்.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் திருவெள்ளறை எனும் ஊருக்கருகில் 'சுவத்திகக் கிணறு' உள்ளது; 'சுவத்திக' வடிவில் உள்ளது.

சங்க இலக்கியத்தில் 'நாப்பண்' என்ற சொல் அகலம், விசாலம் என்ற பொருளில் வருகின்றது. நால், பண் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து நாப்பண் என்ற வழக்கு தோன்றியுள்ளது. நாலாக, நலமாகச் செய்யப்பட்டது எதுவாயினும் 'நாப்பண்' என்று கூறலாம். ஆதலின், நலம் என்ற சொல்லும் 'நாப்பண்' என்ற சொல்லும் செழிப்புச் சின்னத்தைக் (Fertility symbol) குறித்தன என்பதில் ஐயமில்லை.

பாம்புச் சேர்க்கை

இரண்டு நல்ல பாம்புகள் புணர்வதுபோலக் காட்டப்படும் கற்சிற்பத்தை, மணமான பெண்கள்

குழந்தை பெற வழிபடுவது இன்றும் கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும். இதைச் சாரைப்பாம்பும் நல்லபாம்பும் சேர்ந்த சிற்பமாகக் கருதுவர்.

நல்லபாம்பு ஆண் என்றும், சாரைப்பாம்பு பெண் என்றும் கூறுவர். ஆனால் இயற்கையில் நல்ல பாம்பும், சாரைப்பாம்பும் சேர்வதில்லை.

நல்ல பாம்பு – நல்ல அரா

சங்க இலக்கியத்தில் வழங்கிய 'நல்லரா' என்ற வழக்கு நலமுடை அரா என்று முதலில் Sex (செழிப்பு) என்ற பொருளில் தோன்றினாலும், பிற்காலத்தில் நல்ல குணமுடைய பாம்பு என்ற பொருளில் பயந்து அழைத்திருக்கலாம்.

ஆயினும் சங்ககாலத்திற்கு முன்பே நல்ல பாம்பு ஒரு Sex Symbol ஆகவே இருந்திருக்க வேண்டும். ஆதலின் நல்லரா என்ற சங்ககால வழக்கு முற்காலத்தில் மிக முக்கிய பொருளான செழிப்புக் கருத்தினையும் (Sex Symbolism), அதற்குப் பிற்பட்டுத் தகுதி வழக்குக் கருத்தையும் உள்ளே கொண்டுள்ளது என்பதை அறிய வேண்டும்.

ஏற்கத்தக்கது

ஈ.ராஸ் அடிகள் கூறிய அரப்பா நாகரிகத்தைப் பற்றிய பல விளக்கங்களை ஒப்புக்கொள்ள முடியா விட்டாலும், சுவஸ்திகத்தைப் பற்றி அவர் கூறிய

கருத்து மிகவும் நுட்பமானது என்று ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். ஈராஸ் அடிகள் கூறுவதைக் கவனித்து நோக்க வேண்டும் (It is not an Aryan symbol or Hindu symbol and it is only a Dravidan or aporginal symbol).

ஈராஸ் அடிகள் கூறும் நால், நான்கு, நலம் என்ற சொற்களும், அந்தச் சொற்களுக்குரிய தொடர்பும் விளக்கமும் மறுக்க முடியாததாகும்.

அவர் கூறிய வேறு பல கருத்துக்களை, கொள்கைகளை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருப்பினும், அவர் கூறிய, கண்டுபிடித்த சில அரிய செய்திகளை யாரும் மறுக்க முடியாது.

ரஷ்ய அறிஞர்களும், பினிஷ்ய அறிஞர்களும் சிந்துநதி நாகரிகம் திராவிடர்களுடையது என்று ஆராய்ந்து கண்டதற்கு அடிப்படை வித்து விளைத்தவர் ஈராஸ் அடிகள் என்பதில் ஐயமே யில்லை.

அவருடைய ஆராய்ச்சி முடிவுகளில் தவறுகள் இருக்கலாம். ஆனால் அவருடைய அடிப்படை அணுகுமுறை (Approach) ரஷ்ய, பினிஷ்ய அறிஞர்களாலும் பின்பற்றப்பட்டிருக்கின்றது.

நல்லரா என்ற பெயர் முதலில் நலமுடைய பாம்பு, அதாவது செழிப்புச் சின்னத்தை உடைய பாம்பு என்று வழங்கியிருக்கலாம்.

நாகப்பாம்பின் தலையில் உள்ள குறியைச் சங்க இலக்கியம் உத்தி என்று குறிக்கும். இதைச்

சுவஸ்திகம் என்று வடமொழி குறிக்கும். இந்தக் குறியே செழிப்புச் சின்னமாக நலம் என்று அழைக்கப்பட்டு இந்தக் குறியையுடைய பாம்பு நல்லரா, நல்ல பாம்பு என்று அழைக்கப் பட்டிருக்கலாம்.

பின்னர் அதன் கொடிய நஞ்சுத்தன்மையைக் குறித்து, நல்ல குணமுடைய பாம்பு என்று அழைத் திருக்கின்றனர்.

ஒரு திருத்தம்

குழூஉக்குறி என்பது, தமிழிலக்கியத்தில், பொற் கொல்லர் போன்ற குழுவினர் தங்களுக்குள் பிறருக்குப் புரியாப் பெயர்களால் பேசிக்கொள்ளு தலைக் குறிக்கும்.

ஆனால் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் தொல்காப்பியர் குறித்த தகுதி வழக்கில் (Verbal taboo) இவைகள் அடங்கா.

இதில் குழூஉக்குறியைப் பிற்கால உரையா சிரியர்கள் சேர்த்தது தவறு என்று தெரிகின்றது.

தகுதி வழக்கு

அமங்கலத்தை மங்கலமாகக் கூறுவதென்பது தகுதி வழக்கில் அடங்கும்.

தகுதிவழக்கு என்பது தடைப்படுத்தப்பட்ட வழக்கைத் தகுதியான வேறு வழக்காகச் செல்வ

தாகும். இதை இலக்கண உரையாசிரியர்கள் தெளிவாக உணரவில்லை. சரிவர நன்கு ஆராயாது விளக்கம் எழுதினரென்று தெரிகின்றது.

டாக்டர் எமேனோ ஆராய்ந்த விலங்குப் பெயர்த் தடை வழக்குகள் தொல்காப்பியர் குறித்த தகுதி வழக்கில் வரும் என்பதை உணரவேண்டும்.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்ட தகுதி வழக்கையும், அதற்கு உரையாசிரியர்கள் கூறிய விளக்கத்தையும், டாக்டர் எமேனோ கவனித்ததாகத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் அவற்றையும் எடுத்துக் கூறியிருப்பார்!

ஆதலின் தகுதிவழக்குகள் என்ற தொல்காப்பியர் கூறும் விலக்கப்பட்ட சொல்வழக்குகள், சங்க காலத்திற்கு முன்னரே தமிழில் வழங்கியிருக்க வேண்டுமென்று தெரிகின்றது. இனக்குழுச் சமுதாயத்திலிருந்து தமிழர் பண்பட்ட சமுதாயமாக மாறின போது அவ்வழக்குகள் மறைந்துவிட்டன. ஆயினும், இன்னும் பேச்சு வழக்கில் எச்சங்களாக உள்ளன.

தொல்காப்பியரும் தமிழ் இலக்கண உரை ஆசிரியர்களும் அந்த வழக்குகளை இனங்கண்டு குறிப்பிட்டிருக்கின்றனர். இதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் தடை வழக்குகள் அகற்றப்பட்டுத் தகுதி வழக்குகள்

வழங்கினமையால், உண்மையான நிலையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இத்தகைய மனப் பான்மைக்கு எடுத்துக்காட்டு வேண்டு மென்றால் 25 ஆண்டுகளுக்கு முன் கல்லூரித் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் 'முலை', 'அல்குல்' என்ற இலக்கியச் சொற்கள் தடைவழக்குகள் என்று கருதப்பட்டு, அந்தச் சொற்கள் வருமிடங்களில் கோடிட்டுப் பாடநூல்களை வெளியிடுவது வழக்கமாயிருந்தது.

சங்ககாலத்தில் பெண்கள் மார்பை மூடும் வழக்கமில்லை. ஆதலின் முலை என்ற சொல் தடைவழக்காகக் கருதப்படவில்லை.

ஆனால், இக்காலத்தில் பெண்கள் மார்பை மூடும் வழக்கம் இருப்பதால் 'முலை' என்ற சொல்லே தடைவழக்காக மாறி விட்டது.

ஆனால் மலையாளத்தில் இன்றும் இந்தச் சொல் சாதாரணமாக வழங்கப்படுகின்றது. இதற்குக் காரணம், கேரள நாட்டில் அண்மைக் காலம் வரையில் மார்பை மூடுவது என்ற பழக்கம் மலையாள மக்களிடையே இருந்ததில்லை. ஆதலின் 'முலை' என்ற சொல் இன்னும் மலையாள மொழியில் 'தடை வழக்கு' இல்லை. ஆனால் தமிழில் தடை வழக்காக உள்ளது.

முலை என்று சொல்லாமல் மார்பு என்ற பொதுச் சொல்லைத் தகுதிவழக்காகத் தமிழில் பயன்படுத்து கிறோம். சமூகத்தில் நாகரிகம், பண்பாடு ஆகிய

வற்றின் காரணத்தாலேயே இத்தகைய மாற்றங்கள் தோன்றுகின்றன.

இரண்டு காக்கைகள் உடலுறவு கொள்ளும்போது ஒருவன் பார்த்துவிட்டால் அவன் விரைவில் இறந்து விடுவான் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது. இதைத் தவிர்க்க, அவன், தான் இறந்துவிட்டதாக ஒரு பொய்யான செய்தியைத் தன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பி வைப்பான். தான் மரணத்திலிருந்து தப்புவதற்கு இஃது ஓர் உபாயமாக அமைகின்றது.

சொல் மாற்றங்கள்

தடைவழக்குகளை இக்காலத்தில் அறிஞர்கள் 'டாபூஸ்'(Taboos) என்ற பெயரால் அழைக்கின்றனர்.

இந்தச் சொல் பொனீசியர் (Phonesiar)களிடையே வழங்கிய 'தபு', 'தம்பு' Tabu and Tambu என்ற சொற்களின் அடிப்படையாக ஆங்கில மொழியிலும் பிற மொழிகளிலும் வந்ததாகும்.

இதே பொருளில் ஜாவானிய மொழியில் 'பண்டாங்கு' (Pan tang) என்ற சொல்லும், சிவப்பு இந்தியர்களிடையே 'வக்கான்' என்ற சொல்லும், கிரேக்கர் உரோமர்களிடையே Hegor and Sacer என்ற சொற்களும் வழங்கியுள்ளன.

ஆதலின் பண்டைக் குடிகளிடையே இந்தத் தடை வழக்குகள் பரவலாக இருந்தன என்பது தெரிகின்றது.

'தபு' என்ற பொனீசியச் சொல்லையே இன்று உலகமொழிகளில் தடைவழக்குகளைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

அதர்வண வேதத்தில் வரும் 'தாபுவா' (Tabua) என்ற சொல் பொனீசியர்களுடைய 'தபு' என்ற பெயர் வழக்கிலிருந்து வந்திருக்கலாம் என்று டாக்டர் டி.சி. சர்க்கார் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

'தபு' என்ற சொல்லின் மூலத்தை ஆராய்ந்தால், தமிழிலும் இந்தச் சொல்லுக்கு ஆதாரம் இருப்பதைக் காணலாம்.

'தபு' என்ற சொல் தொல்காப்பியத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. இந்தச் சொல்லைச் செயற் பாட்டு வினையாகவும் பயன்படுத்தலாம் என்று தொல்காப்பியம் கூறியிருக்கின்றது.

தபு என்ற சொல் 'நீக்கிய' என்ற விலக்குப் பொருளில் வழங்கியுள்ளது. இந்த 'தபு' என்ற சொல் பொனீசியரிடையே வழங்கிய Tabu என்ற சொல்லோடு உச்சரிப்பில் ஒத்து இருப்பதோடு, அடிப்படைப் பொருளிலும் ஒத்துள்ளது.

'தப்பு' என்ற சொல்லும் தமிழில் தடைவழக்கு என்ற பொருளில் வழங்குகிறது. ஆதலின் Taboo என்ற பொனீசிய சொல்லுக்கும் பண்டைத் தமிழில் வழங்கிய 'தபு', 'தபுத்த' என்ற சொற்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பொனீசியர்களுக்கும் பண்டைத் தமிழருக்கும் மிகப் பண்டைக்காலத்தே தொடர்பு இருந்ததற்கு பல சான்றுகள் உள்ளன. 'டாபூ' (Taboo) என்ற வழக்கு தொல்காப்பியர் கூறிய தகுதிவழக்கே என்பதை அறியலாம்.

தடைப்படுத்தப்பட்ட வழக்குகளைக் கூறக் கூடாமையால் தகுதி வழக்குகள் தோன்றின. அவைகளையே தொல்காப்பியர் 'தகுதி வழக்குகள்' என்று கூறினார்.

ஆனால் பிற்கால உரையாசிரியர்கள் இந்தப் பாகுபாட்டைப் புரியாமல் பலவித மயக்க உரைகளைக் கூறிய தகுதி வழக்குகளில் பெருப்பாலானவை, தடைவழக்குகளைத் தகுதி வழக்குகளாக மாற்றிக் கூறினவையே என்று உணரவேண்டும்.

தகுதி வழக்குகள் என்பவை நாகரிக வழக்குகள், பண்பாட்டு வழக்குகள் என்பதையும் உணரவேண்டும்.

குறிப்புகள்:

1. The curious expression, the "toothed rope' (putirajju) occur in Athava veda and for which it could not be difficult to find parallel in other languages. Mr. Crooke observes that snakes should be addressed uphemistically as "maternal uncle' or "rope' and if a snake bites you, you should never mention its name but say "A rope has touched me'. The use of these expressions are taboo notion. In pali we find the snake denoted by the words "digha' (long), "digha jatika' (of the long sort) which must have similar origin.

2. In Sierra leone, on the west coast there existed until recently a numerous and powerful secret society of men, the purriah whose members had developed along with ritual a secret tongue among gents unknown to the women.

3. கலித்தொகை 146ஆம் பாடலில் 'நக்கது' என்பதற்குப் புணர்ந்து என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. புணர்ந்தது என்று சொல்வது தடை வழக்காகையால் நக்கது என்று தகுதிவழக்காய் அமைக்கப்பட்டது. நக்கது என்பதின் பொருள் சிரித்தது என்பதாகும்.

நக்கது என்றதற்கு உரை கூறியவர் நக்க நலனிழந்தாள் என்று சொல்லியதைக் கவனிக்க வேண்டும்.

ஆண் மகனைக் கண்டு சிரித்து நலனிழந்தாள், கற்பை இழந்தாள் என்ற கூறியுள்ளதைக் கவனிக்கவேண்டும். இதன் காரணமாகவே மிகப் பிற்காலத்தில் "பொம்பளை சிரிச்சால் போச்சு, பொகையிலை விரிச்சால் போச்சு" என்னும்

பழமொழி வந்தது. இரண்டும் சிரித்தாலும் விரிச்சாலும் மானம் போச்சு என்பது இதன் உட்பொருளாகும்.

மேற்கோள் நூல்கள்:

1. The Golden Bough (Two volumes) Frazer.
2. Collected papers on Dravidian Linguistics, Prof. M.B. Emeneu, Annamalai University.
3. The story of language - Mario Pel-Unwin University.
4. Castes and Tribes of South India, Edgar Thurston, Munshiram Monsharlal, Delhi.
5. Dynamics of Synthesis in Hindu culture, Dr. H.K. Sircar, D.Sc.
6. Social History of Kerala - Volume I, The Pre Dravidians, L.A. Krishna Iyer.
7. Indian Serpent Lore, J.Pe. Vogel Ph.d., Indological Book House, Varanasi.
8. The Origin and Development of Vaishnavism, Mrs. Suvira Jaiswell.
9. Malayalam - English Dictionary, Dr. Gundert.
10. Studies in Proto-Hindo Medittarian Culture, Rev. Fr. Heras.
11. தமிழில் விடுகதைகள் - டாக்டர். ச.வே. சுப்ரமணியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
12. சங்க நூல்கள்
13. இராமானுஜர் வரலாறு - பி.ஸ்ரீ.

*

3

சங்கநூல்கள் தரும் செய்திகள்

பழந் தமிழிலக்கியத்தில் காணப்படும் சில அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தற்காலம் சாரணர்கள் 'சுவடு தேறுதல்' (Tracking) என்கிற பயிற்சியைத் தங்கள் திட்டத்தில் ஒன்றாகக் கொண்டுள்ளனர்.

கல்லின்மேல் கல்வைத்தால், புல்முடிதல், கிளை யொடித்து ஒதுக்குதல், அம்புக்குறி போடுதல் ஆகியவை கொண்டு சென்ற வழியைப் பின் வருவோருக்கு அறிவிப்பதுண்டு. இதை 'பேடன் பவுல்' என்பவர் ஆப்பிரிக்கக் காட்டு மக்களிடம் கற்றார். அதை அவர் சாரண இயக்கத்தில் புகுத்தினர்.

தமிழர்களிடமும் புன்முடிந்து வழியறிவிக்கும் பழக்கம் இருந்ததென்பதற்கு ஒரு சான்று உளது.

'பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்.'

(மலைபடுகடாம் 392 – 3)

'முற்காலம் நன்மை யறியாத தீயநிலத்தை, வழியறி யாமற் போய் மீண்டுவந்த புதியவர்கள், பின் வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பல வழிகளுங் கடின சந்நிதியைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பீர்' என்ற உரையே இவ்வழக்கத்தைத் தெளிவாக உணர்த்துகின்றது.

தற்காலத்தில் இருமல் வராமல் தடுக்க, சில 'மிட்டாய்' போன்ற இனிப்பு மருந்துகளை வாயில் அடக்குகின்றனர். மழவர் என்பார் புற்றுமண்ணை வாயிலடக்கி, இருமல் வராமல் தடுத்தனர் என்பதை அகப்பாடல் மூலம் உணருகிறோம்.

"....... செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணோடு கடுந்திறல்"
(அகம் . 101)

என்கிற வரிகள் இவ்வழக்கத்தைச் சொல்லுகின்றன.

குட்ட நோய் கி.மு 600க்கு முன்னரே இந்தியாவில் இருந்ததாகத் தெரிகிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் யூதேயா முதலிய நாடுகளில் குட்ட நோய்க்காரர்களை ஊர்களில் அண்ட விடாது ஒதுக்கும் வழக்கம் இருந்ததாக விவிலிய நூல் கூறும். இம்முறையில் ஒதுக்கும் வழக்கம் (Segregation) மிகவும் நல்லதொரு திட்டம்.

பழங்காலத்தில் சேரிகளில் குட்டநோய்க் காரர்களை அண்ட விடுவதில்லை என்பதை ஒரு கலிப்பாவின் மூலம் உணரலாம்.

*"தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானை"*
....

....

(கலி. 65)

ஒட்டகத்தைப்பற்றி அகநானூற்றில் அரிய குறிப்பு ஒன்று வருகின்றது.

*"குறும்பொறை உணங்குந் ததர்வெள் ளென்பு
கடுங்கா ஒட்டகத் தல்குபசி தீர்க்குங்
கன்னெடுங் கவலைய கான நீந்தி"*

(அகம். 245)

ஆங்கிலத்தில் 'பாலைவனக்கப் பல்' என்று அழைக்கப்படும் ஒட்டகம், எலும்பைத் தின்று பசியாறிப் பாலைவனத்தை நீந்திக் கடப்பதாக இப் பாட்டு கூறுகிறது.

அக்காலத்தில் நம்நாட்டில் ஒட்டகம் இருந்ததோ அல்லது வெறும் கேள்விவழிச் செய்தியோ என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

கலித்தொகையில் மட்டும் வரும் ஒருவிதப் பட்டுப்பூச்சியைப் பற்றிய குறிப்பு கவனிக்கத்தக்கது. இஃது, 'உலண்டு' என அழைக்கப்படுகின்றது.

"மேற்பாட்டு உலண்டின் நிறன்க்கு புன் குருக்காய்"

உலண்டு என்பது ஒருவகைப் பட்டுப்பூச்சி யென்றும், அது கருமை கலந்து செம்மை நிறமாக

(புகர் நிறம்) இருக்குமென்றும் கூறப்படுகிறது. இதைப்பற்றி வேறு யாதொரு குறிப்பும் சங்க இலக்கியத்தில் கிடையாது. இங்கே உலண்டு என்று கூறப்படுவது பட்டுப் பூச்சிதான் என்பதும் ஐயத்திற் கிடமானது.

மழை பெய்தவுடன் சில நாட்களுக்குள் பச்சைப் பசும்புல்லில் கருஞ்சிவப்புள்ள (Purple) ஒருவகைப் பூச்சி உலவுவதைப் பார்த்திருக்கலாம்.

இதன் மேற்புறம் 'வெல்வெட்' என்று சொல்லப் படும் துணிபோன்று மெத்துமெத்தென்று இருக்கும் மிகவும் அழகானதொரு பூச்சி. இது சில இடங்களில் வர்ணிக்கப்படுகின்றது.

இதை இந்திர கோபப் பூச்சி யென்று பிற் காலத்தில் வழங்கினர். 'ஈதல்மூதாய்' என்று இது சங்க இலக்கியத்தில் அழைக்கப்படுகின்றது.

''அரக்கத்து அன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்ம றாய்ப் பலவுடன்
ஈயன்மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய''

(அகம்: 14)

''மணிமிடை பவளம் போல வணிமிகக்
காயாஞ் செம்ம றாஅய்ப் பலவுடன்
ஈயன்மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்''

(அகம் 304)

மேற்காட்டிய பாடல்களிலும் இன்னும் அகம் 134, நற்றிணை, குறுந்தொகை முதலிய நூல்களிலும் இப்பூச்சி சொல்லப்படுகின்றது.

காய்ந்துபோன காயாம்பூவொடு இப்பூச்சிகள் கலந்து காண்பது பவளத்தொடு நீலமணியைத் தொடுத்து வைத்திருப்பது போலிருப்பதாகக் கூறப்படுகிறது.

முல்லை நிலத்தில் திடீரென்று மழை பெய்தபின், காயாம் பூக்கள் உதிர்ந்த இடத்தில் இப்பூச்சிகள் உலவுவதைக் கண்ட புலவர், அதை அழகிய ஓர் உவமையாக்கினார்.

'ஈர்ம்புறம் வரிப்ப' என்று சொல்லப்படுவதில் இருந்து மழைக்கப்புறம் இது தோன்றுவது தெரிகின்றது.

அரியதோர் இயற்கைச் செய்தியை அழகிய உவமை வாயிலாக வெளியிட்ட நம் புலவர்களின் திறமை போற்றத் தக்கது.

ஈயல் என்ற பூச்சி மழைக்காலத்தில் புற்றிலிருந்து புறப்படுவதைப் பார்த்திருக்கலாம். இந்த ஈயலை மக்கள் உண்ணும் வழக்கம் பழங்காலத்தில் இருந்த தென்பதைச் சங்கநூல் வாயிலாக உணருகிறோம்.

"உடும்ப கொரீஇ வரிநுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத் தீயல் கெண்டி"

"சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்
இதைப்புன வரகி னவைப்புமா ணரிசியொடு
கார்வாய்ப் பொழிந்த வீர்வாய் புற்றத்து
ஈயல்பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு."

(அகம். 394)

''புன்புற எருவைப் பெடைபுணர் சேவல்
குடுமி எழாலொடு கொண்டு கிழக்கிழிய''

(பதிற்று. 36: 910)

''நிழல்அறு நனந்தலை எழால்எறு குறித்த''
எனப் பல நூல்களிலும் இப்பறவை சொல்லப்படுகின்றது.

தொல்காப்பிய மரபியலில் எழால்–புல்லூறு எனக் கூறப்படுகின்றது. தற்காலத்தில் இதை வல்லூறு எனக் கூறப்படுகின்றது. வல்லூறு என்றும் ராஜாளி என்றும் அழைக்கின்றனர்.

இப்பறவை செங்குத்தாக மேலெழும்பிப் பறந்து பின்னர் துடுமெனப் பாய்ந்து விண்ணிலேயே பிற பறவைகளைக் கால்களால் பிடித்துக் கொன்று உண்ணும் கொடிய பழக்கத்தை உடையது.

'புள்ளூறு' என்பதே இதற்குப் பொருத்தமான பெயர்.

இதைப் போல மிக உயரமாகவும் செங்குத்தாகவும் மேலெழும்பிப் பறக்கும் பறவைகள் மிகச் சிலவே. இதை எண்ணியே பழந்தமிழர் இசையில் மேலெழும்பி (உச்சஸ்தாயியில்)ப் பாடுதற்கு 'எழால்' என்று பெயரிட்டனர் எனக் கருதலாம்.

'எழு' என்ற மூலச்சொல்லின் வழிவந்ததே 'எழால்' என்ற சொல்லும்.

இதே இனப் பறவையான ஃபால்கன் (Falcon) ஆங்கில நாட்டில் உளது. இப்பறவை மேலே பறக்கும் உயரத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் (Pitch) என்பதே அந்நாட்டு இசையிலும் 'மேலெழுநிலை' (உச்சஸ்தாயி)யைக் குறித்து வருகின்றது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இப்பறவைக்கும் இசைக்கும் தொடர்பு காட்டி வரும் சொல்லொற்றுமை மிகவும் வியப்புக்குரியது.

ஐரோப்பிய நாடுகளில் முயல் முதலிய சிறு விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாட இப்பறவை பழக்கப் படுத்தப்பட்டது. இப்பறவை களை அரசர்களும் உயர்குலப் பெண்களும் தங்கள் பொழுது போக்குக்காகப் போற்றி வந்தனர். இதை ஒரு கலை (Falconry) யாகவே மதித்து வந்தனர்.

கி.மு. 600இல் இப்பறவை இந்தியாவிலும் வளர்க்கப் பட்டது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

தமிழ் நூல்களில் இப்பறவையை வேட்டை யாடப் பயன்படுத்தினதைக் குறித்துவரும் இடங்கள் ஒன்றுமில்லை. ஆயினும் பிற்காலத்திய ஏட்டுச்சுவடி யாக உள்ள 'கருணீகர் புராணம்' என்ற நூலின்மூலம் இப்பறவை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டது என்பது தெரியவருகின்றது. சென்னியச் சோழன் என்பவன் வேட்டையாடுவதை விளக்கமாகக் கூறும் பாடலில் இக்குறிப்பு வருகின்றது.

"கட்டியே வலையொழுங்காய்க் கயிறதாம்
கண்ணிசேர்த்தும்
வெட்டியே முட்கடன்னை வெளிதெரி வழியடைத்தும்
மட்டிலாப் பதங்கமான மாளவே வேட்டைக்காரர்
விட்டனர் வல்லூறுதன்னை வீழ்ந்திடப் பறவைதானே"

மேற்காட்டிய வரிகளில், பறவைகளை வேட்டை ஆட வல்லூறு பயன்பட்டது தெரியவருகின்றது.

கிரேக்கர்களும் ரோமர்களும் குறிப்பிட்ட காலங்களில் நாடுவிட்டு நாடுபோகும் பறவைகளைப் பற்றி (Migratory Birds) அறிந்திருந்தனர். தற்போதுகூட இப்பறவைகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்தது மிகவும் குறைவே.

மணிமேகலையில் வரும் *"பறவை பயன்துய்த் துறைபதி நீங்கா"* என்னும் வரி இப்பறவைகளையே குறிப்பதாகத் தெரிகின்றது.

மற்றும் தமிழ் நூல்களில் கூறப்படும் அசுணமா, எண்கால் வருடை, பேரண்டப்பறவை, ஆளி ஆகிய *அரிய உயிர்களைப் பற்றித் தற்பொழுது ஒன்றும் தெரியவில்லை.

பிற்காலத்தில், பல்லவ அரசர்கள் காலத்தில் காண்டாமிருகம்' பட்டயத்தில் கூறப்படுகின்றது. கூரம் பட்டயம் இதைக் கூறுகின்றது.

சீவகசிந்தாமணி 930ஆம் பாட்டு காரன்னத்தைப் பற்றிக் கூறுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை உரையில் 'காரன்ன முண்மையின்' என்று நச்சினார்க்கினியர் எழுதி உள்ளார்.

கருப்பு நிறமுள்ள அன்னம் ஒரு புராணக் கதையென்று பலரும் கருதி வந்தனர். ஆனால் ஆஸ்திரேலியாவில் இது சில காலத்திற்குமுன் கண்டுபிடிக்கப்பட்டது.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த ஜுவனல் என்ற கிரேக்கக் கவி காரன்னத்தைப் பற்றி எழுதி உள்ளார். காரன்னம் தமிழ்நாட்டில் இருந்து இருக்கலாம். (இது காலை, மேல்நாட்டிலிருந்து கொணர்ந்து வைத்துள்ளனர்)அல்லது அதைப்பற்றிப் பிறநாட்டு வழித் தெரிந்திருக்கலாம்.

செம்மயிருடைய எலியின் தோலிலிருந்து ஆடை செய்தனர் என்பதைச் சீவகசிந்தாமணியிலிருந்து உணருகிறோம்.

இந்தச் செம்மயிருடைய எலி இருந்திருக்கலாம், பின்னர் மறைந்திருக்கலாம் என்பதற்குச் சான்றுகள் உள.

வடகரோலினாவில் இப்பொழுதுகூட 'சின்ச்சில்லா' (Chinchilla) எனும் எலி போன்றதொரு விலங்கு உளது. உலகிலே மிகவும் விலைபொருந்திய தோல் இந்த எலியிடமிருந்து பெறப்படுகிறது. இது போன்ற தொரு எலி தமிழ்நாட்டில் பழங்காலத்தில் இருந்திருக்கலாம்.

கலித்தொகையில் 'சிம்புள்' என்றதொரு விலங்கு கூறப்படுகிறது.

எட்டுக் கால்களும், இரண்டு தலைகளும், வட்டமான கண்களும், வளைந்த எயிறுகளும் உடையதென்று கூறப்படுகின்றது.

சிம்புள், எண்கால்வருடை போன்ற உயிர்கள், மிக மிகப் பழங்காலத்து உயிர்களைப்பற்றி நம்முன்னோர் செவிவழி அறிந்த செய்திகளாக இருக்கலாம்.

புராணங்களில் கூறப்படும் சில நம்பமுடியாத உயிர்கள் மிகமிகப் பழங்காலத்தவை என்று உயிர்நூல் வல்லுநர் கருதுகின்றனர்.

ஒற்றை மருப்புக்குதிரை (யூபம்) (Unicorn) இருந்ததாகப் புராணங்கள் கூறும். ஒரு கொம்புடைய அத்தகைய விலங்கு மிகப் பழங்காலத்தில் இருந்ததாகவே அறிவியலார் கருதுகின்றனர்.

நம்பமுடியாத பல உயிர்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளன. அதுபோல் சில உயிர்கள் தமிழ்நாட்டிலும் இருந்த; பின்னர் அழிந்தன எனக் கருதுவது மிகையன்று.

4

கரிக்குருவி

தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுகளில் ஒன்று (S.I. III .44) 'இவள்தானும்... இவன் அடைகுடி ஆனைச்சாத்தானும்' என்று கூறுவதைக் காணலாம். அடைகுடி ஆனைச்சாத்தன் என்ற பெயர் ஒருவனின் பெயராகக் கூறப்பட்டுள்ளது.

சாத்தன் என்ற பெயரைப் பிற்கால இலக்கண உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டாக உரையில் பயின்றுள்ளனர்.

தெய்வப் பெயர்

சாத்தன் என்னும் தெய்வம் முதலில் சமணர், பௌத்தர்களால் வழிபடப்பட்டுப் பின்னர் இந்து மதத்திலும் புகுந்தது.

சங்ககாலத்திலேயே சாத்தன், சாத்தி என்ற பெயர்களுடைய புலவர்கள் இருந்தனர்.

சோழர் காலத்தில் இராசராசன், இராசேந்திரன் கல்வெட்டுகளில் சாத்தன் என்னும் பெயர் பலமுறை வருகிறது.

இன்று சபரிமலை சாஸ்தாவின் வழிபாடு, விளம்பரத்தால் நன்கு பரவியுள்ளது.

ஆனைச் சாத்தன்

'அடைகுடை ஆனைச்சாத்தன்' என்ற பெயர் ஆழ்ந்த பொருளுள்ள அரிய பெயராகும். இவ்வளவு நீளமான பெயர் ஒருத்தனுக்குச் சூட்டப்பட்டிருந்ததும் அரிதாகத் தெரிகின்றது.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி 'அடைவு' என்னும் சொல்லிற்குப் 'புகலிடம்' என்று பொருள் கூறியுள்ளது. பறவைகள் தங்குமிடம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. புகலிடம் என்பது அடைக்கலம் தரும் இடம் என்று பொருள்தரும்,

பறவைகளைக் குறித்து வழங்கினால் பறவைகளின் சரணாலயத்தைக் குறிக்கும். அடைகுடி ஆனைச்சாத்தன் என்ற பெயர் முதலில் ஒரு பறவையின் பெயராகத் தோன்றிப் பின்னர் மாந்தர்க்குப் பெயராக மாறியுள்ளது.

ஆனைச்சாத்தன் என்ற பறவையைத் திருப் பாவையில் ஆண்டாள் பாடியிருக்கிறாள்.

''கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே''

-திருப்பாவை, 7

ஆனைச்சாத்தன் என்ற பறவை, கருங்குருவி இனத்தில் ஒருவகையான வலியன் பறவை என்பதாகும். மலையாளத்தில் இந்தப் பறவையை 'ஆனைராஞ்சி' என்று அழைக்கின்றனர்.

யானையை இறாய்ஞ்சிச் செல்லும் அளவு வலிமை உடையதாகக் கருதி இவ்வாறு அழைத்தனர். தமிழிலும், இந்தப் பறவையை 'வலியன்' என்று அழைப்பதும் இதே கருத்தினால்தான் என்பது புறப்படுகின்றது.

மயிலைநாதர் உரையில் இப்பறவை வலியன், வயவன் என்று அழைக்கப்பட்டுள்ளது.

வயவன் என்ற பெயர் வலிமையுடையவன் என்று பொருள் தரும்.

இந்தப் பறவையினத்தில் ஒரு வகையைக் கருங்குருவி என்று நாலாயிர திவ்வியப் பிரபந்தம் அழைக்கிறது. இப்பறவையை வடமலையாளத்தில் 'கரிங்ஙாத்தி' என்று அழைக்கின்றனர். கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் 'கருவாட்டு வாலி' என்று அதன் வாலின் உருவத்தைக் குறித்துப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

உண்மைச் செய்தி

ஆனைச்சாத்தன் பறவை விடியற்காலையில் 'கீசுகீசு' என்று கலந்து பேசுவதாக ஆண்டாள் திருப்பாவையில் கூறியுள்ளாள். பறவை நூற்படி இந்தச் செய்தி முற்றிலும் உண்மையான இயற்கைச் செய்தியேயாகும்.

நானே விடியற்காலையில் நான்கு மணிக்கு இரண்டு அல்லது மூன்று வலியன் குருவிகள் ஒன்றை

ஒன்று விளித்து உசாவிப் பேசுவது போன்று குரலிடுவதைக் கேட்டிருக்கிறேன்.

நாவலிலும் உள்ளது

இதேபோன்று விடியற்காலத்தில் வலியன் குருவி கத்துவதைக் கிராமச் சூழ்நிலையில் கண்ட நாவலாசிரியர் தி. ஜானகிராமன் ஒரு புதினத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வலியன் குருவியின் பழக்க வழக்கத்தை நன்கு தமிழன் தெரிந்திருந்ததையும், அதையே தற்காலத்தில் பறவை நூலார் கண்டு கூறியதையும் கவனிக்கலாம்.

சிறந்த பறவை நூலறிஞரான டாக்டர் சலீம் அலி என்பார் விடியற்காலையில் இப்பறவைகள் கத்துவதைப் பற்றி ஆண்டாள் சொல்லியது போலவே விளக்கியுள்ளார்.

வலியன் குருவிக்கு வலியன் என்றும், ஆனைச்சாத்தன் என்றும், ஆனைராஞ்சி என்றும் எப்படிப் பெயர்கள் வந்தன என்பதை அறிவியற்படி ஆராய்ந்தால், 'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற பெயர் எப்படி வந்தது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற பெயர் முதலில் 'ஆனைச்சாத்தன்' என்றழைக்கப்பட்ட பெயர் வலியன் குருவியையே குறித்து வழங்கியது. பின்னர் மாந்தர்க்கும் பெயராக வழங்கிற்று.

சாத்தன், சாத்தி என்னும் பெயர்கள் இலக்கண உரையாசிரியர்கள் காலத்தில் மாந்தர்க்குப் பெயராகவும் வழங்கியிருப்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

வலிமை மிக்க குருவி

வலியன் குருவி சிறிய குருவி ஆயினும் வலிமை மிக்கது. வீரதீரமும் தைரியமும் மிக்கது. வலியன் குருவி கூடு கட்டின இடத்தில், மரத்தில், கழுகு காக்கை போன்ற பறவைகள் அருகில் வந்தாலும் கடுங்குரலிட்டு வலியப் பாய்ந்து விரட்டியடிக்கும் திறமை வலியன் குருவிக்கு உண்டு.

ஆனால் கழுகு, காக்கை போன்ற பறவைகள் உருவில் பெரியவை யாயினும் வலியன் அவற்றை வெல்லும் மனத்திண்மையுடையது. உண்மையில் வலியனுக்கு உடலில் அவ்வளவு வலிமை இல்லை. ஆனால், வலியன் தன் மனத்திண்மையால், காக்கை போன்ற பெரிய பறவைகளையும், பறவைகளைக் கொன்று தின்னும் கழுகு போன்ற பெரிய பறவைகளையும் விரட்டி விரட்டி அடிக்கும் தறுகணும் செயலாற்றலும் மிக்கதாகும்.

வலியன் குருவியின் இந்த வீர தீரத்தை உணர்ந்தே, வலிமையற்ற பறவைகள் கழுகு காக்கைகளிடமிருந்து தங்கள் முட்டைகளையும், தங்களையும் பாதுகாத்துக் கொள்ள, மரத்தில் வலியன் கூட்டுக்கு அருகிலும் அடியிலும் கூடு கட்டும் வழக்கமுடையன.

இந்தப் பழக்க வழக்கத்தால் வலியன் குருவி கூடு கட்டின இடம், மரம் மற்றப் பறவைகளுக்குப் புகலிடமாக, சரணாலயமாக மாறிவிடுகின்றது.

இத்தகைய புகலிடம் தரும் வலியன் குருவியை 'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்று அழைத்தது அருமையான பெரிய இயற்கைச் செய்தி அறிவியற் செய்தி பொதிந்த பெயர் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மக்கள் வழக்கு

கிராமச் சூழ்நிலையில் வாழும் நாட்டார் மக்கள் இந்தச் செய்தியைக் கண்டே வலியன் என்ற பெயரால் இன்னும் இப்பறவையை அழைக்கின்றனர். 'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற கல்வெட்டுப் பெயரின் முழுப் பொருளும் அதிலுள்ள ஆழ்ந்த கருத்தும் வலியன் குருவியுடன் இணைத்துப் பார்க்கும்போதுதான் புலப்படுகின்றது.

வலியன் குருவியின் அஞ்சாநெஞ்சையும் ஆற்றல் மிக்க செயலையும், நாட்டார் மக்களும், பழங்குடி மக்களும் நன்கு உணர்ந்திருந்தனர்.

வீந்தைச் செய்திகள்

இமயமலை அருகில் வாழும் 'குக்கி' (Kukee) என்ற மலைக்குடிகளின் அரசன், பழங்காலத்தில் கருங்குருவியின் இறக்கையை அரசுச் சின்னமாக தலையில் அணிவது உண்டாம்.

ஆப்பிரிக்காவில் காங்கோ நாட்டு மக்கள் வலியன் பறவையைத் தங்கள் மொழியில் 'சினப்புலி' (Angry tiger) என்றழைக்கின்றனர்.

வலியன் குருவி சினத்திற்கும் தைரியத்திற்கும் வீரத்திற்கும் பேர் போனது. வலியன் குருவி விரைவாகப் பாய்ந்து எதிரியைத் தாக்கி மீளும் தன்மையைக் கண்டே, அதை யானையை இறாய்ஞ்சிச் செல்லும் வலிமையுடையது என்று கற்பித்து 'ஆனைராஞ்சி' என்றழைத்தனர்.

யானையைத் தூக்கிச் செல்லக்கூடிய ஆற்றல் மிக்க பறவை என்ற கற்பனை ஆண்டாள் காலத்திலும் இருந்ததால், ஆண்டாளும் அக்காலத்தில் தமிழில் வழங்கிய 'ஆனைச் சாத்தன்' என்ற பெயரால் வலியனை அழைத்திருக்கிறாள்.

வயவன் என்ற பெயர் சங்க நூல்களில் புலிக்கு வழங்கியுள்ளது. வயமான் என்பதும் புலியாகும். இதே பெயர், உரையாசிரியர் மயிலைநாதர் காலத்தில் வலியனுக்கும் வழங்கியுள்ளது.

இந்த வழக்கு காங்கோ நாட்டு மக்களின் வழக்குடன் ஒத்திருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வடநாட்டின் கோட்வால் (Superindent of Police) என்று அழைக்கப்படுகின்றது. பிற இனப் பறவைகளைக் ஓர் காப்பாற்றும் அதிகாரி என்று கருதி அவ்வாறு வழங்கினர்.

நூல்களில் பிற பெயர்கள்

வலியன் பறவையைத் திருவிளையாடல் புராணத்தில் **'கோக்கயம்'** என்று அழைத்திருப்பதைக் காணலாம். வலியனைக் **'கயவாய்'** என்று நிகண்டுகள் கூறுகின்றன. கயவாய் என்பது பெரிய வாய் என்று பொருள்படும்.

பெரிய வாயாடி என்னும் நாட்டு வழக்கில் இப் பொருளைக் காணலாம். ஆதலின் பெரிய பேச்சு உடையது என்னும் பொருளில், கயம் என்னும் தலைமையைக் கொண்டது என்ற பொருளில், கயவாயுடைய பறவைகளின் அரசன் என்ற பொருளில் கோக்கயம் என்று திருவிளையாடல் புராணம் கூறியுள்ளது. ஆண்டாள் 'கீசு கீசென்று' கூறி இதன் பெரிய பேச்சை குறிப்பிட்டதைக் கவனிக்க வேண்டும்.

புராணச் செய்தி

வலியன் குருவி மிகப் பண்டைக் காலத்தில் எளிமையுடைய, வலிமையற்ற பறவையாக இருந்ததாகவும், சிவபெருமானின் அருளால் இந்தப் பறவை வலிமையையும் சாகாவரத்தையும் பெற்ற தாகவும் ஒரு புராணக் கதை சைவர்களால் படைக்கப் பட்டது.

இது புனைகதை என்பதைப் பகுத்தறி வாளர்கள், அறிவியல் நோக்குடையவர்கள் புரிந்து கொள்வர்.

இந்தச் சிறிய வலியன் பறவையின் வீரதீரத்தைப் பட்டறிவால் கண்டுணர்ந்த செய்தியைப் பயன் படுத்திச் சோமசுந்தரக் கடவுளைப் பெருமைப்படுத்து வதற்காகவே இந்தக் கதை தமிழ்நாட்டில் புனையப் பட்டுப் புராணமாக்கப்பட்டது.

இலக்கியத்தில் சேர்த்தல்

நாட்டார் மக்களின் பழஞ்செய்திகள், நம்பிக்கைகள் முதலியன உயர்ந்தோர் இலக்கியத்தில் நுழைக்கப் பட்டு மேம்பாடடைவதுண்டு. அவை புராணங்களிலும் இலக்கியத்திலும் நுழைந்து, மேன்மக்களுக்கும் மதத்தின் அடிப்படையில் நம்பிக்கைக்கு உரியதாகவும் ஒப்புக்கொள்ளத்தக்கதாகவும் ஆவதுண்டு.

திருவிளையாடல் புராணத்தில் வரும் கருங் குருவிக்கு மந்திர உபதேசம் செய்து கொடுத்த கதை நாட்டார் பண்பாட்டுச் செய்தியை வைத்துக் கொண்டு புனைந்து படைக்கப்பட்டதாகும்.

இயற்கையிலேயே வீரதீரமுடைய பறவை களுக்குப் புகலிடமாக இருந்து, ‘அடைகுடியாக’ இருந்து, பறவைகளுக்கு அரசுத் தன்மை செலுத்தக் கூடிய இந்த வலியன் பறவையைப் பண்டைக் காலத்தில் வலிமையற்றதாக இருந்ததென்றும், சிவபெருமானின் அருளால் கோக்கயத்தன்மை, அதாவது பறவைகளுக்குள் அரசுத் தன்மை பெற்ற தாகவும் திருவிளையாடல் புராணம் புனைந்து கூறுகிறது.

ஆனால் திருவிளையாடற் புராணம் இந்த வலியன் குருவிகளின் கீச்சும் பேச்சும் சாகா வழிக்கு உதவும் மந்திரமாகக் கொண்டது என்றும், வலியன் குருவி இந்த மந்திரத்தைச் செபிப்பதாகவும் கற்பனை பண்ணிக் கூறியிருப்பதைக் காணலாம்.

இந்தக் கதை முதலில் புனையப்பட்டது கல்லாடத்திலாகும். மிகப் பிற்காலத்தில் தோன்றிய காஞ்சிப் புராணமும் இதனைக் கூறியுள்ளது.

இந்தப் புராணக்கதை தமிழ்நாட்டில் மட்டும் தோன்றியது.

இத்தகைய க்தைகளைப் புத்த ஜாதகக் கதைகள் போலத் தமிழ்நாட்டில் சைவர்கள் புனைந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

திருவிளையாடற் புராணக் கதைகளுக்கு வட நாட்டுப் புராணத் தொடர்பு பெரிதுமில்லை. ஆனால் இந்தக் கதையை வேத வழக்குடன் ஒப்புக் கொள்ள வேண்டுமென்பதற்காக, வடமொழியில் 'மிருத்துஞ்சய மந்திரத்தை', அதாவது சாகா வழிக்குதவும் மந்திரத்தைக் கரிக்குருவிகள், வலியன் குருவிகள் செபிப்பதாகத் திருவிளையாடற் புராணம் கூறிற்று.

அரும்பெரும் புத்தியுள்ள வன்புடைச் சடக மேநின்
பெருங்குலக் கிளைக்கு மப்பாற்
பெறும்பேறு மிளம் பார்ப் பிற்கும்
பொருந்துமிம் மந்திரத்தைப் போதியிப் புவனமெச்சப்
பரிந்தவை யாவு முய்ந்து பயமறத் திரிவதற்கே.

அயர்வது சிறப்பின் மிக்க வவனிமீ தென்று நந்த
முயர்விளை யாடல் காண வும்பரு மதிச யிப்பச்
செயிரறு பறவைக் கெல்லாந் தீபமே யனைய வுன்றன்
பெயரது வலியா னென்று பேசிடக் கடவ தென்றே,

கருணையிற் பரிசஞ் செய்து
கருதியித் தகவுஞ் சொல்லிப்
பொருவரு முன்னிடத்துப்
போவென விடைகொடுப்பக்
குருவியு மாலித்தன்பு கூர்ந்துபோய் விடியு முன்னர்
விரைவொடும் புகுந்து காட்டில்
வெல்லுமந் திரமோதிற்றால்,

மறுவறு சிகரம் பன்னாள் வலஞ்செய்து சிறகு நோவ
நெறியினின் வணங்கிப் பெற்ற நிகரிலா மந்திரத்தைப்
பிறிவருஞ் சாதிக் கெல்லாம் பிஞ்ஞக னருளாற் கூடி
அறிவுற வுபதே சிப்ப வப்படி யோதிற் றன்றே.

நன்பரி வெய்தி யாவு நவையற வோது முன்னர்
வன்பெரும் பகையை வெல்ல
வல்லநன் விளைவு தோன்ற
முன்பது கண்ட பின்ன ரவையவை முடுக்கிக் காக்கை
யின்புறு தலையி லெற்றப் புகுந்தன வெங்கு மெங்கும்.

கோக்கய நோக்கைநீக்கிக் கூர்க்குமூக் குடைய யாக்கைக்
காக்கைக டலைபி ளக்கக் கத்தமுற் பகைநினைந்து
மேக்குறீஇ யொன்றுக்கொன்று
விரைவொடு மாறிமாறிப்
போக்கறத் தொடர்ந்து குட்டப்
புகுந்தன வெங்குமெங்கும்.

ஆங்கது கண்ட போதே யதிசயித் தவனி யோர்கள்
பாஙகுடைச் சொக்கன் வல்ல வல்லபம் பாரீர் பாரீ

ரீங்குமுன் கண்ட தன்றிங் கிறைஞ்சின பின்னரென்றே
வாங்கரு முவகை கூர்ந்தார்
பெயரையும் வலியா னென்றார்.

(கரிக் குருவிக்கு அருள் புரிந்த திருவிளையாடல் - பாடல்கள் 8-14)

மேலே கூறப்பட்ட திருவிளையாடற்புராணப் பாடல்களின் மூலம், எவ்வாறு மெலியனான கரிக் குருவி சிவபெருமானால் உபதேசிக்கப்பட்ட மிருத்துஞ்சய மந்திரத்தை ஓதினபின் வலியன் ஆனது என்பது விளங்குகின்றது.

தன் பகையான காக்கைகளின் தலையைப் பிளக்கக் 'கூர்க்கு மூக்குடைய யாக்கையையுடைய கரிக்குருவி' தலைமையாகிக் கோக்கயமாகியது என்று கூறப்பட்டுள்ளது.

மற்றுமொரு அரிய செய்தி திருவிளையாடற் புராணத்திலே சொல்லப்பட்டுள்ளது.

சிவபெருமான் உபதேசித்த மிருத்துஞ்சய மந்திரத்தை, விடியற்காலையில், இருபத்தைந்து நாழிகைக்குப் பிற்பட்ட காலமான பிரம முகூர்த்தத்தில் ஓதினால் காக்கைக்குப் பயப்படவேண்டியதில்லை என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆண்டாள் திருப்பாவையில் விடியற்காலையில் 'கீசுகீசென்று' கரிக்குருவி பேசியதையே சைவர்கள் மிருத்துஞ்சய மந்திரத்தைக் காலையில் கரிக்குருவி ஓதுவதாகக் கருதினர்.

ஆனால் திருவிளையாடற்புராணம் புனைந்து கூறிய இக்கதையின் கரு (Source) நாட்டார் கண்டறிந்த கரிக்குருவியின் இயற்கை அறிவியல் செய்தியேயாகும்.

இச்செய்தியே மாற்றப்பட்டு, திரிக்கப்பட்டுப் புராணக்கதை ஆகியது என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மலையாளத்தில் நிலைத்துள்ளன

இன்றைய மலையாள மொழியில் பல பண்டைய தமிழ் வழக்குகளும் மரபுகளும் காப்பாற்றப் பட்டுள்ளன. கேரளநாடு தமிழகத்திலிருந்து மலைத் தொடர்களால் பிரிக்கப்பட்டதால் (Isolation) தூய தமிழ் வழக்குகள் சில துறைகளில் காப்பாற்றப்பட்டன.

கேரள நாட்டில் நாட்டார் பண்பாட்டியலில் பல அரிய பெரிய தமிழ்ப்பண்பாட்டு மரபுகள், செய்திகள் காணப்படுகின்றன.

வலியன் பறவை இனத்தில் உள்ள மூன்று நான்கு வகைகள் பேச்சு வழக்கில் காக்கத் தம்புரான், காக்கத் தம்புராட்டி என்று அழைக்கப்படுகின்றன. இந்த மலையாளப் பெயர்களுள் எல்லாம் வலியன் குருவியைத் தம்புரான், தம்புராட்டி என்ற அரசனின் பெயரையும் அரசியின் பெயரையும் இணைத்து வழங்குவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

இந்தக் கருங்குருவிகளில் நான்கு சாதி உண்டு. ஒரு வகை தம்புரானாகவும் இன்னொரு வகை தம்புராட்டியாகவும் கூறப்பட்டது கவனிக்கத்தக்க தாகும்.

ஆயினும் தம்புரான், தம்புராட்டி என்னும் பெயர்கள் இந்தப் பறவைக்கு வழங்கப்பட்டிருப்ப தால் மலையாள மொழியிலும் மக்களிடத்தே இந்தப் பறவையின் ஆற்றலையும் அதிகாரத்தையும் உயர்ந்த தாகக் கருதிப் பெயரிட்டழைத்தார்கள் என்பது தெளிவாகின்றது.

தாய்வழி மரபுப் பெயர்

தம்புராட்டி என்ற மலையாளப் பெயர் தாய்வழி முறையை (mother right) ஒட்டி வழங்கியதாகும். வலியன் குருவிகளில் தம்புராட்டி என்றழைக்கப்படும் குருவி வகை தம்புரான் என்றழைக்கப்படும் குருவி வகையைவிட மிக்க வலிமையுடையது என்ற மலையாள நாட்டு மக்கள் நம்பிக்கையும் கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

மலையாளத்தில் தம்புராட்டி, தம்புரான் என்று வழங்கும் பெயர்களுடன், திருவிளையாடற் புராணத்தில் வழங்கும் கோக்கயம் என்ற அரசுப் பெயரையும், 'குக்கிள்' என்ற பழங்குடிகளில் அரசன் வலியன் குருவியின் இறகைத் தலையில் தரித்ததையும் இணைத்து ஆராய்ந்ததால், அடிப்படை உண்மை விளங்குகின்றது.

மொழியில் இடைவெளியால் மிக வேறுபட்ட இனத்தினரும், இடத்தினரும், இந்தப் பறவையின் பழக்க வழக்கத்தை நன்கு உணர்ந்து, இப்பறவையின் அஞ்சா நெஞ்சமுடைய வீரதீரத்தை உணர்ந்து, பாதுகாக்கும் குணத்தை உணர்ந்து, இதற்கு அரசுத்தன்மை கற்பித்து ஏற்றனர் என்பது தெளிவாகின்றது.

5

மீன்கொத்தி

நீரில் துடுமெனப் பாய்ந்து வெள்ளிமீனைச் செம்பொன்னலகில் கௌவி நொடிப்பொழுதில் மறையும் நீலமணிப் பறவையைப் பலரும் பார்த்திருப்பர். நாட்டுப் புறங்களில் நீர்நிலைகளிலும் கிணறுகளிலும் காணப்படும். இப்பறவையைத் தற்காலத்தில் 'மீன்கொத்தி' என்று அழைக் கின்றனர்.

இந்த மீன்கொத்திப் பறவை சிரல், சிச்சிலி, தித்திரி, பொன்வாய்ப் புள், பொன்னாந்தட்டான் என்று பல பெயர்களில் இலக்கியத்திலும் பேச்சு வழக்கிலும் அழைக்கப்படுவதைப் பலரும் அறியார்.

மீன் கொத்தியில், நீலநிறமான பெரிய மீன்கொத்தி, சிறிய மீன்கொத்தி, கருமையும் வெண்மையும் கலந்த மீன்கொத்தி என மூன்று வகை மீன்கொத்திகளை நாட்டுப்புறங்களில் காணலாம்.

நீலநிற மீன்கொத்தி உருவில் இரண்டு வகைப் படும். மற்றபடி நிறம் அமைப்பு, வழக்கம் ஆகிய வற்றில் இரண்டுக்கும் வேற்றுமை கிடையாது.

இம் மீன் கொத்திகளில் கருமையும் வெண்மையும் கலந்த பறவையைப்பற்றிச் சங்க நூல்களிலும் பிற்கால நூல்களிலும் யாதொரு குறிப்பும் காணோம்.

இயற்கையில் காணும் அழகையெல்லாம் சொற்களில் ஓவியமாகத் தீட்டிய பண்டைப் புலவர்கள் கண்களில் இந்நீலமணிப் பறவை படாது போகுமோ?

உள்ளுறை உவமமாகவும், உவமையாகவும் சங்கப் பாடல்களில் இப்பறவை கையாளப்படுகின்றது.

இளமீன்கொத்தியும் முதுமையான மீன்கொத்தியும் ஒரு கிணற்றில் மீன் பிடிக்கலாயின. கரையில் அமர்ந்து காத்துக் கிடந்து துள்ளும் ஒரு வெள்ளி மீனைப் பிடிக்க முதுசிரல் பறந்தோடியது. ஆனால் உயரப்பறந்து வந்த இளஞ்சிரல் துடுமெனப் பாய்ந்து வெடுக்கெனக் கௌவிப் பறந்தோடியது.

இச்செய்தியை அருகில் தலைவி இருக்கச் சேரிப்பரத்தை தலைவனால் கவர்ந்து சென்ற செய்தியோடு ஒப்பிட்டு உள்ளுறை உவமமாக ஒரு சங்கப்பாடல் கூறுகின்றது.

இந்த உள்ளுறை உவமம் மிக அழகானது.

இப்பறவையின் சிவந்த அலகைச் செம்முல்லை அரும்புக்கு ஒப்பிட்டு நற்றிணைப் பாடலொன்று கூறுகிறது.

''சிரல்வாய் உற்ற தளவிற் பரலவற்
கான்கெழு நாடற் படர்ந் தோர்க்கு''

(நற்றிணை 61)

மீன்கொத்தி நீர்நிலைகளில் மூழ்கி எழும் செய்தியைப் பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று அழகாக வருணிக்கிறது.

'மின்றேர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்''

(பதிற்றுப்பத்து 5.42)

(கயத்திலே மூழ்கிச் சிரல் எழுகின்ற காலத்து அதன் வாயலகை ஒக்கப் புண்களை இழை கொள்கின்ற காலத்து அப்புண்களின் உதிரத்திலே மறைந்தெழும் ஊசி) உதிரம் பூசிய ஊசி போன்றது இதன் அலகு என்று இப்பாடல் கூறுகின்றது.

அக்காலத்தில் ஊசியால் புண்களைத் தைத்துக் குணமாக்கும் வழக்கம் இருந்ததையும் இதிலிருந்து உணருகிறோம்.

மற்றொரு அகநானூற்றுப் பாடல் இதன் சிறகையும் நிறத்தையும் வருணிக்கும்.

''வளிசினை உதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிறற்சிறகு ஏய்ப்ப வறற்கண் வரித்த
வண்டுஉண் நறவீ துமித்த நேமி''

(அகம் 324)

சிதறிக்கிடந்த காயாவின் நீலமலர் சிரலின் நீலச் சிறகேய்ப்ப இருந்தது என்று இப்பாடல் கூறும்.

பச்சை நிறக் கள்ளியின் தலை, சிச்சிலி போன்று தோன்றுவதாக மற்றொரு அகப்பாடல் கூறும்.

பச்சைக் கள்ளிச் செடியின் நுனியில் சிவந்த நீண்ட அரும்பு தோன்றுவதைக் கண்டிருக்கலாம். அந்தச் சிவந்த அரும்போடு தோன்றும் திருகு கள்ளியின் தலையைச் சிவந்த அலகும் நீலஉடலும் உடைய சிரலோடு ஒப்பிட்டது பொருத்தமானது.

சேய்மையிலிருந்து காணும்போது இந்த உவமையின் பொருத்தம் புலப்படும்.

''பரல்தலை போகிய சிரல்தலைக் கள்ளி''

என்ற இப்பாடல் வரி உவமையைக் கூறுகின்றது. சிவப்பு அலகையும் நீலச்சிறகையும் புலவர்கள் வருணித்ததிலிருந்து இது நீல மீன்கொத்தி என்று கொள்ளலாகும்.

கருப்பு அலகையுடைய கருப்பும் வெண்மையும் கலந்த மீன்கொத்தி,பழைய நூல்களில் கூறப்பட வில்லை என்று தெரிகிறது.

சிரல் என்று சங்க நூல்களிலும் பழைய நூல்களிலும் மீன்கொத்தியை அழைத்து வந்தனர்.

உரையாசிரியர்கள் சிரல் என்றால் சிச்சிலிப் பறவை என்று பொருள் கூறியுள்ளனர்.

இந்தச் சிச்சிலி என்ற பிற்காலப் பெயர் மீன் கொத்தியின் ஒரு முறையான தனிப்பட்ட குரலின் காரணமாக வந்திருக்கலாம். இதற்குச் சான்றுகள் உள்ளன.

தனிப்பட்ட சில இயற்கை ஓசைகளைக் கூறும் ஒரு பாடலில் மீன்கொத்தியின் குரலோசை கூறப் பட்டுள்ளது.

"சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தாம்
உச்சிமலை நீர் விழுக்கா டொண்பருந்து – பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் செங்கா னிழற்பறவை
ஏயுங்கால் ஓசை யியல்பு."

இப்பாடல் பெருங்கதையில் வருகின்றது.

சிச்சிலியின் ஓசை முதலில் கூறப்பட்டிருக்கிறது.

இதன் குரலை உற்றுக் கேட்டவர்க்குச் 'சிச்சிலி' என்ற சொல்லோசைக்கும் குரலோசைக்கும் தொடர்பு இருக்கும் என்ற எண்ணம் உண்டாகாமற் போகாது. ஆதலின் காக்கை என்ற பெயர்போல் ஒலிக்குறிப்பால் 'சிச்சிலி' என்ற பெயர் உண்டாயிற்று என்று கருதுவது பிழையானதன்று.

பெருங்கதையில் சிச்சிலிக்குப் பொருள் தித்திரி என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் 'தித்திரி' என்ற பெயரும் குரலோசை காரணமாக வந்திருக்க வேண்டும் என்பதை எளிதில் உணரலாம்.

நீர்நிலைகளில் மீன்களைப் பிடித்து வாழும் வெண்மையும் கருமையுமான ஒரு பறவையை (Tern) வட நாட்டில் 'தித்ரி' என்று அழைக்கின்றனர். தமிழில் அப்பறவையைச் 'சிறகி' என்று அழைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது வாத்துப் போன்ற வடிவும் அலகும் அமைந்தது; கூட்டமாகப் பறந்து சென்று நெல் வயல்களில் துடுமென விழுந்து நெற் கதிர்களைத் தின்று விளைபுலத்தை அழிக்கும் தகையது. நீரில் நன்றாக நீந்திச் செல்லும். ஆனால் இது மீன் கொத்தியன்று.வட நாட்டில் இப்பறவைக்கு 'தித்ரி' என்று பெயர் வந்தது. அதன் குரலோசை காரணமாக என்று சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

இப்பறவையின் குரலோசையும் தனித்த வகையானது. ஆதலின் இவ்விரு பறவைகளின் குரலோசையின் தனித்தன்மை, வாழும் இயல்பு ஆகியவைகள் நோக்கி வடநாட்டில் வழங்கும் பெயரைத் தவறாக மீன்கொத்திக்குத் தமிழ்நாட்டில் வழங்கியிருக்கலாம்; அல்லது தமிழிலும் சிச்சிலி போன்று 'தித்திரி' என்ற பெயரும் ஓசை காரணமாக எழுந்திருக்கலாம்.

'சிரல்' 'சிறகி' என்கிற இரு சொற்களுக்குமுள்ள சொல்லோசை ஒற்றுமையும் கவனிக்க வேண்டிய தொன்று.

தென்னார்க்காட்டில் நாட்டுப்புற மக்கள் மீன் கொத்தியை இன்றும் 'பொன்னாந்தட்டான்' என்று அழைக்கின்றனர்.

பேச்சு வழக்கில் தவழும் இச்சொல் மிகவும் அழகுடைய சொல். இது இலக்கியத்திலும் பயிலுகிறது.

இச்சொல் ஆழ்ந்த அழகிய பொருளுடையது. தற்காலம் படித்தோரிடைப் பயிலும் பெயரான 'மீன்கொத்தி' மிகப் பிற்காலத்தது.

இது ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்போ என்று ஐயுறும்படி அமைந்துள்ளது. கருத்தாழமும் அழகும், இலக்கியப் பழமையும் கொண்ட சொற்கள் நாட்டுப்புறத்தார் நாவில் நடமாடுகின்றன என்பதற்கு இப்பெயரும் ஒரு சான்றாகும்.

பெருங்கதையில் 'நாடு பாயிற்று' 69ஆம் வரியில் மீன்கொத்தி 'பொலம்புள்' என்று அழைக்கப் படுகிறது.

இதற்கு உரை 'பொன்வாய்ப் புள்', 'சிச்சிலி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பொலம்புள், பொன்வாய்ப் புள்ளே பொன்னாந் தட்டானாகியது என்பதில் ஐயத்திற் கிடமில்லை.

பொன்போன்று சிவந்த வாயுடைய இப்பறவை நீர்நிலைகளின்மேல் சுற்றிச்சுற்றிப் பறந்து துடுமெனப் பாய்ந்து இரையைக் கௌவி மேல் எழும் தன்மை உடையது.

அது போலவே நீர்நிலைகளின் மேல் வட்டமாகச் சுற்றிச் சுற்றி வந்து சடுதியில் பாய்ந்து பூச்சிகளைப்

பிடித்து எழும் ஒரு பூச்சியைத் 'தட்டான் பூச்சி' என்று அழைக்கின்றனர்.

இத்தட்டான் பூச்சி நீர்நிலைகளின் ஓரக் கரைகளில் வாழ்ந்து வரும் சுற்றிச் சுற்றிப் பறந்து சிறு பூச்சிகளைத் தின்று வாழும் தன்மையோடு மீன்கொத்தியின் தன்மையை ஒப்பிடலாம். அதனால்தான் 'பொன்னாந் தட்டான்' என்று 'தட்டான்' பெயரைச் சேர்த்து வழங்கினர், நாட்டுப்புற மக்கள்.

'கிணற்றிலிருந்து எழும் தட்டான் பூச்சி' (Dragon Fly) என்று டென்னிசன் தன் கவிதையொன்றில் பாடியபோது, டென்னிசனின் நுண்மாணுழைபுலத்தை வியந்தனர் சிலர். அதே நுண்ணறிவைப் 'பொன்னாந் தட்டான்' என்ற பெயரிலும் காணலாம்.

சுற்றிச் சுற்றிப் பறக்கும் தட்டான் பூச்சியைத் 'தட்டான்' என்று அப்படிப் பறக்கும் காரணத்தால் அழைத்தனர். இதைத் தவறாகத் தற்காலத்தில் சில இடங்களில் 'தும்பி' என்கின்றனர்.

'தும்பி'பண்டை நூல்களில் தேனீயைக் குறித்து வந்தது.

சிறு பிள்ளைகள் நின்று கொண்டு கைகளை விரித்துப் பம்பரம்போல் சுழலும் விளையாட்டைத் 'தட்டான் சுற்றுதல்' என்று கூறுகின்றனர். வட்டமாகச் சுற்றுதலால் 'தட்டான் சுற்றல்' என்று வழங்கியது. சுற்றிச் சுற்றிப் பறக்கும் அதே காரணத்தால் தட்டான்

பூச்சியும் மீன்கொத்தியும் 'தட்டான்' , 'பொன்னாந் தட்டான்' என முறையே அழைக்கப்பட்டன.

எவ்வளவு நயமும் ஆழமும் உடைய சொல் இப்பொன்னாந்தட்டான் என்பது இதிலிருந்து விளங்குகிறது. தமிழிலேயே இவ்வளவு பொருளுடன் இத்தனை பெயர் தாங்கி வழங்கிய பறவை 'மீன் கொத்தி'யைத் தவிர வேறென்ன இருக்கிறது?

★

6

குறும்பு

குறும்பு என்ற சொல் பொருட்செறிவும் நயமும் உடையது. குறும்பு என்பது சிற்றரண், முல்லை, பாலை நிலத்தூர், குறுநில மன்னர் ஆகிய பல பொருள்கொண்டு பழந்தமிழிலக்கியத்தில் பயிலு கின்றது. தற்பொழுது பேச்சு வழக்கில் 'விஷமம்' என்று சிலர் கூறும் சொல்லின் பொருள் கொண்டு வழங்குகிறது.

அரம்பு என்பதும் குறும்பு எனும் பொருளுடையது. அரட்டன் என்பது குறும்பன் எனும் பொருள் கொண்டு நூல்களில் வருகிறது.

'அரட்டமுக்கி' என்ற சொல் குறும்பர்களை அடக்குபவன் எனும் பொருளில் வழங்குகிறது. 'அரட்டை அடித்தல்' எனும் பேச்சு வழக்கும் குறும்பு பண்ணல், கேலிசெய்தல் என்ற பொருளில் வழங்குகிறது.

கலகம் செய்யும் குறுநில மன்னர்களைக் குறும்பு என்று பழந்தமிழ் நூல்கள் கூறும். மாலையைக் குறும்பு என்று உருவகப்படுத்திச் சிலப்பதிகாரம் கூறும். இந்த உருவகம் மிகவும் அழகு வாய்ந்தது; நயம் பொருந்தியது; பொருட் செறிவுடையது.

"விரிகதிர் பரப்பி உலகுமுழு தாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்குந்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லென
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரைசுகெடுத் தலம்வரும் அல்லற் காலை
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொடு ஒருதிறம் பற்றி
வலம்படு தானை மன்னர் இல்வழிப்
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்
....
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென
இளைய ராயினும் பகையரசு கடியுஞ்
செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டி."

மேற்காட்டிய உருவகத்தைக் காவிய உருவகம் (Epicmetaphor) என்று சொல்லவேண்டும்.

இந்த உருவகம் பல வரிகளில் விளக்கமாகச் செல்கின்றது. கதிரவனை அரசனாக உருவகப்படுத்தி யிருக்கிறார். நிலவை அவ்வரசனின் செல்வனாக உருவகித்திருக்கிறார்.

கதிரவன் மறைந்து திங்கள் தோன்றுவதற்கு இடையுள்ள மாலைக்காலம், அரசன் இறந்துபட மகன் அரசு கட்டில் ஏறுவதற்கு இடைப்பட்ட காலத்தில்

குறுமன்னர்கள் கலகம் செய்வர். அக்காலத்திற்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது.

கதிரவனின் வலிமையையும் சிறப்பையும் நோக்க, அரசனாக உருவகித்தது பொருத்தமே. நிலவின் தண்மையையும், மென்மையயும், வளரும் குணத்தையும் நோக்க, நிலவை மகனாகக் கூறியதும் பொருத்தமே.

கதிரவனிடம் திங்கள் ஒளி பெருவது ஒப்புமையைக் கொள்ளலாம். குழவித் திங்கள் என்று நிலவுக்கு இளமை கூறுவதும் 'ஒரு தனித்திகிரி உரவோன்' என்று கதிரவனுக்கு வலிமை கூறுவதும் பண்டைநூல்களின் மரபு.

மகன் இளையானாயிருக்க, வேந்தன் இறந்து பட்டால் குறுநில மன்னர்கள் கலகம் செய்வது தமிழிலக்கியமும் வரலாறும் காட்டும் உண்மை. இந்தக் கலக இடைக்காலம் குழப்பமயமானது; குறுகியது; மக்களை மயக்குவது. ஆதலின், இவ்விடைக் காலம் மாலைக்காலத்திற்குப் பொருத்தமாகக் கூறப்பட்டது.

மாலைக் காலத்தில் ஒளி மங்குகிறது; பனி பெய் கின்றது; இயற்கையே மயக்கத்திலாழ்கின்றது; இம் மாலை அந்தியின் ஒளி தெளிவின்றி மயங்கிக் கிடப்பது இயற்கை நிகழ்ச்சி. உலகம் இம்முறையில் மயங்கிக் கிடப்பதை அழகாக இளங்கோ வருணித்து உள்ளார்.

ஒருதனிக் கதிரவன் மறைய, நிலவு தோன்றுமுன் வான முகட்டில் உடுக்கள் பல தோன்றுகின்றன. இவ்வுடுக்களைக் குறுநில மன்னர்களுக்கு ஒப்புக் கூறலாம்.

மனிதனின் விழிப்பிற்கும் உறக்கத்திற்கும் இடையுள்ள காலம் மாலை. தலைவி தலைவனை எதிர்பார்த்து இருக்கும் வேளை மாலையே. மனிதனும் அயர்வு நீங்க மாலைப் பொழுதையும் வீட்டையும் வரவேற்கிறான்.

ஆடு மாடுகள் புட்டி தொட்டி நாடுவதும், பறவைகள் கூட்டைத் தேடுவதும் இம்மாலைக் காலத்திலேயே. உயிர்கள் எல்லாம் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கும் காலம் மாலை.

மயங்கிக் கிடப்பது மாலையின் இயற்கை; அதுபோல் மக்களும் கலக இடைக்காலத்தில் மன்னனின் மகனை எதிர்பார்த்து மயங்கி நிற்கின்றார்கள்; ஆதலின் மாலையைக் குறும்பென்றது பொருத்தம்.

மனிதனின் உள்ளத்தில் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் குழப்பத்தை உள்நாட்டுக் கலகத்திற்கு ஒப்பிட்டு மாக்பெத்திலும் ஜூலியஸ் சீசரிலும் செகப்பிரியர், கூறியுள்ளார். இந்த உவமை சிலப்பதிகார உருவகத்தோடு ஒத்து வருவது அழகாக உள்ளது.

ஆளும் அரசனை ஒழித்து அரசுபெற மாக்பெத் ஆசைப்படுகிறான். அந்தப் பேராசைக்கும் மனச்

சான்று, பகுத்தறிவுக்குமிடையே போராட்டம் நடக்கிறது. இந்தப் போராட்டம் நடக்கும் குழப்பமய மனநிலையை, இடைக்காலத்தை, வெளியில் நடக்கும் உள்நாட்டுக் கலகத்திற்கு ஒப்பிட்டிருக் கிறார். மாக்பெத்தைத் தமிழ் மரபுப்படி குறும்பெனக் கூறலாம். இதுபோல், புரூட்டஸ் மனத்திலும் ஒரே குழப்பம். அறிவு நிறைந்த சான்றோரான புரூட்டஸ் ஆராய்ந்து பார்க்கிறான். புற உலகத்தைப் போன்று, அகத்திலும் ஓர் உலகம் இருப்பதைக் காண்கின்றான்.

"Between the acting of a dreadful thing
And the first motion, all the interim is
Like a phantasma, or a hideous dream
The Genius and the mortal instruments
Are then in Council; and the state of man
Like to a little kingdom, suffers then
The nature of an insurrection.

Julius ceasar II.1.62-69

'மனிதனே ஒரு சிறு உலகம்.
தொடங்குவதற்கும் செய்தவற்குமிடையே உள்ள காலம்
கெட்ட கனவுபோல,
மங்கிய மயக்கத்தோற்றம்போல இருக்கிறது'

என்று புரூட்டஸ் சொல்கிறான். மற்றும் உள்ளத்தில் நிகழும் குழப்பத்தை, வெளிஉலக உள்நாட்டுக் குழப்பத்திற்கு ஒப்பிடுகிறான்; இப்படிக் குழப்பத்தில் வாழ்ந்த மனிதனின்நிலை, உள்நாட்டுக் கலகத்தால் அலைக்கழிக்கப்படும் சிறுநாடுபோல் இருக்கின்றது என்று சொல்கிறான்.

உள்ளத்தில் நிகழும் குழப்பமான இடைக் காலத்தை, வெளியுலக அரசியல் குழப்பத்திற்கு ஒப்பிட்டதுபோல, இளங்கோவும் இயற்கையில் காணும் மயக்கஇடைக்கால்மான மாலையை, அரசியல் குழப்பத்திற்கு ஒப்பிடுகின்றார்.

இந்த ஒப்புமைகளி லெல்லாம் அடிப்படைத் தன்மை கலக்கம், குழப்பம், மயக்கமே.

இதன் பொருட்செறிவையும் நயத்தையும் உணர்ந்தே கலித்தொகை, பெருங்கதை, சிந்தாமணி மற்றும் பிறநூல்களும் இதைக் கையாள்கின்றன.

''ஆனது கலுழ்கொண்ட உலகத்து மற்றவன்
ஏனையான் அளிப்பான்போல் இகலிருள் மதிசீப்பக்
குடைநீழ லாண்டாற்கும் ஆளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல் இறுத்தந்த மருண்மாலை''

(கலி, நெய்தல் : 118)

''நிறைகடல் மண்டில் நேமி யுருட்டிய
இறைகெழு பெருவிறல் எஞ்சிய பின்றைக்
கல்கண் ணரிந்த கைய ராகி
இடந்தொறும் பல்கிய மன்னர்போல
வரம்பில் பன்மீன் வயின்வயின் விளங்கிப்
பரந்துமீ தரும்பிய பகலை வானத்துத்
தலைத்தேர்த் தானைக்குத் தலைவனாகி
முலைப்பாற் காலத்து முடிமுறை யெய்திக்
குடைவீற் றிருந்த குழவி போலப்
....
செங்கோட் டிரும்பிறை செக்கர் தோன்றி''

(பெருங்கதை; மலைபுலம்பல் : 45–58)

"உரைசெய் திகிரி தனையு ருட்டி ஒருகோ லோச்சி உலகாண்ட
அரசன் ஒதுங்கத் தலையெடுத்த குறும்பு போன்றது அரக்காம்பல்"

சிந்தாமணியில்,

"ஆறிரு மதியினெய்தி யாட்டனை யடர்த்து மற்றுன்"
(1221)

என்னும் வரிகளிலும் நிலாப் போல் எழுந்து குறும்பர்களை அடக்கினான் என்று சொல்வது இந்த ஒப்புமையின் சுருக்கமேயன்றி வேறல்ல.

குறும்பு உருவக உவமையாகப் பயின்றுவரும் நயத்தையும் பொருட் செறிவையும் பார்த்தோம். இனி, இச்சொல் வரலாற்றில் எப்படி முக்கியமானது என்று பார்க்கவேண்டும்.

தமிழ்நாட்டில் பழங்காலத்தில் இருவகையில் அரசர்கள் தோன்றினார்கள் என்பதைத் தமிழிலக்கியத் திலிருந்து உய்த்துணரலாம்.

குறிஞ்சியில் மலைகளிலும் காடுகளிலும் தேன், கிழங்கு முதலிய இயற்கை உணவுகளை உண்டுவந்த மனிதன், முல்லைநிலத்தில் இறங்கி ஆடுமாடுகளை மேய்க்கலானான்; ஆடுமாடுகளை மேய்த்து வாழ்ந்தபோது அவர்களிடையே தோன்றிய தலைவன் அரசனானான்.

முல்லையிலிருந்து ஆற்றோரங்களில் குடியேறிய மனிதன் பயிர்செய்து வரலானான்; நகரங்கள்

தோன்றின. அங்கும் அரசன் தோன்றினான். அவனே தண்புனல் உலகத்து 'வேந்தன்' ஆவான்.

ஆடுமாடுகளை மேய்த்த நாகரிக காலத்தில் (Pastoral civilization) மனிதன் தோன்றியதற்குப் பல நாட்டு வரலாற்றிலும், நமது இலக்கியத்திலும் சான்றுகள் உண்டு.

ஆற்றோர நாகரிகத்தில் (Riverside civilization) தோன்றியவர்களே மூவேந்தர்கள். இந்தச் சேர, சோழ, பாண்டியர்கள் ஆடுமாடுகளை மேய்த்தவர்களிடையே தோன்றிய அரசர்களை வென்று, அவர்களைக் குறுநில மன்னர்களாக்கினார்கள்.

ஆனால் இக்குறுநில மன்னர்கள் வாய்த்தபோ தெல்லாம் கலகம் செய்துவந்தார்கள். சிறப்பாகப் பேரரசன் இறந்துபட, மகன் சிறியனாயிருப்பின் இக்குறுநில மன்னர்கள் இந்த இடைக்காலத்தில் தலையெடுத்துக் கலகம் செய்தனர். இக்குறுநில மன்னர்கள் 'குறும்பு'என்று அழைக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரசர்களுக்கு முன்னமே முல்லை நாகரிகத்தில் தோன்றிய அரசரிகளின் வழி வந்தவர்கள். இவர்களுக்குக் 'குறும்பு' என்ற பெயர் பின்னர் இடப்பட்டது.

முல்லையில் மன்னன் முதலில் தோன்றினான் என்பதற்குக் 'கோன்' என்ற சொல் ஒரு சான்று. கோக்களை மேய்த்த மக்களின் தலைவன் கோன். மாடு மேய்த்தவனின் கோலே பின்னர் செங்கோல் ஆகியது.

இந்த முல்லை நாகரிகத்தில் தோன்றிய அரசனின் பெயரான 'கோன்' பிற பேரரசர்களுக்கும் பெயராயிற்று.

குறும்பு முல்லைக்குப் பெயராய் இருந்திருக்க வேண்டும்.

குறும்பும் அரம்பும் ஒரே பொருளுடையன.

குறும்பு என்ற சொல்லிற்குச் சிற்றரண் என்று பொருள் உண்டு. குறுநில மன்னர்கள் அரண்கள் கட்டி வாழ்ந்தனர் என்பது இதிலிருந்து தெரிகிறது.

'குறும்பாடு' என்றொரு ஆடும் உளது.

ஆனால் 'குறும்பு' என்னும் சொல் தோன்றிய முறையை அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை.

இந்தக் குறும்புமன்னர் அடிக்கடி இடைக் காலத்தில் இடையூறு செய்துவந்ததால், இவர்கள் மாலையோடு ஒப்புமைக் காட்டப்பட்டனர்.

குறும்பர் என்று ஒரு சாதியார் உளர். அவர்கள் குறும்பாடுகளின் அடர்ந்த மயிரிலிருந்து கம்பளி நெய்கிறார்கள். இவர்கள் மிகப் பழங்காலக்குடிகள் என்று தெரியவருகிறது.

முல்லை நிலத்தாரில் 'கோனார்' என்றொரு சாதியாரும் உளர். 'கோ' மேய்த்தவர் கோனார் ஆயினர். அடுத்து இடையர் என்கிற சாதியினரும் தற்பொழுது உள்ளனர். குறும்பர், கோனார், இடையர் ஆகிய மூன்று சாதியினரும் ஒரு காலத்தில் முல்லையில் வாழ்ந்த ஓர் இனத்தவரே.

இடையர் என்ற பெயர் எப்படி வந்தது என்பது ஐயமின்றித் தெளிவாகவில்லை. குறிஞ்சிக்கும், மருதத்துக்கும் இடையிலுள்ள நிலத்தவர் என்று பொருளுடையதாயிருக்கலாம். அல்லது இடைக் காலத்தில் எழும்பும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டதால், பிற்காலத்தில் இவர்கள் இடையர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் 'மாலை இடைக்காலம்' போன்றவர் குறும்பு என்ற ஒப்புமைக்கும் 'இடையர்' என்ற சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை மறுக்க முடியாது. இடத்தின் தன்மையால் பெயர் பெற்றவர் என்பதற்குச் சிந்தாமணி வரிகள் சான்றாக உள்ளன.

"நலத்தகு தொறுவி னுள்ளேன்
கோன்குடி யேன், இடையிடத்தேன்"

என்று வரும் வரிகள் 'கோன்குடி' என்றும் 'இடையிடத் தேன்' என்றும் சொல்வதை நோக்குக.

குறும்பர்கள் அரசாண்டதற்குச் செவிவழிச் சான்று உளது. மிகப்பழங்காலத்தில் தொண்டைநாடு குறும்பர் நிலம் என்றழைக்கப்பட்டது. அதில் ஆடு மாடுகள் மேய்த்து வந்தனர் குறும்பர். இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆண்டனர் என்றும், அவர்களை வென்று ஆதொண்டைப் பேரரசன் தொண்டை நாட்டை நிறுவினான் என்றும் செவி வழிச் செய்தி கூறுகிறது.

மற்றும் பழந்தமிழ்ப் பாடல்களில் வரும் தாழியில் கவித்துப் புதைத்தல் என்ற வழக்கம் குறும்பர்களுடைய தனிப்பட்ட வழக்கம் என்று வரலாற்று ஆசிரியர் சிலர் கருதுகிறார்கள்.

குறும்பர்கள் இப்போது தென்னார்க்காடு, வடார்க்காட்டிலும் திருச்சி மாவட்டத்திலும் இருக்கின்றார்கள். குறும்பர்கள் நாடாண்டு வந்ததைப் பதிற்றுப் பத்து பாடல் ஒன்றின் மூலமும் உணரலாம்.

''கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிருடா வைகற்பொழுது நினையூஉ
வான்பயம் வாழ்நர்கழு வுள்தலைமடங்கப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து''

(பதிற்றுப்பத்து :71)

'கழுவுளான் இடையர்க்குத் தலைவனாய் அக்காலத்துக் குறும்பு செய்தானொருவன்'

என்றும்,

'அக்கழுவுள் தலைமடங்குகையாலே,
அவனைவிட்டு வேறு திறையிடாக் குறும்பர்
நாட்டிலே பதி பாழாகச் சென்றனர்'

என்றும் உரை கூறியிருப்பதைக் கவனிக்கவும். திரையிட்டு வாழ்ந்தனர் என்பதிலிருந்து குறும்பர்கள் அரசு செலுத்தினர் என்பது தெரிகிறது. இடையரும் குறும்பரும் ஒருவரே என்பதும் தெரிகிறது.

இக்குறும்பர்களே குறுநில மன்னர் என்பதும், அவர்கள் 'மன்பெருமரபு' பெற்று மூவேந்தருடன் மகட்கொடுத்து வாழும் உரியமையுடையவர என்றும் கருதுவது மிகையல்ல.

இதனால் குறும்பர் மிகப் பழங்காலத்தில் தமிழ்நாட்டில் அரசு செலுத்தினர் என்பதும், முல்லை நாகரிகத்தில் முதன்முதல் மன்னர்கள் தோன்றினர் என்பதும், அவர்கள் பின்னர்க் குறுநில மன்னராய்க் 'குறும்பு' ஆகினர் என்பதும் விளங்குகிறது.

மலையாளத்தில் 'குறும்பா நாடு' எனும் ஒரு தாலுக்கா உள்ளது.

காரைக்காலருகில் குறும்பகரம் என்றொரு ஊர் உள்ளது.

கொங்கு மண்டலத்தின் இருபத்து நான்கு நாடுகளில் குறும்பு என்பதும் ஒன்று.

'கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய்''

என்கின்றது தேவாரம். ஆதலின் குறும்பர் ஒரு காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தனர் என்று கருதலாம். இக்குறும்பரைப் பற்றியும் அவர்கள் வரலாற்றைப் பற்றியும் அரியவேண்டியவை மிக இருக்கின்றன.

முல்லை நிலத்தாராகிய இக்குறும்பர், இடையர், கோனார் ஆகிய சாதியினர் இன்றும் கண்ணனைப் போற்றி வைணவத்தைக் கடைப்பிடித்து

வருகின்றனர். ஆனால் இவர்களுடைய பழைய தெய்வம் எது என்பதும், அத்தெய்வத்தின் வரலாறும் ஆராயவேண்டியதொன்று.

பழந்தமிழர் இயற்கையையே தெய்வமாக வணங்கி வந்தனர்.

ஒவ்வொரு திணைமக்களும் அந்நில இயற்கையைத் தெய்வமாக வழிபட்டு வந்தனர்.

ஆனால் மருதநிலத்தார் தங்களுடைய அரசனையே தெய்வமாகப் போற்றினர் என்று கருதவேண்டி யிருக்கின்றது.

குறிஞ்சியின் செம்மையான அழகுடைய இயற்கைக் காட்சியைச் 'சேயோன்' என்றும் 'முருகன்' என்றும் அழைத்தனர். அதுபோல் முல்லைநில இயற்கையை 'மாயோன்' என்றனர். 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற தொல்காப்பிய வரியில் வரும் 'மாயோன்' இயற்கைத் தெய்வமே.

முல்லைக்குரிய காலம் 'மாலை'. மாலை என்பதன் வேர்ச்செல் 'மா' அல்லது 'மால்' என்றால் மயக்கம் என்று கூறலாம்.

முல்லைக்குரிய காலம் இருளும் ஒளியும மயங்கும் காலம். பனிப்பெய்து வானம் ஒளியற்றுப் பசந்து, மங்கிய ஒளி மண்டிக் கிடக்கும் காலமாகும். உலகமே மங்கிய ஒளியில் மயக்கத்திலாழ்ந்துள்ளது. மால்தரும் காலம் மாலையாயிற்று.

மாலைக்கால மயக்கத்தில் மாய்ந்துள்ள இயற்கையை 'மால்' எனும் தெய்வமாக்கினர்.

மால், மாய் எனும் இரு சொற்களும் ஒரு பொருள் தருவன. அதனடியாக மாயோன், மால் என்ற பெயரில் முல்லைத் தெய்வம் அழைக்கப்பட்டது.

விடியற்காலமான 'உஷாக் காலத்தை 'உமை' எனும் தெய்வமாக்கினர் – வடமொழியாளர். அது போன்றே மாலை இயற்கையைத் தமிழர் தெய்வமாக்கியதில் வியப்பில்லை.

இம்மாயோன் மாலாகி, பின்னர் கண்ணன், விஷ்ணு ஆயினன் என்று கருதவேண்டும்.

ஆரியத்தெய்வமென்று கருதப்படும் கிருஷ்ணன் ஆரியத்தெய்வமன்று; ஆரிய திராவிடக் கலப்பிற்குப் பின் உண்டானது என்று கருதும் வரலாற்று ஆசிரியர்கள் உண்டு. இருக்கு வேதத்தில் கிருஷ்ணன் என்றொரு கடவுள் இல்லாததை அவர்கள் காட்டுகின்றனர்.

சிந்து நாகரிகம், சிவ வழிபாடு ஆரியர்க்கு முற்பட்டது என்பதைப் காட்டியது.

கிருஷ்ண வழிபாடு ஆரியருக்கும் முற்பட்டது அல்லது ஆரிய திராவிடக் கலப்பில் உண்டானது என்று கரு 5 இடமுண்டு. கிருஷ்ணன், மாயோன் ஆயினன் என்பதைவிட மாயோன் பின்னர் கிருஷ்ணனோடு ஒன்றுபடுத்தப்பட்டான் என்று கூறுவதே பொருத்தம்.

ஆடு மாடுகளை மேய்த்து ஆயரிடை வாழ்ந்தான் கிருஷ்ணன் என்ற கதை, முல்லை நிலத்தில் ஆடுமாடு மேய்க்கும் ஆயர்களின் தெய்வமான மாயோனுடைய் கதையாக மாறிய காலம் தெளிவாகத் தெரியவில்லை.

மாயோன் வழிபாட்டின் அடிச்சுவடு மறையவே, மாயோன் கிருஷ்ணனானான்.

'மாயோன் ஓணநாளும்' என்ற மதுரைக் காஞ்சி 591ம் வரியில் -'மாயோன்' விஷ்ணுவான முறை தெரிகிறது.

ஆனால் 'ஓண'விழா மிகப்பழைய தமிழ்விழா. அது இப்போது மலையாளத்தில் மட்டும் உளது. இது வேறெங்கும் நடைபெறாததை நோக்கும்போது, இவ்விழா ஆரியவிழா என்று கருத இடமில்லை. இதில் வரும் 'மாயோன்' முதலில் இயற்கைத் தெய்வத்தைக் குறித்தது என்று கருத இடமுண்டு.

புதுப்புனல் வருவதை விழாவாகக் கொண்டாடினர் மருதநிலத்தார். இப்புதுப்புனல் விழாவே இந்திர விழாவாயிற்று. தண்புனல் உலகத்து வேந்தன் இந்திரன் ஆனதுபோல், இவ்வோணவிழா முல்லை மக்களுடைய விழா என்று கருதவும் இடமுண்டு.

இவ்விழாவில் வணங்கப்பட்ட தெய்வம் 'மாயோன்' என்றும் கருத இடமுண்டு. ''யாயாகிய மாயோளே' என்று குறுந்தொகை வரி கூறும்.

'கருநிறமுடைய மாயோளே' என்று குறுந்தொகை வரி கூறும். கருநிறமுடைய காளியை 'மாயோள்' என்றே பிற்கால நூல்கள் கூறும். 'காடுகிழாள்' என்றும் சில நூல்களில் ஒரு தெய்வம் வருகிறது. இவைகளுக்கு உள்ள உண்மைத்தொடர்பு விளங்கவில்லை.

மாயோள் என்றால் அழகிய, கருமையானவள் என்பதே பழைய பொருள் என்பதும் தெரிகின்றது. ஆதலின் 'மாயோன்' எனும் அழகிய, மங்கலான, மயக்கம் தரும் இருள் சூழ்ந்த இயற்கைத் தெய்வத்தின் பெயர் என்று எழுவதில் மிகையில்லை. இத் தெய்வத்தையே முல்லை மக்கள் வழிபட்டு வந்தனர்.

மாலையை வருணித்து வருகிற பாக்கள் தமிழ் இலக்கியத்தில் எண்ணிலாது இருக்கின்றன. மாலை யொடு புலம்பல், மாலையைப் பழித்தல் என்று பல துறைகளில் மாலைக்காலத்தைப் பற்றிய பாடல்களைப் பாடியிருக்கின்றனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை ஆகிய காவியங்களிலும், பல சங்கப்பாடல்களிலும் இந்தக் கையறு மாலையைப் பற்றிப் புலவர்கள் பாடி உள்ளார்கள்.

ஆதலின் மாலை இயற்கையில் ஆழ்ந்து மகிழ்ந்த தமிழர் அவ்வியற்கையைத் தெய்வமாகக் கொண்டாடினர் என்பதில் மிகையொன்றுமில்லை.

✱